சிவமயம்.

2957

திருச்சிற்றம்பலம்.

# திருப்பாச்சூர்புராணம்.

இஃது

கடம்பத்தூர்

மரிசை குப்புசாமி முதலியார்

சே. வடிவேலு முதலியார்

ஷண்முகமுதலியார்

விருப்பத்தின்

சே. அப்பாசாமி முதலியார் குமாரர்

சே. கந்தசாமிமுதலியாரால்

இயற்றப்பட்டது.

அஷ்டாவதானம்,

பூவை - கலியாணசுந்தரமுதலியாரால்

பார்வையிடப்பட்டு

சென்னை:

ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுயந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1905.

...ATHA IYER LIBRARY
MADRAS-600 090.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# திருப்பாசூர் புராண வசனச் சுருக்கும்.

தொண்டை நாட்டின் கண்ணுள்ள சிவ க்ஷேத்திரம், ௩௨-ல் ஒன்றாகிய திருப்பாசூர் என்னும் திவ்விய க்ஷேத்திரமானது சைவசமய குரவர்களாகிய திருஞானசம்பந்தமூர்த்தி திருநாவுக்கரசு சுவாமிகளாலும், பதிகம் பெற்றதும், சுந்தரமூர்த்தி சுவாமிகளால் ஊர்த்தொகையில் பாடப்பெற்றதுமான, திருப்பாசூர் க்ஷேத்திரத்திற்கு புண்ணியாவர்த்தம் குடசாரண்யம், மாணிக்கபுரி, பிரளயாகலபுரம், மாயாபுரி, தங்காதலிபுரம், அபயபுரம், சோமபுரம், பரஞ்சுடரணபுரம், மங்கலமாபுரம், மால்வினை நாசபுரமென்னும், அனந்தம்பேர்பெற்ற பாசூர்பதியில் எழுந்தருளிய பரஞ்சுடரான சிவபெருமான், மலை மல்லிகையி னடியில் எழுந்தருளினவரும், மணியிட்டு நாகங்களால் பூசித்தும், உகாந்த ஆழியிற் பிறழாது பரசிவத்தின் சூலப்படை முனையிற் சூடும் பூப்போன்றதும், உமையவள் பூசிக்க தங்காதலியாய் பாகம் பெற்றதும், விண்ணவர்கள் அபயமுற்று சிறக்கப் பெற்றதும் சந்திரன் பூசித்து பாபம் நீங்கியதும் நற்றவர்கள் பரஞ்சுடரை தரிசித்து மேன்மை பெற்றதும், அப்பதியில் வந்த கௌசிகர் பூசித்து மங்கலமா முனியானதும், மதுகைடவரைவதைத்த அத்திரீங்க மாயன் பூசித்து திருவெவ்வுளூரில் சிறக்

கப் பெற்றதும், காரணைப்பதியில். ஆயர்தலைவரான அரிய கோன்பத்தினி விமலையிடத்து தெய்வ வருளால் வந்த குணவதியாம் என்றாயினால் பன்னாளில் கொடுத்த பூசைக்குரிய பாலுக்கு முட்டாம் பஞ்சம்போமளவும் பொன்கொடுத்தவரும் பால் நீர்கலப்பினால் கொடுக்கும் பொன்னில் வாசியாய் வட்டம் பிடித்தவரும் பூசிக்கும் முனிவரான கொன்றையடி யீசர் வருந்திய குணவதிக்கு அருள்செய்தவரும் இடபமாய்ப் போந்து. வேட மக்களின் நினைவன பழித்தவரும் நினைக்கு வெளியாய் மூங்கிலில் உதித்தவரும் பூசித்த வேடரை முனிவராய்த் தோன்றச் செய்தவரும் வேடரையெட் கப்பெற்ற காஞ்சிமா நகரிலுள்ள கரிகாற் சோழராலைத் தரிசிக்கப் பெற்றவரும், அரசனால் போகூர் குறும்பனை வென்று காளியை பாசூர்பதியிற் சிறையிட்டவரும், சோழனை கோறற்கு குறும்பனனுப்பிய பாம்பினை ஆட்டிக் கற்று மளவுமுள்ள பூமியை பரிசு பெற்றவரும் கரிகாற் சென்னியால் ஆலயம், மடம், சத்திரம், நகரம், முதலியன புதுப்பித்து வைகாசிமாசம் பூசநாளில் கொடியேற்றி சைவர்களாலும் முனிவர்களாலும் தரிசித்து வணங்க திருவிழா நடாத்தி ஆன்மகோடிகள் கடைத்தேறும்படி எழுந்தருளியிருக்கின்றவருமான உமாமகேசரை பக்தியாற் சென்று மனப் பூர்வமாய் வணங்கப் பெறுவார்களாகில் சிவசாரூபத்தை அடைவார்கள்.


ஷண்முகமுதலியார்.



வாகீஸ்வரர்.



ஸ்ரீ தங்காதலியம்மாள்.



கணபதி துணை.

# திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளால்

## அருளிச்செய்த.

திருப்பாசூர்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

சிந்தையிடையார் தலையின்மிசையார் செஞ்சொல்லார்
வந்துமாலை வைகும்போழ்தென் மனத்துள்ளார்
மைந்தாமணாளா வென்னமகிழ்வா ரூர்போலும்
பைந்தண்மாதவி சோலைசூழ்ந்த பாசூரே. (க)

பேரும்பொழுதும் பெயரும்பொழுதும் பெம்மானென்
றாருந்தனையு மடியாரேத்த வருள்செய்வா
ரூருமரவ முடையார்வாழு மூர்போலும்
பாரின்மிசையார் பாடலோவாப் பாசூரே. (௨)

கையாற்றொழுது தலைசாய்த்துள்ளங் கசிவார்கண்
மெய்யார்குறையுந் துயரந்தீர்க்கும் விகிர்தனார்
நெய்யாடுதலஞ் சுடையார்நிலாவு மூர்போலும்
பைவாய்நாகங் கோடலீனும் பாசூரே. (௩)

பொங்காடரவும் புனலுஞ்சடைமேற் பொலிவெய்தக்
கொங்கார்கொன்றை சூடியெனுள்ளங் குளிர்வித்தார்
தங்காதலியுந் தாமும்வாழுமூர் போலும்
பைங்கான்முல்லை பல்லரும்பீனும் பாசூரே. (௪)

ஆடற்புரியு மைவாயரவொன் றரைச்சாத்துஞ்
சேடச்செல்வர் சிந்தையுளென்றும் பிரியாதார்
வாடற்றலையிற் பலிதேர்கையா ரூர்போலும்
பாடற்குயில்கள் பயில்பூஞ்சோலைப் பாசூரே. (௫)

கானின்றதிரக் கனல்வாய்நாகங் கச்சாகத்
தோலொன் றுடையார் விடையார்தம்மைத் தொழுவார்கண்
மால்கொண்டோட மையறீர்ப்பா ரூர் போலும்
பால்வெண்மதிதோய் மாடஞ்சூழ்ந்த பாசூரே. (௬)

கண்ணினயலே கண்ணொன் றுடையார் கழலுன்னி
எண்ணுந்தனையு மடியாரேத்த வருள்செய்வா

ருன்னின் றுருக வுவகைதருவா ரூர்போலும்
பண்ணின்மொழியார் பாடலோவாப் பாசூரே. (எ)

தேசு குன்றாத்தெண்ணீரிலங்கைக் கோமானைக்
கூசவடர்த்துக் கூர்வாள்கொடுப்பார் தம்மையே
பேசிப்பிதற்றப் பெருமைதருவா ரூர்போலும்
பாசித்தடமும் வயலுஞ்சூழ்ந்த பாசூரே. (அ)

கருவாய்மலர்மே லயனுநாகத் தணையானும்
புகுவாயறியார் புறநின்றோரார் போற்றோவார்
செருவாயுகுபற் றலைசேர்கையா ரூர்போலும்
பகுவாய்நாரை யாரல்வாரும் பாசூரே. (கூ)

தூயவெயினின் றுழல்வார்துவர்தோ யாடையார்
நாவில்வெய்ய சொல்லித்திரிவார் நயமில்லார்
காவல்வேவக் கணையொன்றெய்தா னூர்போலும்
பாவைக்குரவம் மயில்பூஞ்சோலைப் பாசூரே. (க0)

ஞானமுணர்வான் காழிஞான சம்பந்தன்
றேனும் வண்டுமின்னிசைபாடுந் திருப்பாசூர்க்
கானம்முறைவார் கழல்சேர்பாட லிவைவல்லா
ரூனமிலரா யும்பர்வானத் துறைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதி துணை.

# திருநாவுக்கரசு சுவாமிக ளருளிச்செய்த

## திருப்பாசூர் திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

---

முந்திமூவெயி லெய்த முதல்வனார்
சிந்திப்பார்வினை தீர்த்திடுஞ் செல்வனார்
அந்திக்கோன் றனக்கே யருள்செய்தவர்
பந்திச் செஞ்சடைப் பாசூரடிகளே. (௧

மடந்தைபாக மகிழ்ந்த மணாளனார்
தொடர்ந்தவல்வினை போக்கிடுஞ் சோதியார்
கடந்தகாலனைக் கால்கொடு பாய்ந்தவர்
படர்ந்த நாகத்தர் பாசூரடிகளே. (௨

நாறுகொன்றையு நாகமுந் திங்களும்
ஆறுஞ்செஞ்சடை வைத்த வமுதனார்
காறுகண்டத்தர் கையதோர் சூலத்தர்
பாறிரைட் டினர் பாசூரடிகளே. (௩

வெற்றியூருறை வேதிய ராவர்நல்
ஒற்றியேறுகந் தேறு மொருவனார்
நெற்றிக் கண்ணினர் நீளரவந்தனைப்
பற்றி யாட்டுவர் பாசூரடிகளே. (௪

மட்டவிழ்ந்த மலர்நெடுங் கண்ணிபால்
இட்ட வேட்கைய ராகியிருப்பவர்
துட்டரேயறி யேனிவர் சூழ்ச்சிமை
பட்ட நெற்றியர் பாசூரடிகளே. (௫)

பல்லிலோடுகை யேந்திப் பகலெலாம்
எல்லிநின் றிடு பெய்பலி யேற்பவர்
சொல்லிப் போய்ப்புகு மூரறியேன் சொலீர்
பல்குநீற்றினர் பாசூரடிகளே. (௬)

கட்டிவிட்ட சடையர் கபாலியர்
எட்டிநோக்கிவந் தில்புகுந் தவ்வவர்
இட்டமாவறி யேனிவர் செய்வன
பட்ட நெற்றியர் பாசூரடிகளே. (௭)

வேதமோதிவந் தில்புகுந் தாரவர்
காதில்வெண்குழை வைத்த கபாலியர்
நீதியொன்றறி யார்நிறை கொண்டனர்
பாதி வெண்பிறைப் பாசூரடிகளே. (௮)

சாம்பற்பூசுவர் தாழ்சடை கட்டுவர்
ஓம்பன்மூதெருதேறு மொருவனார்
தேம்பல்வெண்மதி சூடுவர் தீயதோர்
பாம்பு மாட்டுவர் பாசூரடிகளே. (௯)

மாலினோடு மறையவன் றானுமாய்
மேலுங்கீழு மளப்பரி தாயவர்

ஆலினீழ லறம்பகர்ந்தார் மிகப்
பால்வெண் ணீற்றினர் பாசூரடிகளே. (க0)

திரியுமூவெயில் செங்கணை யொன்றினால்
எரியவெய்தன ரேனு மிலங்கைக்கோன்
நெரியவூன்றி யிட்டார்விர லொன்றினால்
பரியர் நுண்ணியர் பாசூரடிகளே. (கக)

திருச்சிற்றம்பலம்.



குணவதி. முனிவர்.

உ

கணபதி துணை.

# திருப்பாசூர் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

---

விண்ணாகி நிலனாகி விசும்புமாகி வேலைசூழ் ஞாலத்தார் விரும்புகின்ற, எண்ணாகி யெழுத்தாகி யியல்புமாகி யேழுலகுந் தொழுதேத்திக் காணநின்ற, கண்ணாகி மணியாகிக் காட்சியாகிக் காதலித்தங் கடியார்கள் பரவநின்ற, பண்ணாகியின் னமுதாம் பாசூர்மேய பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்தவாறே. (௧)

வேதமோர் நான்காயா றங்கமாகி விரிக்கின்ற பொருட்கெல்லாம் வித்துமாகிக், கூதலாய்ப் பொழிகின்ற மாரியாகிக் குவலயங்கண் முழுதுமாய்க் கொண்டலாகிக், காதலால் வானவர்கள் போற்றியென்றுங் கடிமலர்கள் வைதூவி யேத்தநின்ற, பாதியோர் மாதினைப் பாசூர்மேய பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்தவாறே. (௨)

தடவரைகளேழுமாய்க் காற்றாய்த்தீயாய்த் தண்விசும்பாய்த் தண்விசும்பி னுச்சியாகிக், கடல்வலயஞ் சூழ்ந்ததொரு ஞாலமாகிக் காண்கின்ற கதிரவனு மதியுமாகிக், குடமுழவச் சரிவழியே யனல்கை யேந்திக் கூத்தாட வல்லகுழகனைப், படவரவொன் றதுவாட்டிப் பாசூர்மேய பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்தவாறே. (௩)

நீரா ருஞ் செஞ்சடைமே லரவங்கொன்றை நிறைமதிய முடன்சூடி நீதியாலே, சீராரு மறையோதி யுலக முய்யச் செழுங்கடலைக் கடைந்தகட னஞ்சமுண்ட, காராருங்கண்டனைக் கச்சிமேய கண்ணுதலைக் கடலொற்றி கருதினனைப், பாரோரும் விண்ணோரும் பரசும்பாசூர்ப் பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்தவாறே. (௪)

ஓடனாய் விசயன்றன் வியப்பைக் காண்பான் விற்பிடித்துக் கொம்புடைய வேனத்தின்பின், கூடினா ருமையவளுங் கோலங்கொள்ளக் கொலைப்பகழியுடன்கோத்துக் கோரப்பூசல், ஆடினார் பெருங்கூத்துக் காளிகாண வருமறையோ டாறங்க மாய்ந்துகொண்டு, பாடினார் நால்வேதம் பாசூர்மேய பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்தவாறே. (௫)

புத்தியினாற் சிலந்தியுந்தன் வாயினூலாற் பொதுப் பந்தலது இழைத்துச் சருகான் மேய்ந்த, சித்தினை லரசாண்டு சிறப்புச்செய்யச் சிவகணத்தும் புகப்பெய்தார் திறலான்மிக்க, வித்தகத்தால் வெள்ளானை வெள்ளர்வன்பு விரவியவாகண்டதற்கு வீடுகாட்டிப், பத்தர்களுக் கின்னமுதாம் பாசூர்மே பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்தவாறே. (௬)

இணை யொருவர் தாமல்லா லியாருமில்லா ரிடைமருதோ டேகம்பத் தென்று நீங்கா, மணைவரிய ரியாவர்க்கு மாதிதேவ ரருமந்த நன்மையெலா மடியார்க்கீவர், தணைன் முழுகுபொடியாடுஞ் செக்கர்மேனித் தத்துவனைச் சாங்

வி னளறுதோய்ந்த பணைமுலையாள் பாகனையெம் பாசூர்மே
ய பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்தவாறே. (௭)

அண்டவர்கள் கடல்கடைய வதனுட்டோன்றி யதிர்த்
தெழுந்த வாலாலம் வேலைஞாலம், எண்டிசையுஞ் சூழுகின்ற
வாற்றைக்கண்டு மிமைப்பளவி லுண்டிருண்ட கண்டர்தொ
தொண்டர், வண்டுபடு மதுமலர்கள் தூவிநின்று வானவர்க டா
னவர்கள் வணங்கியேத்தும், பண்டரங்க வேடனையெம் பா
சூர்மேய பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்தவாறே. (௮)

ஞாலத்தை யுண்டதிரு மாலுமற்றை நான்முகனு மறி
யாத நெறியான் கையிற், சூலத்தா லந்தகனைச் சுருளக்கோ
த்துத் தொல்லுலகிற் பல்லுயிரைக் கொல்லுங் கூற்றைக்,
காலத்தா லுதைசெய்து காதல்செய்த வந்தணனைக் கைக்
கொண்ட செவ்வான் வண்ணர், பாலொத்த வெண்ணீற்றர்
பாசூர்மேய பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்தவாறே. (௯)

வேந்தனெடு முடியுடைய வரக்கர்கோமான் மெல்லிய
லாளுமைவெருவ விரைந்திட் டோடிச், சாந்தமென நீரணி
ந்தான் கையிலைவெற்பைத் தடக்கைகளா லெடுத்திடலுந் தா
ளாலூன்றி, யேங்குதிர டிண்டோளுந் தலைகள்பத்து மிறுத்
தவன்றனிசை கேட்டு விரக்கங்கொண்ட, பாந்தளணி சடை
முடி யெம்பாசூர்மேய பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்
தவாறே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருப்பாசூர்ப்புராணம்.

## காப்பு.

நலம்புரியருண்மெய்ஞ்ஞானநண்ணவுமண்ணினின்ற
மலம்புரிவினைகணீங்கிவாழ்வுந்தாழ்வொன்றில்லாப்
புலம்புரிபாசூர்மேயபுனிதனன்றினிதுநல்கும்
வலம்புரிப்பிள்ளையார்பொன்மலரடிவணக்கஞ்செய்வாம். (௧)

## கடவுள்வாழ்த்து.

### நடேசர்.

வேறு.

கார்மன்னுமேனிக்கவின்கண்ணனெண்கண்ணன்மற்றைச்
சீர்மன்னுந்தேவர்மறையாவுந்தெரிசிக்கவொண்ணு
வோர்மன்னுஞ்சோதியருண்மேனிகொண்டென்றுமன்றாட்
பார்மன்னுமாடல்பயில்பாதம்பணிந்துவாழ்வாம். (௨)

### பாசூர்நாதர்.

மருண்மேவுகின்றவினையின்பவமீதிலின்மைத்
தெருண்மேவுமெய்மைத்திகழ்சேர்நெறிசேரலாமிங்
கருண்மேவுபாசூரவ்தன்னுளமார்ந்தவந்தப்
பொருண்மேவுசெய்யப்புயங்கப்பதம்போற்றிசெய்வாம். (௩)

தங்காதலியம்மை.

துன்னுமுற்பவம்பாற்றிடவேண்டிமெய்ச்சுடரைப்
பொன்னினம்பலந்தன்னிடைப்பரிவொடும்போற்றி
மன்னுமாநடங்கண்டிடவணங்கியேவாழு
மன்னைதன்னடிசென்னிவைத்துன்னுமன்பால். (௪)

விநாயகர்.

ஈங்கியம்புமிக்கதைதக்கிடையூறகன்றினிமை
நாங்களெய்தவுமேலதுநடக்கவுநல்க
வோங்குமைங்கரனுலுவாய்மும்மதத்துவாவின்
பாங்குசேர்கழலுன்னிநற்பரிவொடும்பணிவாம். (௫)

சுப்பிரமணியர்.

தீரவிண்ணவர்சேனையினதிபதிசிறந்த
சூரன்மார்பொடுசுடர்க்கிரியெனதடுதுயர
வீரவேலெடுத்தெழிலிளமயின்மேல்வருமிளைய
வீரன்வீரமும்விளம்புதுமுளங்கொடுவியந்தே. (௬)

சமயகுரவர்.

காழிநாடர்தங்கமலமாமலர்ப்பொனின்கழலு
மாழியிற்சிலைத்தூணுடன்மிதந்தவரடியுந்
தோழராயவன்றொண்டனார்சரணமுந்தொண்டின்
வாழும்வாதவூராளிபாதமுமுளம்வைப்பாம். (௭)

மற்றையதிருத்தொண்டர்.

தண்டியாகியசேய்ஞலூர்ப்பிள்ளையார்தலையாந்
தொண்டர்கூட்டங்கள்யாவையுமன்பினற்றொழுது
மண்டலம்புரந்தருளனபாயர்செம்மலர்த்தாள்
பண்டுநாஞ்செய்தபாவங்கள்பற்றறப்பணிவாம். (௮)

கடவுள்வாழ்த்து முற்றிற்று.

# அவையடக்கம்.

பொருப்பரசையான்முன்பெற்றபொங்கெழிற்பூவை துங்க
மருப்பராவுங்குழலிதங்காதலியொடுமொன்னுமீசன்
திருப்பாசூர்கோல்சீர்யானுஞ்செப்புவனென்றனக்கே
சிரிப்பாகுமுலகோர்கேட்கினகைசெயற்றிறம்பலுண்டே. (௧)

வேறு.

நகலுமற்றதுகாணுதுகவில்வனுற்றதுவென்னென்னிற்
பகலவன்கண்ணும்பல்லும்பறித்தவன்பதிகள்பாடி
லகிலகாரணருமாகியரனடியடைவாரொன்று
புகலுவரனைத்துமாய்க்கடுண்ணியராதலானும். (௨)

புத்திரனானபாலர்பொருள்கொளாமழலைப்புன்சொன்
மெத்தியமிதியிற்போற்றித்தந்தைதாய்விரும்பிக்கொள்வ
ரத்தகவதுபோற்பாரிலறிவிலென்சிறுசொற்றனு
மித்தகனீள்புகழாமாந்தர்கிக்கியார்புந்திநல்லோர். (௩)

பாசையம்பதியின்றொல்சீர்பகருவான்விரும்பிநாடிப்
பேசியமார்க்கண்டேயம்பிரமாண்டபுராணமிக்க
தேசுறுமதனைநோக்கியான்றமிழ்ச்செய்யுள்செய்தே
ன்சறுகச்சிஞானப்பிரகாசனருளினாலே. (௪)

எண்ணிலிங்கிதற்குநாமமெழிற்பாசூர்ப்புராணமாகுந்
தண்ணலையமுதம்போலத்தயங்குமற்றதுதானன்று
விண்ணவருண்டபின்னும்விண்ணையேகொடுத்ததீது
மண்ணவர்கேட்கமீளாவான்பதங்கொடுக்குமன்றே. (௫)

அவையடக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-௧௩.

ௐ

# திருப்பாசூர்ப்புராணம்.

## பதிகம்.

முந்திமுதற்புண்ணியங்கள்சுமந்தவாறு முன்னவன்வெட் பாலையின்கீழ்மன்னுமாறும், வந்துமணிமாணிக்கமலர்களிட்டு மாநாகம்பூசித்துவாழுமாறுந், தந்தநெடும்பிரளயத்துந்தாழா தோங்கித்தன்னிணையில்பதியதுதான்றருக்குமாறு, மந்தமு றுசங்காரத்தந்தமில்லாவரன்படையி லோர்மலராயமர்ந்தவா றும். (க)

வண்ணவுமைபூசைசெய்பவமலன்மிக்கமகிழ்வொடுதங்கா தலியாய்வைத்தவாறும், விண்ணவர்களபயமெய்தவபயகல் கிவிரவுபுகழபயபுரமானவாறு, நண்ணிமதிமாபூசைசெய்த வாறுநற்றவர்கள்பரஞ்சுடரைக்கண்டவாறு, மண்ணினெடுந்து திகொண்டுமுனிவரோத்தவள்ளலவர்க்குயர்பெருமை வழங்கு மாறும். (உ)

பதியதிற்செல்கவுசிகன்வேறுருபோர்பெற்றுப்பரிவினிற் பூசனைபுரிவித்துய்ந்தவாறு, மதுகயிடவரைக்கொன்றவினைக டரமாலரனைப்பூசித்துமன்னுமாறு, மெதிரில்சிவன்றன்னை த்தான்பூசைபண்ணியின்பார்க்குள்வாசியறிந் திருந்தவாறும், வெதிர்வனத்திற்றினையழித்துநாதனேங்குவேய்களையப்பூசை கொடுமேவுமாறும். (ங)

சிலவேடர்செய்திகிரிகாவலன்பாற்சென்றிசைப்பவவனங் குச்சேர்ந்தவாறும், வலிமேவிவாழ்குறும்பன்றன்னைச்செற்று மாகாளியைச்சிறையில்வைத்தவாறு,நலிபாம்பொன்றங்கிறை வனூட்டுமாறுநற்சைவாருச்சிக்கநண்ணுமாறு, நிலையாகத்திரு விழாநடந்தவாறுநீடுவிருப்போடிவற்றைநிகழ்த்தலுற்றேன்.()

வேறு.

மன்னுபொருளிணைக்கிவளர்பரஞ்சுடராமெய்ஞ்ஞை
மின்னெழில்விடையாய்த் தூயவேயிடங்கொண்டேயன்பி
லன்னமாகித்தோன்றியமர்ந்துவீற்றிருக்குமுன்னே [ம.
நன்னர்மாதவஞ்செய்தொண்டைநாட்டினிற் சிறிதுசொல்வா

பதிகமுற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - கஎ.

---

## திருநாட்டுச்சிறப்பு.

விளங்கிடவாதியெண்ணெண்விளையாடல்புரியுங்கூடல்
வளம்பதிதன்னின்மிக்கவளர்பதிகீரர்நாடித்
துளங்கொளிக்கயிலைத்தென்பாற்றூயகாளத்தியென்றுங்
குளங்கொடுதுதித்துக்கூறற்குடையபதித்தொண்டைநாடு. (க)

ஆளுமன்னிரங்கலாகவன்றெழுதோலைதன்னி
னீளுறுவரியிலொற்றிமாநகர்நீங்கலென்றே
வாளுறவெழுதவல்லவள்ளலார்திருப்பேர்யாப்பின்
றாளுறவிளங்குமெல்லையுடையபதித்தொண்டைநாடு. (உ)

பான்மைருத்திரர்கள்கோடிபரமனைப்பணிந்துதாள்சேர்
மேன்மையுற்றதிகமாகிவிளங்கிடவுகங்கடோறுங்
கான்மலிகழுக்குன்றத்திற்கடவுளைவணங்கிநாளு
மான்மையிற்புகழ்சமாதிமகிழ்சடாயுவுமந்நாடு. (௩)

திங்கள்சேர்சடையின்மீதுதிருந்தவாங்கிருந்துவாழுங்
கங்கையங்கணாற்குயாருங்காணவேயிடைவிடாம
லங்கணீருறலால்வந்தங்கருச்சிக்குங்கலிகையென்னும்
பங்கமில்புகழ்சேர்துங்கப்பதியுமிங்குடையநாடு. (௪)

பண்டொருவணிகற்கோர்காற்பகர்மொழிதப்பாவாய்மைத்
திண்டிறற்பழையனூரார்செந்தழற்புக்குநாடு
மண்டலைத்துயர்ந்தநீதிமண்டலமாவதோங்குக் [டைநாடு.
தொண்டைமண்டலமென்றுருஞ்சொல்லுமெய்த்தொண்

மதிகொள்காளைக்காலம்மைவடகயிலாயமேவிக்
கதிபலபெற்றுன்கூத்துங்காட்டுவாயென்னவீசன்
பதியுயராலங்காட்டிற்பயினடங்காணென்றேவ
விதமுறுதலையாற்சென்றுங்கெழினடங்கண்டநாடு. (௬)

வையகம்பன்னீராண்டுமழையின்றிக்காட்டாவூரிற்
பொய்யில்கற்புடையாள்கூறிற்பொழிந்திடுமென்னமன்னன்
றுய்யவள்கணவற்கண்டுசொலவவன்சொற்கேட்டம்மான்
பெய்கநுமருளாலென்னப்பெருமழைபெய்யுநாடு. (௭)

ஓசைகொள்முனிவர்கோடியுருத்திரரானதன்றிக்
காசிராசன்றன்கங்கைக்கரைதவத்தகலாதோட
மேசலிற்பிரமதேசத்தெழிற்கன்னிகேசுரத்திற்
பாசிகொள்சுனைதோய்ந்தன்றேபழியகன்றுய்ந்தநாடு. (௮)

தென்றிகழ்குவளையொன்றுசெருத்தணிக்குன்றின்மீதே
மூன்றுபூநாளும்வண்டுமூசுறமூன்றுபோதுந்
தோன்றிடநீருண்மீதுதோன்றிடவதுதான்சூடி
யான்றவேலவனூர்வாழ்வதாநம்பெருந்தொண்டைநாடு. (௯)

தானவரொருவன்முன்பூசித்தாலுந்தருவாயுய்ந்து
போனதுசைவமென்மைபூதிசாதனமேபேணு
மான்விழிக்கன்னிவந்தமரபுடைமறையோர்வல்லந்
தான்முதற்பதிகளோங்குந்தகையதுதொண்டைநாடு. (க௦)

வையகத்துயிர்களெல்லாமாறிலாக்கருணையாலே
வுய்யவாழ்கம்பர்வைத்தவோரிருநாழிகெற்கொண்
டையமங்கரமக்கோட்டத்தறங்களெண்ணான்குபேணு
மையில்சீர்தொண்டைநாட்டுக்கொக்குமோமற்றோர்நாடு. ( )

வேறு.

இணையபல்பெரும்பதியிரட்டிடையென்றுநதியாய்த்
துணிவின்மாதவன்சுராபியென்றிருமுலைசொரிபால்
புனிததீர்த்தமாய்ச்சுனைதிணையருவிபொன்பொலியும்
பணிகொணந்திமால்வனாதரவருவதுபாலி. (கஉ)

துன்னுமவ்வரைசந்தனங்குங்குமந்துதைந்து
மின்னுபொன்மணிமுத்தொடுகடம்பலர்விரவி
மன்னுவேல்கொடுவாரணமஞ்ஞைமேல்வரலாற்
பன்னுமீங்கிவைக்கிழவனும்போலுமப்பாலி. (கங)

கோமளம்பெறவருபுனற்பாலியின்கோல
நாமமேவியபெருமைசேருயர்புகழ்நதிதான்
காமர்கன்னிவாழ்வெவ்வழற்பாலையுங்கடந்து
தேமலர்த்தருமலிதிருமுல்லைமேற்செலுமால். (கச)

ஆயர்பாடியுட்புக்குறப்பாறயிரளைந்து
தோயமாதர்தந்துகில்கொடுகுருந்தின்மேற்சென்று
மேயகன்றெடுத்துயர்விளங்கனிவிழவெறிந்து
பாயலானெடுமாலையும்போலுமீள்பாலி. (கரு)

பொருவிலந்தணவனங்களும்படப்பையும்பொழிலு
மருவுவர்வியுங்குளங்களுமேரியும்வயலும்
பரவியெங்கணுமுலவலான்மிகுபுகழ்ப்பாலி
யரனொருத்தனுமெங்குமாய்நின்றதொப்பாமால். (கசா)

பரவுதண்டகநாட்டினுக்கந்திபகரில்
வரிசைகூர்தரவயன்மகனாகியவசிட்ட
னொருமுதற்பலசினைகளாலொழிவில்பல்வளங்க
டருதிருத்தனைநதியெனத்தருவதுந்தகுமால். (கஎ)

பொன்னுமுத்துநன்மணிகளுமுதலியபொருள்க
ளிந்நிலத்தவர்க்கெங்கணும்பெறவளித்தலினு
லன்னைபோலுநன்னீர்மையிற்பயன்சுரப்பதனாற்
றன்னையேதனக்கொப்பதாமிந்நதிதானே. (கஅ)

விரவலார்மதிகொண்டுதம்பதியினைமேவும்
பொருவிலாவளமன்னவூர்தங்களைப்போல
வரைகள்காடுகளோடுகளுளவளம்வவ்விப்
பரவையானதம்பதிபுகும்பெருமையப்பாலே. (கசு)

குங்குமத்தொடுமான்மதச்சந்தனக்குழம்பு
தங்கள்கொங்கையிற்றழுவியமாதர்கள்சார்ந்த
பொங்குவெண்டிரைப்பாலியிற்குடைதலாற்புணரி
யெங்குமவ்விரைப்பரக்குமற்றளப்பவொவவோ. (௨0)

சீர்கொளுங்கதிதேருநீரிருகரைசேரு
மேரியாவையும்வாரிபோனிறைவுறவேங்கிச்
சாரிருங்கடிமதகுகட்கப்புறஞ்சார்ந்து
வார்பெருங்கடங்காறுறுமாறுபோல்வருமால். (௨க)

மருவுநீர்வயலெங்கணுமோங்கலின்மள்ள
ருரவுநீள்பகட்டேற்றினம்பூட்டியாங்குழுது
விரவுசேற்றிடைநென்முளைவகைவகைவித்திப்
பரவுநாற்றதுபறித்துறமுடிசெய்வோர்பலராம். (௨௨)

ஆயவம்முடித்தொய்யலிற்செய்யினுள்வீழ்த்துத்
தூயவன்புயக்கடைஞர்கள்கடைசியர்துவன்றிச்
சேயமார்பமுங்கொங்கையுஞ்சேதகம்பொதிப்ப
வேயுமிக்கிராற்றெழுதுறநடுவர்நாடெங்கும். (௨௩.)

வீங்குநீர்வயலெங்கணுஞ்செவ்வியின்மிடைவுற்
றோங்குசெந்நெலுட்களைகளைவாண்புகுந்துழவர்
பாங்குடங்கெழுபங்கயப்பொங்கலர்பார்த்துத்
தாங்கள்வீழ்மினார்முகமெனக்களைகளாற்றவிர்வார். (௨௪)

புயலைவென்றதக்கடைசியர்பூங்குழல்பொழில்வாய்க்
குயிலைவென்றதங்கவரொழிற்குழன்மொழிகுளிர்சீர்
மயிலைவென்றதுமற்றவர்சாயனீர்வயல்வாழ்
கயலைவென்றதுமவரிருபனிமலர்க்கண்கள். (௨௫)

மீனிறைந்துளவாவிகளெங்கணுமிளிர்பொன்
னானிறைந்துளபாரிடையெங்கணுந்தருவைப்
தேனிறைந்துளபூவிடையெங்கணுஞ்செழுநீர்
வானிறைந்துளகாவிடையெங்கணுமலிந்தே. (௨௬)

நத்திலங்கெழின்மடையிடையெங்கணுநகுவெண்
முத்திலங்குவரம்பிடையெங்கணுமுளரித்
தொத்திலங்குவகயத்திடையெங்கணுந்தொகுமிக்
கொத்திலங்குவவயலிடையெங்கணுமுயர்நெல். (௨௭)

பனிகொடெங்கின்வீழ்பழமிருல்மாங்கனிபலவின்
கனிகள்வாழையின்கனிசிதைந்தொழுகுதேன்கலந்து
புனிதமேதிகன்றுணப்பொழிபாலுடன்போத
வினிதுசெய்யலானிறைந்ததில்வாளைமேசலெழுமால். (௨௮)

ஐயர்கூத்தாடத்தாளமதுவொத்தவரிகள்பாட
மையகார்முழவமுந்தைஞவணப்புடனுடவாவிச் [ஏத்
செய்யதாமரைகளேக்கச்செழுங்கொன்றைச்செம்பொன்வீ
துய்யபோரசுபோலுந்தொகுபுனன்மருதச்சூழல். (உகூ)

ஆலைபாயோதைமேதியாவிபாயரவம்புட்கள்
சோலைபாயோசைமள்ளர்தொழிற்பலசொல்லின்கம்மை
மாலைபாய்வண்டினேடுவரிச்சுரும்பாற்றுமோலை
வேலைபாயலைக்குமாறாய்மிக்கெழுந்தார்க்குமெங்கும். (ஙo)

திங்களின்பிளவில்லுச்செல்வளைக்குமிழ்செங்தொண்டை
பொங்கெழிலமுதமுல்லைப்புயல்பலபூத்தகோலப்
பங்கயமாதர்கண்டப்பணிலமேற்பயில்வகண்டு
சங்குசெங்கழலமேறித்தங்குவவெங்குமெங்கும். (ஙக)

மாடொளிர்சங்கமீன்றவளரொளிமுத்தையன்னைப்
பேடுதன்முட்டையென்றுபேணியங்கணைக்குமாங்கண்
மூடுசெங்கீன்றமுத்தைவாயசமொளித்ததென்று
கோடரப்பொழின்மீதேறிக்குயிலினங்கூகூவென்னும். (ஙஉ)

நரலையுட்டிரியுஞ்சங்கநதியிடையெதிரேசென்று
பரவிருகரைக்காலாறுய்ப்பழனஞ்சேர்பொழிலுட்போகித்
தருமிலைக்கொடிமீதேறித்தாழைமேற்றங்கப்பேடென்
றருகுவந்தன்னமென்னவதின்பெடையூடுமெங்கண். (ஙங)

உயருடுத்தகையநீண்டதுறுபுடைதெங்கின்காடு
முயன்மதித்தகையநீண்டமுயங்குபூங்கமுகின்காடு
வெயிலைவற்றகையநீண்டமிளிர்கழைக்கரும்பின்காடு
புயலினைத்தகையநீண்டபொன்னிறச்செந்நெற்காடு. (௩௪)

அண்ணருனிலிங்கரூபமாதல்போற்கருக்கொண்டாங்கே
யுண்ணிகழுருவம்போலவொளிர்கதிர்நின்றவேதன்
விண்ணின்மேற்றுவல்போலமேனிமிர்ந்தடிகளுடுங்
கண்ணனேயெனக்கீழ்நோக்கிக்காய்த்தனசாலியெல்லாம்.

மற்றதுவரிந்தகூட்டின்மலையெனவளர்போர்செய்வார்
துற்றபொற்படுத்தநெல்லாற்றுளங்குயர்குன்றுசெய்வா
ருற்றவரெவர்க்குந்தன்பேருதவியேயாறிலொன்று
கொற்றவர்க்கீந்துமிக்ககுன்றுபோற்கூடுசெய்வார். (௩௬)

வரம்புறுவயல்வளங்கள்மருங்குறுபொழில்வளங்க
ளிருந்துவண்புலவளங்கள்செழுந்தொடையினவளங்கள்
விரும்பியகொல்லைநல்குமிகுவளமுதலாயுள்ள
வரும்பெறுவளங்களெல்லாமவரவரினிதுகொண்டு. (௩௭)

தென்புலத்தவரும்போற்றுதேவரும்விருந்துசால
வன்புறுகிளையும்பேணியறங்களும்பிறங்கச்செய்தோங்
கின்புறுசெல்வராகியிலங்கிடுங்குடிகண்மேவிப்
பொன்புடைமாடநீடிப்பொலிந்துளபதிகளெங்கும். (௩௮)

அகினறுந்தூபமிக்காரட்டிலுட்மேங்கன்னன்
மிகவடுவரிகள்வேதவேள்வியினெழுந்தசோதி
புகைநெடுவானினூடுபொழில்வளர்மாட்டுஞ்சூழ்ந்து
முகிலொடுமாறுகொண்டுமொய்ந்நிழற்செய்யாநிற்கும். (௩௯)

பூகாற்றெங்குதாலம்போதியால்பலவுசூதங்
காகதுண்டங்களாரங்கடுநெல்லிவெள்ளில்வில்வம்
வாகைதிந்திருணியத்திமருதுசேரிருப்பைவன்னி
நாகமற்றெண்ணீராறுநண்ணும்பூம்பொழில்களெங்கும். (௪௦)

மல்லிகைசாதிவெட்சிமருவிருவாட்சிமௌவன்
முல்லைசெவ்வந்திநந்திமொய்கரவீரங்கோங்கு
வில்லுவங்கொன்றைநொச்சிவிளங்குபாதிரிபொன்னாக
நல்லசண்பகமிக்கோங்குநந்தனவனங்களெல்லாம். (௪௧)

பங்கயக்குவளைகாவிபயின்மலர்வாவியெங்குஞ்
செங்கயல்கன்னல்செந்நெல்செறிசெழும்பழனமெங்கும்
பொங்கெழிற்சினையில்வண்டுபுனைநனைத்துடவையெங்குஞ்
சங்கொடுபடகம்பேரிதண்ணுமைமுழக்கமெங்கும். (௪௨)

குறவர்கள்குறிச்சியோங்குங்குறிஞ்சிவாழ்முல்லையோங்குந்
தொறுவர்கள்பாடியோங்குஞ்சொல்லருமருதமன்னர்
செறிபதியோங்குநெய்தறிமிலர்பட்டணங்களோங்கு
மறவர்கள்குறும்பதோங்கும்வனசரரோங்கும்பாலை. (௪௩)

பூரணகும்பமெங்கும்புனைமணிக்கலசமெங்கும்
வாரணபவனியெங்குமங்கலவீணையெங்கு
நீரணியோடையெங்குந்நிறைமறைவேள்வியெங்கும்
காரணவரனைப்புன்னுங்கருத்துடையோர்களெங்கும். (சச)

திருநாட்டுச்சிறப்புமுற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-ககஉ.

---

## குடசாரணியச்சருக்கம்.

கூறுமிவ்வளங்கொணாட்டிட்குவலயமுழுதும்போற்ற
நீறுடைக்கடவுணின்றுநேரிலாவரங்கணல்கி [ளின்
வீறுபெற்றென்றும்பொன்று வியன்கொள்கேத்திரமேதென்
மாறிலாப்புகழ்கொண்டோங்குவண்டிருப்புண்யாவத்தம். (க)

ஆதியிற்கற்பந்தோறுமம்பரத்தும்பரியாரு
மாதவஞ்செய்யமென்மேல்வந்தபுண்ணியங்களெல்லாம்
போதுநாட்சிவன்றருள்சூழ்ந்துபொருந்தினவங்கணுத
னேதமில்புண்யாவத்தக்கேத்திரமெனப்பேரெய்தும். (உ)

இத்திருக்கேத்திரத்தினெல்லையினளவுசொல்லின்
மெத்துநீர்பாலிதெற்குமேற்றிசையெல்லைகல்லா
றுத்தரத்திசையினெல்லைருசத்தலையுதக்கீழ்பா
லத்திசைகாற்பாற்கெல்லைபாகவாற்றிடங்கள்சொல்லும். (ங)

பற்பலவுகங்கள் சென்றால்வரவியகாடாய்நாடா
மற்புதப்புண்யாவத்தத்தாங்குயர்க்தோங்குந்தானம்
விற்பயில்*குடாரண்யமென்னவேமனுமென்பார்
பொற்புறநாமிங்கன்பிற்புகழ்திருப்பதியதாமால். (ச)

எப்புவனித்துமிக்கவெழில்பதியதனிலங்கண்
மெய்ப்பரனருள்போனிற்கும்விளைமலர்க்குடசந்தான்வே
றெப்பிலோசனைமேலோங்கியோசனையெல்லைசூழத்
தப்பறத்தழைத்துநிற்குந்தன்மையதுடையதன்றே. (ரு)

ஆயவக்குடசத்தின்கீழமரருமறைகளியாவு
மாயனுமயனுங்காணுவள்ளலைவணங்கிப்போற்றி
யேயசித்திகளுமுத்தியின்பமுமெய்தப்பெற்றுப்
போயவர்க்கவதியில்லைப்புராதனும்புகல்வமிப்பால். (சு)

வேறு.

மன்னுமத்தருநீழலின்மலர்நெடுங்கண்ணி
தன்னொடின்புறுவேட்கையனுகிகந்தலைவன்
றுன்னிவாழுநாளுகம்பலயாவையுந்தொலைந்த
பின்னருற்றதங்குகாந்தமற்றதன்றிறம்பேசில். (எ)

அண்டமேவியவேழுலகேழ்தலமனைத்துங்
கண்டதுண்டங்களாயிடவேகமிக்குயர்ந்த
சண்டவாயுவந்தடித்தவப்போதுமித்தலந்தான்
வண்டுவார்ழ்சடைக்கொன்றையணருளின்மன்னியதே (அ)

*குடசம்-மலைமல்லிகை.

அந்தவாயுவையடியணையிடையுரங்கரங்கள்
சந்தநீள்புயநெற்றிகற்றைச்சடைதன்மேற்
பந்தநாகங்களுண்டுதம்பசியதுமாறி
வெய்தைதாளிலன்றமிழ்ந்தநுமணிமலரெனவே. (௯)

அட்டநாகங்கள்மாணிக்கமழையெனவடிமேல்
விட்டிறைஞ்சியபரிசினுலிப்பதிவிளங்குஞ்
சிட்டர்மாணிக்கபுரியதன்றேத்திடச்சிறந்த
வொட்டியாங்குயர்பிரளயமெழுந்தவாறுரைப்பாம். (௰)

அன்னதன்மையின்மாணிக்கபுரியதுவமர்நாட்
பின்னெழுந்துடையண்டரண்டங்களும்பெயர
மின்னுமேழ்கடல்சூழ்கடல்மாகடல்மென்மேற்
றுன்னியாவையுங்கீழுறமேலுறச்சூழ. (௧௧)

ஆசின்மாணிக்கமழைமொழிபுரியதுவதன்மேற்
றேசுமிக்கதோர்மாணிக்கபுரியெனச்சிறந்த
வீசுதெண்டிரைப்பிரளயமதனிடைமிதப்ப
வேசிலெண்டிசையோர்களுமெய்தியாங்கிருந்தார். (௧௨)

அப்பெருந்தடப்பிரளயமதனின்மீதன்று
தெப்பமென்னவேமிதத்தலாற்றிருவொடுஞ்சிறந்த
விப்பெரும்பதிபிரளயாகலபுரமென்றே
செப்பமன்னியபின்னரங்குற்றதைசெப்பில். (௧௩)

ஆயவட்டுணறன்னிலும்பதின்மடங்காகி
யெய்வதாய்க்காலாக்கினியாங்குடனெழுந்து
தோயுமூன்றுபரண்டபிண்டமெலாஞ்சுடலும்
பேயொடாடினநாயகனவ்விடம்பேணி. (க௪)

யாவும்வெந்திடவப்பொடிசாந்தமாவிறைவன்
மேவமெய்க்கணிந்தாடுமுன்னவனயில்விளங்கு
மூவிலைச்சுடர்க்கொண்டதோர்நடுவிலைமுடியிற்
பூவதென்னவேயுற்றதிப்பதியெனப்புகல்வார். (க௫)

மாதொர்பாகர்சங்காரத்துஞ்சூக்குமமாகி
யேதிலிப்பதியிருப்பமாயாபுரியெனவே
யோதுவாரறிவாலுயருண்மையையுணர்ந்தோ
ராதலானிகழிப்பதிப்பெருமையாரறிவார். (க௬)

இனையதொல்புகழ்ப்பதியினையாவருமெய்திப்
புனிதனாரடிபோற்றியபின்னருமுன்னிக்
கனிகொடொண்டைவாயுமையெமையாள்பரன்கழல்க
ளினிதுபோற்றியேவழிபடுதிறமுறவிசைப்பாம். (க௭)

குடசாரணியச்சருக்கம்முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-௭௬.

## தங்காதலிபுரச்சருக்கம்.

எம்பிரானன்புவைத்தவித்தலம்போலிலென்றே
யம்பிகைதானுஞ்சாலவன்புவைத்தத்தலத்தின்
றம்பிரான்றன்னைப்பூசைதான்செயவேண்டுமென்றாங்
கும்பர்கோன்பாதமேத்தியோதருங்களிப்புநீடி. (௧)

அண்ணறானருளிச்செய்தவாகமநெறிகெடாது
வண்ணமென்மலர்கடேயமஞ்சனமுதற்கொண்டங்கட்
புண்ணியமூர்த்திதன்னைப்புரிதனைக்குடசநீழற்
கண்ணுதலானைத்தன்மெய்க்காதலாற்பூசைசெய்தாள். (௨)

காதலினுமையாள்செய்தகாசறுபூசைகண்டு
வேதநாயகனாயுள்ளவித்தகன்சித்தத்துள்ளே
தீதறுகருணைபொங்கித்திருமணவாளக்கோல
மாதுளமகிழ்ந்துகாணவந்துதன்காதல்வைத்தான். (௩)

ஓதுமம்மாதின்றன்பாலுயர்சிவபெருமானார்தங்
காதல்வைத்ததனாலேதங்காதலியென்றுநாம
மாதுறவிளைவிலத்தேவைத்தனனவடன்பேரா
லாதலிப்பதிப்பேர்தங்காதலிபுரமென்பரன்றே. (௪)

எனதுபேர்பெறுதலாலேயிறைவனேயிந்தத்தானந்
தனையடைந்திடுவோரெங்குந்தணிப்பருஞ்சலனநீங்கி
மனநினைவனைத்துமெய்தவரமருளென்றுகேட்கப்
புநிதனுந்தந்தோமென்றான்புவனியிலெவருமுய்ய. (௫)

ஆனமைகண்டுவேதமாயிரமுகமாய்ப்போற்று
நானிலமிசையெண்பத்துநான்குநூறுயிரம்பல்
யோனிகளுயிருமுய்யவுருகியொன்றாகின்ற
தேனலர்பூவின்மாரிபொழிந்ததுசெழுந்தண்வானம். (கூ)

ஆதியுமெம்மையாண்டவும்மையுமன்புபொங்கி
யோதுமபயபதியிற்பின்பல்லூழிபுக்கிருந்தாரங்கண்
வேதமோடயன்மாற்றேவர்மிகுபயமெய்திவந்து
பாதமதபயம்புக்கபரிசினிப்புகாலுற்றும். (எ)

தங்காதலிபுரச்சருக்கம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-புசு.

---

## அபயபுரச்சருக்கம்.

முன்பொருகாலத்தோங்குமும்மதிளிரும்புவெள்ளி
நன்பொனிற்குயின்றதாருநடுங்கிடத்திரிவசற்று
மன்பிலாவுயிர்கட்கென்றுமாளியிலிலங்குமாண்மை
வன்புயத்தவுணர்தொக்குவாழ்வதுதாழ்வின்றாக. (க)

அம்பரத்தியங்குகின்றவப்புரத்தவுணர்க்காற்று
தும்பர்களென்செய்கேமென்றுன்னியிந்திரற்குச்சொல்லக்
கம்பிதமாயவன்றான்கமலவாசனற்குக்கூற
நம்பயந்தீர்க்கவல்லாரரணனென்றுநாடி. (உ)

ஆங்கவர் தமையுங்கொண்டேவம்புயன் மால்பாற்சென்றங்
கோங்குமுப்புரத்தோர்செய்கை யுணர்த்திட வுட்கொண்டம்
ஙீங்கிவர் தம்மைவெல்வதெமக்கரிதுண் மையென்று [மா
பாங்குடனுரைப்பக்கேட்டுப்பகருவானமரர்கோமான். (ந)

வெல்வதற்கரிதென்னையம்விளம்பினைநின்னால்வெல்லா
வல்லமைக்கவர்கள்பெற்றவரங்களேதென்றுகேட்பச்
சொல்வதற்கெளிதோமாறுச்சூரர்களவர்பேறென்றாங்
கெல்லையில்புகழான்மிக்கவெழிற்றிருமாயன்சொல்வான். (ச)

தாரகனென்னுநாமத்தானவன்மைந்தர்மூவர்
சீரணிவித்துன்மாலிசெறிபுகழ்த்தாரகாக்கன்
கார்நிறக்கமலக்கண்ணன்கமலவாசனனைநோக்கிப்
பாரிடையெண்ணில்காலம்பயிலருந்தவஞ்செய்தார்கள். (ரு)

அத்தவங்கண்டந்நாளிலவர்கண்முன்பிரமன்றோன்றி
யித்தவம்செய்தீருங்கட்கெவ்வரம்வேண்டுமென்னச்
சுத்தவிண்டிரியுமூன்றுசுடர்நகர்வேண்டுமெட்டுச்
சித்தியுமளகைமேவுசெல்வமும்வேண்டுமங்கண். (சு)

எண்ணில்பல்சுனைகாவேரியெழுபடைகுடிசூழ்பார்ப்பார்
நண்ணுபூவனங்கள்வேள்விநிளிர்புனனதிகள்வீதி
வண்ணமாளிகைகள்கீதமறைகளாகமபுராணங்
கண்ணுதற்பூசைமாசில்கலைமதிபூதிவேடம். (எ)

இன்னவைபின்னுமெண்ணிலெய்தியாயிரவாண்டாண்டு
துன்னினுநீங்கிறலுஞ்சேர்வின்றித்துன்னிநீங்கு
மங்கிலேகணத்திலல்லாலழிவுறாவரங்கள்வேண்டு
மென்னப்பங்கயனுமீந்தானிப்பெருவரங்களெய்தி. (அ)

கல்வியாற்றவற்றாற்றம்மைக்கருதலொருவராலுங்
வெல்லொணாத்திறலான்மிக்கமிருதசீவினியென்னும
மோல்லுமீர்ச்சுனைகடாமங்குடையவர்நினைவுபோலே
செல்லொணாத்திசைகள்பத்துஞ்செல்பவராதுவுமன்றி. (கூ)

சிவனடிவழிபட்டேத்துஞ்செம்மையராதலாலே
யெவர்களும்வெல்லொணாதென்றியம்பிமாலவர்களோடுங்
கவலையற்றிடுமாறெண்ணிக்கயிலையிற்சென்றாரங்க
ண்வருமற்றெதிரேசெல்லவஞ்சினர்கண்டுசால. (கo)

உம்பர்கோனயன்மான்முன்னொளித்தகண்ணோடிக்கூடி
யிம்பரினமக்காஞ்சேமமெவ்விடமிருத்தற்கென்று
ரம்பிகைவரமுன்பெற்றவத்தலமதனிற்புக்கி
னம்பயந்தீருமென்றுநாடிமற்றங்கட்சேர்ந்தார். (கக)

சென்றெனையாளவான்றங்காதலிபுரஞ்சேர்ந்துநாதன்
முன்றொழுதிறைஞ்சியேத்திமுத்தனேமுதல்வாவென்று
துன்றியவிருப்பாற்போற்றிச்சுரரொலாமபயமென்ன
வின்றுநீரிங்குவந்ததென்னெனவியம்பலுற்றார். (கஉ)

முப்புரத்தவுணர்தங்கள்மொய்யடற்காற்முதஞ்சி
யப்பணிவேணியாய்கின்னடியிணையடைந்தோமென்ன
விப்புவிகாப்போனுதியேதமிலிமையோர்கேண்மின்
செப்பிடிலெம்மைச்சார்ந்துசெய்வரோபூசையெனின. (கங)

நந்தமைச்சார்ந்தோரந்தநற்புரத்தோர்களென்று
யெந்தையேயெங்கட்கார்சார்பியார்க்குநீயல்லாதுண்டோ
வந்தமில்லவர்கள்துட்டராவதுமறிதியென்ன
முந்தனுமிரங்கிப்பின்னர்மொழிகுவானருளினாலே. (கச)

புரர்பயிறவங்கடன்னிற்பொய்யுமுண்டரிகேணின்னால்
விரதபங்கங்களுடிவெல்வமப்போதிப்போது
சரதமாயித்தானத்திற்சார்ந்திருபயமின்றென்று
திரைவிடமுண்டவெந்தைசெப்பிடயாருங்கேட்டு. (கரு)

நம்பிமுப்புரர்க்கஞ்சாதுநணிவிருப்பெய்திநாதன்
செம்பதம்பணிந்துதேவரியாவருஞ்சேர்ந்துபன்னாட்
டம்பயந்தீர்ந்துமேவுந்தன்மையாலந்நகர்ப்பே
ரம்புவிபுகழ்ந்துபோற்றுமபயமாபுரமென்றுமால். (கசு)

அபயபுரச்சருக்கம்முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-கoஉ.

## மாயாபுரிச்சருக்கம்.

அன்றுமையம்மைபெற்றவுப்பெருவரத்தின்மேன்மை
யின்றுயாங்கைக்கொண்டோமென் றிமையவருமையைத்தா
மன்றல்சேரத்தானத்தின்மகிழ்பரனருளினாலே [பூந்தார்
சென்றுநன்மாயன்மாயஞ்செய்யமுப்புரத்திற்சேர்ந்தான். (க)

புத்தவேடத்தனாகிப்போதியினீழன்மேவி
வித்தையின்மருட்டக்கண்டுவிறன்மகாவவுணர்நந்திப்
பத்திபோய்நீசர்யாரும்பரமனைக்கைவிட்டார்க
ளத்தனுமதனையெல்லாமறிந்தெழுந்தங்கணேக்க. (உ)

அவ்வயினமரரெல்லாமருளினாலறிந்துதேராத்
திவ்வியமறைமாபூட்டித்திருந்தயன்செல்லமல்லல்
வெவ்வலிநாகநாணுமேருவில்லாகமால்கொல்
செவ்வனல்கூர்காற்றீர்க்காஞ்செறிகிறவம்புசேர. (ங)

* கூபத்திற்சென்றிக்கோலங்கொண்டுமுப்புரத்துமூவர்க்
காபத்துவாராவண்ணமருள்புரிந்தரனுமங்கட்
சாபத்தைக்குனியவாங்கிச்சரந்துரத்† ததிகையூரிற்
றூபச்செவ்வெரிவாய்வீழச்சுட்டருள்புரிந்தானன்றே. (ச)

தேவருந்தேவர்கோவுந்திருந்தியவயனுமாலும்
யாவரும்பயங்கணீங்கியிறைஞ்சிவானெய்தப்பெற்றார்
மூவருமெம்மையாண்டமுதல்வன்றன்கோயில்வாயிற்
காவல்கொண்டிருந்தாரீசன்கருணையின்றிறமேநோக்கி. (ரு)

---

*கூபமென்பது திருவிற்கோலமென்னுந்தலத்தினை. †அதிகையென்பது திருவதிகை வீரட்டானமென்னுந்தலத்தினை.

காதலால்வலப்பாலிற்றங்காதலிதன்னை வைத்த
நாதனேசென்றுகாவல்செற்றவனும்போதிங்
கேதுவுண்டித்தானம்போற்கூபத்திலதிகையிற்றுன்
மாதுமைவலத்தேமன்னிவைகுவன்வழக்கதாமால். (சு)

மற்றுமெம்பிரான்பல்வேறுவகைகளாற்புரங்கள்செற்றற்
சற்றலவெழுபானுலுதரமெனச்சாற்றுநூல்கள்
சொற்றிடுமதிலிங்கோர்காற்சுரர்பயங்கெடுத்துக்காவல்
செற்றதுபின்னரங்கட்டிகழ்திறஞ்செப்பலுற்றும். (எ)

மாயாபுரிச்சருக்கம்முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-கo௬,

## சோமபுரச்சருக்கம்.

அரிகிலவுலகத்தடைந்தோர்விஞ்சையாமானம்புயைபாடல்கேட்டளித்த, விரிமலர்த்துளவமாலையுங்கமலவியன்மலர்மாலையுங்கொண்டு, வரவெதிர்கண்டுதூருவமுனிவன்மகிழ்ந்தவைநோக்கமற்றவடான், றரவதுவாங்கியிந்திரற்கீயத்தந்திமேற்போட்டனன்றருக்கி. (க)

ஆங்கதுதன்னைவாங்கியக்கரிதன்னடியின்முன்போட்டுமேன்மிதிப்பப், பாங்குடைமுனிவன்கண்டுளம்பதைத்துப்பரிந்துயான்றந்தமாலைகளை, யீங்கிவன்மதத்தாலிகழ்ந்தனனென்றுங்கெடுத்தவன்றரித்திரமெய்த, வோங்குமூவுலகத்தூறுவளமனைத்துமுவரியிற்புகுகெனவுரைத்தான். (உ)

ஆதலாற்புவனமனைத்துமார்செல்வமானவையாவுமார்கலி
யுட், போதமாதவருந்தேவரும்வருந்தப்புரந்தரனிரந்தரனெடு
நா,ளேதமேயுழன்றுமாலயனுலகத்தெய்திமற்றவர்தமக்கிசை
ப்ப, வேதவேலையினைக்கடைந்திடிலெழுமென்றுன்னியாங்
குரைத்துடனெழுந்து. (௩)

வேறு.

மண்டலனின்முதலீசனையாருமாருமவரவந்துலங்குகடல
வாயிப், பண்டங்கிழந்தபொருள்யாவுமேவுபரிசானலங்கொ
ள்பரிவா, லண்டந்துளங்கநெடுமந்தரத்தையடியோடெடுத்து
*வயினன், றண்டிண்புயத்தின்மிசைவைப்பவந்துசலதிக்குளி
ட்டவளவில். (௪)

மின்னுமைமீதவ்வரைநேர்நிறுத்திவிலகாதுபற்றவரிநாண்
வன்னுகமாகவிடைதத்திநீடுமெதிகம்பமாகநிறுவா
வந்நாளின்வேலையலறக்கடைந்தவளவேயெழுந்தவவைதான்
முன்னுயதவ்வைமலர்மாதுதாரைமொழிசங்கபற்பநிதியே.
பின்னுஞ்சிறந்ததருவைந்துவெண்மைபிறழ்வேழமொன்றுப
துன்னுந்துரங்கமதுவேழுநாலுதுணையின்மருந்துதுளப[சுமை
மின்னுங்கவுத்வமாலீகையென்றுமிளிர்சோதிமேவுமமுத
மன்னுங்குளிர்ந்தமதியுன்னநல்குமணியும்பிறந்ததுறவே. (௫)

அதுகண்டுதேவரனைவோருநேசமதுவாகியோகையதனு,
விதிவின்னமுண்டுபொருளென்றுபின்னுமிகல்கொண்டெழுந்
துகடைகான், முதுகங்கநொந்து†சுகிநெஞ்சுழன்றுமுதிரண்
டழுபுதையக், கொதிகொண்டகாழியதினஞ்செழுந்துகொ
லவெந்துமாலொடெவரும். (௭)

*வயினனென்பது வயினதேயனென்னுங்கருடனை.
†சுகியென்பது கஞ்சுகியாம் பாம்பினை.

மற்றின்றியாவுமுடிகாலமென்றுமனமஞ்சியோடிவடபா
லுற்றெங்தைநீடுகைலாயமேவியும்மையோடிருந்தபடிகண்
டற்றங்கிறைஞ்சியபயம்புகாமுனருளாய்பிரானெயென லுங்
கொற்றங்கொளெங்கிதமனமஞ்சலென்றுகுறை சொன்மினெ
ன்னவறைவார். (அ)

பொங்காரமேவிமுகிமுன்னமுள்ளபொருள்போகவேவுமதனு
றங்கேதமாறியிடவெண்ணிநண்ணுதகவேலையூடுகடைகால்[ற்
வெங்காளகூடமடவந்ததென்ன விடையானிலங்குசடையா
னிங்காருமஞ்சலினியென்னவும்பரினிதங்கணம்பியிடலும்.

தன்கண்சிறந்தவருள்கொண்டுகந்துதருவென்றிகுண்டொ
தரவா, வென்றங்கொர்பூதமதையங்கழைப்பவிருதாள்வண
ங்கவருநஞ், சுன்றன்புலங்கொளுயர்செங்கைதன்னிலுருள
த்திரட்டிவருவா, யின்றென்னவோடியதுகொண்டிமைப்பிலி
றைகைக்கொடுப்பவிறையும். (கo)

அவ்வாலம்வேலைதிசைவைக்கிலெங்குமடுமென்றுகன்னி
யருளா, லிவ்வேலைதன்னினிதுவுண்பதென்றுமினிதுண்டிரு
ண்டகளனு, யிவ்வாறுநின்றவிமையோர்கடேறி யிறைதாள்
வணங்கவிறைதான், வெவ்வேகமாறவமுதுண்மினென்றுவி
டைநல்கியேவிவிடலும். (கக)

மாலோடுதேவரிறைதாள்வணங்கிமகிழ்வோடுசெல்லமதிமா
லாலாலமங்கணெழுமுன்னெழுந்தவவைவானிலேவியசுரர்
மாலாகிமோகியவரங்குறுதபடிசெய்துதேவர்பலர்பாலு
மேலாயதூயவமுதோடியாவும்விதியால்வழங்குமளவில்.

ஆலாலவெம்மையதுதீரவெங்தையமுதாகவுண்டவதனுற்
பாலாழியின்முனெழுமிந்துவந்துபணிமீதுவிசவதனுற்
காலோடுகைகளுடல்கோணிவெய்யகதிர்வேகமாறல்கருதா
மாலாசிலங்கிதனையேவவங்கிவலிசிந்திநொந்துவரலும். (கங)

தடைசெய்யும்வண்ணமதுவொன்றிலாதுதழலுங்குளிர்ந்
ததகவான், மிடலொன்றுமாலொடயனும்பரியாருமிரிகொ
ன்றைவேணிவிமல, னிடைநண்ணிநாதசரணென்றுதுங்கவி
ருசெங்கைதங்களெழில்கூர், முடிகொண்டுசெல்லவிவைபின்
னுமென்னமொழியின்களென்னமொழிவார். (கச)

மதிசீதம்வீசுமதனுலெசாலவலிவாதமேவிமெலிகோ, மிதுதீ
ரநல்குபெருமானெயென்ன விமையாதமுக்க ணுமைகோன்,
விதுசீதமாறமுடிமீதுதன்றன்மிளிர்வேணி யொன்றினுறவே,
முதுநோவுமேவவதின்மேனிதன்னைமுனிவோடுகட்டிவிடலு
ம். (கரு)

பல்கோடியூழியதுகட்டிநொந்துபயமாயடங்கிநயமாய், நல்
காய்பிரானெ யினியென்றுகூற நமையாளுமண்ணனவில்வா
ன், சில்காலையெங்குமிடர்செய்தியன்றுசெறிதோடமன்னதி
துதா,னெல்காதுபோமொநினையென்னவஞ்சியொழிவண்ண
மெண்ணிமொழிவான். (கசு)

என்னுன்முனுருமுறுதுன்புதானுமிமைமிற்களைந்தவவனீ
நின்னுலலாதுவெவராவிஞெயைநினைகாலகற்றவலரோ
மன்னுவிணக்கிவ்விடராறநல்லொர்வழிநல்கியன்புபுரியா
யென்னுவருந்தியிறையோடுகூறவிறையங்கிரங்கிமிகவும்(கஎ)

அருள்கொண்டுசித்தியதினொன்றுநின்றுமகறன்மையங்க
ணருளி, யிருள்கண்டனம்மைவழிபாடுசெய்யவிதுதீருமென்
னுவரிதுவுந், தெருள்கொண்டுகந்துகளியொன்றிநின்றுதிருமு
ன்னிறைஞ்சியடியேன், பொருள்கொண்டுபூசைபுரிதானமே
துபுகலென்னவெங்கைதபுகல்வான். (கஅ)

வேறு.

சென்றவானவரியாவருமத்தலஞ்சேர்ந்து
நின்றவன்புடனொன்றியின்புற்றதுநிலமே
லென்றுமுள்ளதங்கபயமாபுரமதிலெய்தி
நன்றுபூசனைபுரியதுமகிழ்தலநமக்கே. (க௯)

என்னவாங்கருள்செய்தலுஞ்சோமனங்கிறைதாள்
முன்னிறைஞ்சிநின்றப்பதிதன்னிலெம்முதல்வா
வுன்னையான்செயும்பூசைகொண்டருளெனவுரையா
மன்னுமப்பதிக்கிசைவொடச்சோமனும்வந்தான். (உ௦)

வந்தநீடிசையபயமாபுரத்தினைவணங்கிச்
சந்தநீடியதடாகமுன்கண்டதுசார்ந்து
முந்தனெந்தைதாள்சிந்தைகொண்டாங்கதின்மூழ்கி
யந்திவண்ணனைக்கண்டனன்பண்டைநோய்கல. (உக)

கைகளஞ்சலிகூப்பியென்பூசைநின்கருத்துக்
கெய்தவேண்டுமென்றூழ்வெலாம்பொறுத்தெனவிரந்தொண்
பைகொள்பாம்பணைப்பரமனைப்பின்னரும்பணிந்து
துய்யவாகமவிதிவழாவருச்சனைதொடங்கி. (உஉ)

ஏறுதொல்புகழ்சோமனோர்முனிவடிவெய்தி
கூறுமன்றிருவன்பரும்பத்திமெய்குறியா
தாறணிந்தசெஞ்சடையனைமஞ்சனமாட்டி
மாறிலாடைநறசுகந்தநாண்மலரினன்மன்னி. (௨௩)

ஆசில்போனகந்தூபதீபங்கணீராடி
வாசமாரடைக்காய்குடைகவரிசீர்வாழ்த்தோங்
கேசில்கூத்தொடுவாச்சியமென்னுமீரெட்டு
மாசிலாவுபசாரங்கள்விதிமுறைவழங்கி. (௨௪)

இனையவண்ணமேபூசைசெய்திருந்தொர்நாளிறையைப்
பணிகொளின்னமுதாட்டினனாட்டலும்பரமன்
மனமகிழ்ந்துதன்னுருமதிகாணநேர்வந்தங்
கினிமையானதுபூசைகொள்வர்மினியென்றான். (௨௫)

மண்டுகாதலாலருண்மொழிகேட்டுமுன்வணங்கிக்
கொண்டலேயெனையாண்டருள்புரிதருங்குருவே
பண்டைவல்வினையானவையாவையும்பார்த்தித்
தொண்டனேற்கருள்வரமதொன்றுண்டதுசொல்வேன். (௨௬)

இன்னறீர்ந்துநின்சடைமிசையிருப்பதேயெனக்கு
நன்மைவாழ்வதவ்வாழ்வன்றிவேறிலேனம்பூ
வென்னவீசனுமிசைந்துகந்தன்பினுவிரங்கி
முன்னர்நோயிராவகந்திலைநல்கினன்முடியின். (௨௭)

ஆயகாலதைவானவர்முனிவர்கண்டார்த்துத்
தூயநாண்மலர்மாரிவாள்விரவிடச்சொரிந்தார்
சேயவண்ணறன்சென்னிமேற்கண்ணிபோற்செறிவுற்,
றேயதுன்பகன்றின்பமாய்ச்சோமனுமிருந்தான். (உ௮)

நாதனுரடியருச்சனைபுரியுமுன்னாடி
நீதியாலுயர்தன்பெயரொன்றென்றுநிறகத்
தீதில்சோமனங்கிறைவன்முன்கண்டதோர்தீர்த்த
மோதுதீர்த்தங்களியாதினுமேலதாயுறுமால். (உ௯)

அந்தநன்புகழ்தீர்த்தத்திற்சென்றினிதாடி
யெந்தைதம்மனருளெய்தினர்க்களவிலையெழில்கூ
ரிந்துவால்வருதீர்த்தமதாதலாலெவரு
முந்தநோய்தெறுசோமதீர்த்தம்மெனமொழிந்தார். (௩0)

பூசையான்மதியபயமாபுரத்துவந்தருளான்
மாசிலாச்சிவபூசனைசெய்வதோர்வழக்காற்
பூசுநீற்றினன்பதியினைப்புகழ்சோமபுரமென்
றேசிலாதவிப்பாரினில்மொழிவர்களெவரும். (௩க)

இன்னவாறெலாம்பெற்றரிச்சித்துயரிந்து
முன்னைமாசொடுதுன்பகன்றின்புறமுதல்வன்
சென்னிசேர்ந்தபினிறைவனையத்தலஞ்சேர்ந்து
நன்னர்மாதவர்பரஞ்சுடர்நன்மையைநவில்கேன். (௩உ)

சோமபுரச்சருக்கம்முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் கஙகூ

# பரஞ்சுடர்ப்பதிசருக்கம்.

மருவுமிக்கற்பத்தாதிவருகிரேதாயுகத்திற்
பிரமனற்பீசத்தாகிப்பிறங்குகார்நிறங்கொண்மேனி
யொருவிருத்திராசூரன்ருனுமையுடனுறைவோன்பாதங்
கருதிமெய்த்தவஞ்செய்தெண்ணில்காலமுற்றினிதுபோற்ற.

மற்றவன்செய்யும்பொய்யின்மாதவங்கண்டிரங்கி
வெற்றிவெள்விடைமீதெந்தைமேவிவேண்டியதேதென்ன
கொற்றவொன்னார்களேவுங்கொடுநெடும்படைகளென்மே
லுற்றிடிற்றுகளாய்வீழுமுயர்வரமருளுகென்ருன். (உ)

அப்பெருவரந்தானெந்தையருளலுமவன்ருளெய்தி
யொப்பின்முப்புவனத்தோருமுறுபயமெய்தியோடச்
செப்பரும்பூசல்செய்தானுதலாற்செயிர்த்தெழுந்து
தப்பிலெண்டிககுப்பாலர்தாமுதலமரரெல்லாம். (௩)

இகலிமற்றவன்றன்மேற்சென்றேவுமாயுதங்களியாவுந்
துகள்படுத்தவன்றன்மேனிதுன்னும்வச்சிரம்போன்மன்ன
வகிலகாரணர்களெல்லாமவன்றனக்கிழிந்துசென்று
பகருமாயுதத்தாற்சாகான்பரனருள்வரத்தாலென்றே. (௪)

மாறிலாவிவனைக்கொல்லும்வகைபலவகையாய்நாடி
யூறவச்சிரந்ததீசியுடலதிலுற்றவென்பா
வீறிலாவிவனைக்கொல்வதெளிதெனயாருமெண்ணித்
தேறிமற்றவன்பாற்செல்லத்ததீசனுமவனைநோக்கி, (௫)

செவ்விதினுணர்ந்தென்பானீர்சென்றதென்செப்புமென்ன
நொவ்வுடன்வந்ததெல்லாம்நுவன்றனர்நுவலக்கேட்டிங்
கிவ்வுடலென்பால்யாருமிடர்கெடிவிதுவேபேறென்
றவ்வியமில்லாதேயெனத்திநீர்கொள்ளுமென்றான். (௬)

நன்முநியென்புவாங்கநாடியசுவர்க்கரியாரு
மன்னெழிற்காமதேனுவரவழைத்ததனைநோக்கி
மின்னுநாவிற்செருக்கிமேவிநக்கென்னவவ்வா
னன்னவனுடலைநக்கவற்றதோலென்புதோன்ற. (௭)

மம்மரெய்தாமலந்தமாதவனென்புவாங்கி
வெம்மைசேர்வீரமிக்கவிருத்திராசுரனைவீட்ட
வம்மறம்பிரமகத்தியாகிவாசவனைமேவச்
செம்மையற்றவனுமங்கட்செயலழிந்துள்ளமேவ. (௮)

வருந்துமப்பழியைத்தெய்வமந்திரிபிசினுமுப்பு
மிரத்தமுநுரையுமாக்கியெழிறருவவனிமாதர்
திரைகொணீர்நாலுமேவச்செய்துநன்மைகளுமீவான் [மை.
பெருத்தவேதார்வேள்விக்கெய்தித்திரட்டினன் பெரியோர்தம்

தேவர்கண்முநிவர்யோகர்சித்தர்விஞ்சையரியக்கர்
யாவருமவேள்விக்கெய்தியிருந்தனரிருந்தவெல்லை
பாவனைச்சுருதிமுன்னும்பலகலைத்துணிவுபார்ப்போர்
தீவணச்சிவமேகர்த்தாவென்றதனுண்மைதேர்வார். (௧௦)

அச்சிவமுருவுமல்லவருவமுமல்லவேறு
நிச்சயமீதென்றுருநிகழ்த்தொணாவதுவேயீண்டு
மெச்சுபேரொளியாய்நின்றுவிளங்கிடுமதனைக்கண்டா
னுச்சமாஞ்சிவமுன்றோன்றுமுனுயிர்காட்சிபோல. (௧௧)

ஆதலால்சிவத்துக்கங்கமாம்பரஞ்சோதிசத்தி
மாதவஞ்செய்தாற்றோன்றுமாதலான்மற்றதற்கு
மேதகுதலமும்வேண்டுமென்றுமேதினிமேனாடித்
தீதிலாச்சோமன்பேரூர்ச்சேர்ந்தனர்செப்புகின்றார். (௧௨)

புண்ணியமொன்றுகோடிபாதகம்போக்குமென்றும்
நண்ணுபுண்ணியந்தானொன்றுகோடியாய்நணுகுமென்றும்
பண்ணுபாதகந்தானொன்றுமொன்றதாய்ப்பயிலுமென்று
மெண்ணிவித்தலம்போல்வேறொன்றில்லையாமெனமதிப்பார்.

ஆங்குறுசோமதீரத்தாசையான்மூழ்கியண்ணல்
பாங்குறுகழல்கடாழ்ந்துபரவியேகீழ்பாற்சூழும்
வீங்குமாச்சிரமஞ்செய்துவேறுவேறங்கட்புக்குத்
தீங்கில்சீர்சத்திபொற்றாள்சிந்தைவைத்தேத்தியேத்தி. (௧௪)

நீரிடைமூழ்கித்தாழ்ந்துநெருப்பிடையிரும்புநோர்ந்து
கூரியவூசிமேலோர்விரலூன்றிக்கொண்டுநின்றும்
பாரின்மேலொருகையூன்றிப்பாதமேற்போகவுய்த்து
மாருணவொன்றுமின்றியருந்தவம்புரிந்துபோற்ற. (௧௫)

பராபரையாகியிச்சைப்பரஞானந்தொழிருனார்
விராவுமத்தவர்முன்றோன்றிவேண்டியதுமக்கேதென்னத்
தராதலத்தெவருங்காணத்தனிச்சிவனுண்மைகாண
விராகமுற்றனமிங்கென்றங்கியம்பினரியம்பக்கேட்டு. (௧௬)

புனிதமாஞ்சிவத்தினுண்மைப்பொருண்மையையருளினாலே
நினைவினாலறவோர்காணுமோர்மையைத்தவர்கள்காண
வினிதருள்புரியென்றங்கண்ணிருந்தவவ்விலிங்கந்தன்னை
வனிதையுமிரந்துபோற்றிவணங்கினள்வணங்குங்காலை. (௧௭)

ஆதியுமுடிவுமில்லாவற்புதானந்தரூபச்
சோதியவ்விலங்கத்தின்பாற்றொல்பரஞ்சுடராய்த்தோன்றல்
பூதலம்கீழ்மேலெங்கும்பொங்கொளிசங்கையின்றி
யோதுபல்லருக்கர்கோடியுதித்தெனவொளிர்ந்ததன்றே. ( )

ஆரணப்பொருளாய்நிற்குமம்பரஞ்சுடர்தான்றோன்ற
வீரமாதவர்களியாரும்வெருண்டனர்வெருளாவண்ணம்
பேரணங்கவரைக்கூட்டிப்பிறழ்பரஞ்சுடரிதேத்து
காரணப்பொருளீதென்றுகாட்டினள்கலந்துநீங்கி. (௧௯)

காண்பருங்காட்சியிங்ஙன்காணலார்கண்டதான
மாண்பெறுமீக்காடென்றுவழங்கினர்மாதவத்தோர்
சேண்படுசிவத்தைக்காணச்செய்ததிம்மானென்றம்மா
நீண்பதுமத்தாடாழ்ந்துதித்தமாமுத்திபெற்றார். (௨௦)

இனையனவானபின்னரிலங்கியகுடசநீழன்
முனமுறுமிலிங்கத்தூடேமொய்யொளியடங்கிமீண்டுங்
கனபுகழிலிங்கமாகக்கண்டுகந்தயலினின்ற
வனிதைமற்றவர்க்குநாமம்வளர்பரஞ்சுடரென்றாளால். (உக)

அன்றுமுன்னாகவெங்கைக்காசில்பேரவனிமீது
துன்றியவிருப்பினாலேதொல்பரஞ்சுடரென்றாகு
நன்றுறமொழிந்தாரந்தநற்றவர்தவமுன்செய்தாங்
கொன்றிடவிடத்திற்புக்காங்கொன்றையேயுணர்ந்திருந்தார்.

விண்ணின்மன்வேள்விக்கெய்திவெதரிகாசிர்மகீங்கி
யெண்ணின்மாதலம்புக்கெல்லாமிதுநல்லவென்றுசென்று
புண்ணியாவத்தத்தின்கீழ்பெருந்திமாதவம்புரிந்தே
யண்ணலோடுமையுநண்ணவமர்ந்தவரவராமொன்னில். (உ௩)

வேறு.

சாலிகோத்திரன்பிருகுபரத்துவாசன்சவுனகனுரோமசன்
காசிபன்வசிட்டன், கோலநாரதன்சுகன்மார்க்கண்டன்சத்த
கூன்முனிததீசிகலைக்கோட்டுநீத்தோன், சிலுவுபமன்னியுசன
ற்குமாரன்றிகழ்விசுவாமித்திரன்வியாசனாதி, மேலவராமவர
வரங்கிருந்தவூர்பேர்விளங்குதலங்களுமுண்டுவிளம்புங்காலே.

வேறு.

வரம்பலர்க்கருளுமெந்தைவளர்பரஞ்சுடருமாகி
யிரங்கிமெய்க்காட்சிநல்கியிருத்தலாற்றிருக்கொடானம்
பரஞ்சுடர்ப்பதியென்றுரும்பகர்ந்தனரதன்பின்னுண்மைத்
திருந்துமத்தலத்திலுற்றதிறந்தனைச்செப்பலுற்றேன். (௨௫)

பரஞ்சுடர்ப்பதிசருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-கசுக.

## மங்கலமாபுரச்சருக்கம்.

கற்றவர்கள்பரவுபுகழ்ப்பெருமைகுன்றுக்கடம்பமாவனத்
திலினிதிருந்தமேன்மை, நற்றவர்கள்முனிவரவர்தம்மிலோங்கு
நான்முகன்செய்கௌபீனந்துதைகயமானேன், குற்றமில்பல்க
லைவேதமாகமங்கள் கோதிலாப்புராணங்க ளனைத்துமங்கண்,
முற்றுமுணர்ந் தறிவினுன் மிக்குவாழ்வோன் முதுநெறிசேர்
கௌசிகமாமுனியென்பானும். (க)

பண்டைமறைநெறிநீதிவழாமேயங்கட்பன்னசாலையிற்சின்
னுட்பயின்றுகோலத், தெண்டிசைசேர் கங்கைமுதற்றீர்த்த
மெல்லாஞ் சென்றினிதி னுடுதற்குச்சிந்தைசெய்து, தண்டி
கழும்பரஞ்சுடர்வாழீக்காரண்யஞ் சாரவரும்போதுடலந்தள
ர்ந்துமிக்கு,மண்டுபசிநீர்வேட்கைவிடாயால்வாடிமார்த்தாண்
டன்மிகவலைப்பவருத்தமிக்கான். (௨)

சாலமுனிவருந் தமதுதன்னைநோக்கித் தக்கதலவென்றருக்கன்றானுமோடி, வேலையிடைவீழ்வதுபோல்வீழ்ந்தானங்கே மேய்சிறைப்புட்டிரண்டரியதூயசேக்கைப், பாலடைந்தநீடொளிக்கொன்றுமின்றிப் பாந்தண்மணக்கான்றிரைதேர்பான்மைத்தான, ஞாலமெல்லாந்துஞ்சநிகழ்பேயுந்துஞ்சுநள்ளிருள்கூர்கின்றநடுநாளிலாங்கே. (௩)

முந்தனுறுமவ்வனத்திற்றன்னிரியோங்கிமொய்த்தழைசூழ் செடிபூடோர்முறைமையின்மேவி, நொந்துடலமதுவருந்தித்துயிலுமின்றி நுவலின்றியெண்ணுகதெல்லாமெண்ணிச், சிந்தைதளர்ந்திருப்பவன்முனிதேவன் றிருவருளாற் பூவேலவடிவாய்ச்சென்றோர்பூதம், வந்தனவங்கிரும்பிழைகள்விருப்பிற்பூண்டுமற்றதனோடங்கனொருமாற்றஞ்சொல்வான். (௪)

திருந்தியவப்பூதத்தைப்புலையனென்றுதீதில்கவுசிகமுனிநீசேராதங்க, ணிருந்திடுகதனித்தொருவனமர்வனென்னயானிருளனிவ்வனத்துளிருப்பனீயார், வருந்துமனத்தொடேபயில்வாயென்றுகேட்ப மாமுனியுமற்றதற்கு வந்ததெல்லாம், பொருந்தவுரைத்துத்துயில்வான்றீங்குறுதிப்பூதவுடல்காவெனலும்பொருந்திப்பூதம். (௫)

உன்னலருமுனிதுயின்றான்றுயிலுங்காலையுற்றெடுத்துமற்றவன்றானுணராவண்ண, மன்னுமிருகரத்தேந்திக்கொண்டுசென்றுவருமருளாலொருமனையுண்மருவியாங்கே, துன்னுமலரணியின்மேற்கிடத்திநீங்கித் தூயகுளிர்நீர்ச்சிரகந்துதையவைத்து, மின்னுகனிகிழங்கொடுகாய்கொண்டுசென்றுமேவுதுயினீக்கமுனிவிழித்துநோக்கி. (௬)

நன்னெறிசேர்மனையமளிநன்றிதென்னோநமக்கென்றுந
னிவியந்துநமதுநாதன், றன்னருளோ விவ்விருளன் செய
லோவென்றுதானினைப்பமுன்னின்றுசாற்றும்பூத, மன்னுக
னிகாய்கிழங்குநீருங்கொண்டுவந்தனனிங்கிவைவருந்திவருத்த
நீங்கிங், கென்னவதுதானுமிறையருளேயென்றாங்கினிதரு
ந்தியாசையினுவின்பமேவி. (எ)

ஓங்கமலிபுனிதமெனவாங்கேமேவியுற்றுமுனிசயனிப்பமற்
றப்பூத, மாங்குமுனிநமைப்புலையனென்றானென்றங்ககல்றணி
கொளொருபுலைமானவனைப்பற்றிப், பாங்குறவேமருட்டியுட
ன்கொண்டுசென்றுபாதம்வருடிவற்கென்றுபகர்ந்துசேர்ந்து,
தூங்குமுனி யருகுவிடுத்தேகமற்றத் தூமொழிதாள் வருடுவ
போற்றுயின்றாள்கூட. (அ)

மாதவனுந்துயிலுணர்ந்துவிடியுங்காலைவந்தவிடாய்த்துயர்
நீங்கிச்சிந்தைதேறிப், பாதம்வருடித் துயில்வாடுயிலைநீக்கிப்
பனிமொழிநீயாரென்றுபகரவம்மா, தோதினடான்புலைச்சி
யெனவுள்ளதெல்லாமுயர்முனியுமற்றிவளோ டுறைந்ததோட
ம், யாதுசெயத் தீருமென வெண்ணுங்காலை யருக்கனுங்கீட்
டிசையெழுந்துவந்தானன்றே. (கூ)

வருகாலஞ்செல்காலநிகழுங்காலம்வல்லையொருமூன்றாக
ச்சொல்லுகின்ற, திரிகாலத்துள்ளதிறமெல்லாமீசன்றிருவரு
ளாலுறநோக்கித்தேறும்போது, பெருகார்வத்தொடுதிகழ்மெ
ய்ப்பூசைகொண்டுபேறுநமக்கித்தலத்திலருளவேண்டிக், கரு
காலத்தினையுண்டகண்டன்செய்தகல்வையெனமுனிதனதுட்
கண்டுபோற்றி. (கo)

எம்மையினியாண்டசிவனருளிதாதலிங்ஙனவனருள்வழி நின்றிடுதனன்றென், றும்மையினிற்சஞ்சிதமுமிம்மைதன்னி லொன்றுபிராரத்துவமுமுண்மையாக, வம்மையுறுகாமியமு மகற்றிநீங்காவழியபவபாசமெலாமறுக்குமோங்குஞ், செம் மைநெறிச் சிவபூசை யென்றுசிந்தை செய்திமைக்கு முன்ன லொருதீர்த்தந்தோன்ற. (௧௧)

அங்கதுகண்டதிசயிப்பமுன்னோர்வாக்கங்கதனைட த்திற்றீர் த்தமெல்லாமாடவேண்டா, மங்கலமாதீர்த்தமிதுவிதினீயாடி மங்கலமாய்மங்கலமாமுநியாகென்று, பங்கமில்சீரிவ்வனத்து ளிருப்போகம்போ பரஞ்சுடர்கா ணம்மைவழிப்படுநீயென்ன, விங்கிதுகன்றாறையருளொன்றங்ரோடி யிலங்கெழின்மங்கலவு ருக்கொண்டெழுந்தானன்றே. (௧௨)

ஆதலினான்மங்கலமாமுநியென்னுமமாங்கவன்பெற்றோங்கி யிறையவனைத்தேட, மேதகையவீளையாட்டாலருமைகாட்டி வெளிப்படா திருப்பவுள மெலிந்துமற்ற, மாதவனுமிங்கிருப் போமென்றுபேரும் வானகத்திற்றுனுளைத்தான் மறைந்தாற் போமோ, நீதியிதுவே நின்றுதவ நாம்செய்தானிற்பனேவரு ளிறைவனின்றுனென்று. (௧௩)

சேய்நிறவங்கிபலவங்குநாட்டிச்செப்பூசிமேற்றுளிலங்குட் டத்தை, யேயவுறவேயூன்றிநிமிர்த்தோர்தாட்டண்டென்ன மேற்போக்கிமுடியேற்றிக்கைகள், வாயுவொடுகுணமூன்றுங் கரணநாலும்வருபுலன்களைந்தடக்கிக்காமமாதி, யாயதிறமார் க்கத்திலுலகமேழுமதிசயிப்பவெண்மலரிட்டறிவாற்போற்றி

வேறு.

பண்டரங்கனங்கவன்செய்தவங்கண்டன்பிற்பார்மீதங்கருள்
புரியப்பரிக்குமான்மே, லொண்டொடியுந்தானுமெழுந்தருளி
நீயிங்குறவேண்டிற்றென்னென் றங்குரைப்பக்கேட்டு, மண்ட
னின்முன் விழுந்தெழுந்துதொழுதுபோற்றி மனமுருகிமறை
மொழியால்வழுத்தினன்னீர், கண்டமெய்முகிழ்ப்பவுளங்களி
த்துப்பின்புகாதலினாலாதியொடுகழறலுற்றான். (கரு)

மின்பொலிசெஞ்சடைமீதுகங்கைசூடும்வேதியனேநின்ற
னையான்விரும்பும்பூசை, யன்பினுடன்செயவேண்டுமென்று
கூறவருளாளன்கருணைபுரிந்தருளிச்செய்வா, னன்பரிவாலிவ்
வனத்திற்குடசத்தின்கீழ்நலங்கொள்சுடரிலிங்கமதாய் நணு
கிநிற்போம், நின்பரிவாலருச்சியெனக்காட்டிமுன்போய்நீடொ
ளிசேரிலிங்கமதாய்நின்றானன்றே. (கசு)

அங்கதுகண்டதிசயித்துவிருப்பினண்ணியுமையுடனப்ப
னுமாயெம்மையாண்ட, சங்கரன்றனருளீந்தவரமென்றேத்தி
த்தாழ்ந்தெழுந்துமனமுருகிச்சாயாவன்பின், மங்கலமாமுநிபி
ன்னுமாடிப்பாடிமருவுமிசைச்சருகென்றுமணிச் செஞ்சோதி
ப், பங்கமில்சிரிலிங்கத்தின்மிசையோர்தூய படங்கொண்டுவி
தானித்துப்பரிந்துபோற்றி. (கஎ)

மற்றினிதங்குற்றசிவனருளாறாயமஞ்சனமுமடுதியவி
னைமலருங்கொண்டு, செற்றவர்கள்புரமூன்றுஞ்செற்றசெல்
வன்திருமுன்புதாபித்துத்திருந்துவாழ்த்தி, யற்றமறவைத்த
வன்றானருளிச்செய்தவாகமத்தின்றிறம்பேணியருளினாலே,
வுற்றபதினாறாயவுபசாரங்களோங்கவஃதும்பூசைபுரிந்தோகை
மிக்கான். (கஅ)

அன்றுமுதலொருநாள்போல்வழாதுநித்தமன்புதலைமுத்தின்பவிதத்தவனிமீதங், கொன்றைமுடிப்பெருமானைவழிபட்டேத்திக்கோதிலகப்பூசனையுந்தூய்தாய்ப்பொங்க, முன்றொழுதங்கிஞ்செழுத்துநாவோவாதுமொழியவருசஞ்சிதமேமுதலாமூன்றும், நின்றகலமலமொடுங்கவருண்மேவிட்டுநீடுகிரியாஞானநிட்டையுற்றான். (௧௯)

மதியொன்றிப்பன்னெடுநாட்பூசைசெய்திம்மையாரும்பொய்வாழ்க்கைமாற்றாமென்று, துதிகொண்டமறைமொழியாற்றுணிந்துபோற்றச்சோதியழலுருவமதாய்த்தோன்றிநின்றா, னதுகண்டுசாலவுளமகிழ்ந்துசூழ்வதன்பினதனூடுபுகுந்தின்பமுற்றான், விதிநீண்டமாலமரர்முனிவரியாருமென்மலர்தூய்த்தொழுதார்த்தார்விசும்பின்மீதே. (௨௦)

இப்பரிசான்மங்கலமாமுநிவன்பூசித்தெய்தலினாலிப்புவியிலிலங்கியோங்கு, மப்பதியைமங்கலமாபுரமென்றார்களாதலினான்மங்கலமாபுரமென்னுமஞ், செப்பலரும்புவிமீதுநடந்ததன்றிச்செய்யபரஞ்சுடரடியைச்சென்றுபின்ன, ரொப்பிலுயர்மாயன்வழிபாடுசெய்தங்கோங்குதிறமிங்கினியானுரைப்பக்கேண்மின். (௨௧)

மங்கலமாபுரச்சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-௧௮௦,

## மால்வினைநாசச்சருக்கம்.

முன்னொருகாலத்துன்னுசங்காரமுடிந்தனமுடிதலுமரு ளான், மன்னியமாயாசத்தியின்பாலேமாலவதரித்தியான்செ ய்வ, தென்னென விறைவன்றிதிக்கதிகார மீந்துமந்திரமு மொன்றீந்தா, னன்னதுச்சரியாவவனருள்வெள்ளத்தமிழ்து ந்திவடத்துயிலமர்ந்தான். (க)

எண்டிசைப்பரவுமாலதிற்றுயில்காலிலங்கொளிநாபியிலெ ழுந்த, முண்டகமலராதெண்ணில்பல்காலமுகுளிதமாகியங் குறலும், துண்டவெண்பிறைசேர்சென்னியனுதலிற்சுடர்விடு நேத்திரமதனிற், கண்டிடமுனியாயாதியாம்விசுவகன்மனங் கெழுந்தனன்களித்தே. (உ)

எழுந்தவவ்விசுவகன்மனங்கேத்தியிறைவயான்செய்வதே தென்னப், பழம்பொருளாயபரன்பணியுண்டுபணிப்பமென்ற ன்றுறுபரிவாற், செழுந்திருமறைமந்திரங்களுலளித்துச்செப ஞ்செய்நீயெனவவன்செபிப்ப, விழைந்தசீர்மனுவுமயன்றுவ ட்டாவும்விசுவகன்மாவுமென்மேலோர். (௩)

நால்வருமெழுந்துதந்தையேயின்றுங்கள்செய்தொழில தேதென்ன, மேலவனருளாலாதியாய்விளங்கும்விசுவகன்மா வெனும்விறலோன், சீலமார்கின்றதனையருக்கிறைமைதிருந் துமந்திரங்களுலளித்து, மேலதாங்கமலமாமலர்த்தோடுவிரி தரவுறையுநீயென்றான். (௪)

என்றுயர்வாகிவிசுவகன்மாவங்கியம்பிடக்கேட்டினிதிறைஞ்சி, நன்றுறமனுவுமயன்றுவட்டாவுநவில்புகழ்விசுவகன்மாவுஞ், சென்றுயர்கமல நாற்றிசையிருந்து செபித்தனர் செபித்திடுங்காலை, வன்றனிக்கமலமலர்ந்ததுசெவ்விமதுமணமெங்கணுமலிய. (௫)

வானெடுங்கமலமலர்தரவதனின்மன்னியகனகன்மேனி, யூனமில்பிரமன்றிசையெலாநோக்கியொருவரின்றுயர்பெருந்தலைவன், யானெனவெண்ணிமதங்கொடுநமக்கிங்கெதிரொவரெனநினைந்திடலு, மானுதலில்லாவசுரர்களிருவர்மற்றவன்வலமிடம்வந்தார். (௬)

வந்தவாறவர்தாமரன்பணியநனுன்மாறிலாமலரவன்சிரங்க, ளைந்துநாப்பண்சேர் சென்னிசேர்செவியிலாயிடை யென்பர்களருளில், வெந்திறலார்பல்கோடியோசனைநீள்வியனகராங்கதுக்கேற்ற, வந்தமில்பெரியவாக்கையர்சண்டவனிலமும்வடவையுமனையார். (௭)

கருஞ்சுடர்மேனிமதுவுடன்வலியகயிடவனெனுமுயர்நாமம், பெருந்திறலுடையோர்பிறையெயிற்றுளர்பிறங்குமப்பிரளையமெல்லா, மருங்கழற்கணைகாலளவினர்முன் னின்றதட்டியாங்கவர்திருமாலா, மெலிந்தவனகந்தையிறும்படிமேற்சென்றெமக்கருள்வீரெனவிசைத்தார். (௮)

என்றவர்கூறபிரமனுங்கஞ்சியென்செய்கேனிதற்கெனவெண்ணித், தன்றனைப்பயில்றதாமனாமுதலாந்தலைமைமாதவனுளமுணர்ந்து, நின்றவர்தமக்குநிகழ்த்துவான்றாழ்வினெடியவன்றுயிலுவானவனை, யொன்றிநும்மோடுபொருந்திறல்வல்லானெல்லைநீர்செலுமங்கெனலுமே. (க)

மற்றவர்மாயன்றுயிலிடையெழுப்பிவந்நல்லமர்செயவென்றுங், குற்றெதிர்கூறிக்கோரமாம்பூசலோரிரண்டைந்தூறாறுண்டு, சற்றிடைவிடாதுமக்ரபீடத்திற்றான்றிரிதரப்பொருதனர்மால், வெற்றிசேரசுரர்சாய்விலாமையினுஞ்வெல்லொணாதெனமனம்வியந்தே. (க0)

ஆதிமாதவமாலவனெதிர்நோக்கியல்குறுதொல்சிமெல்லோடியோதுமாயிர வாண்டென்னுடன்கோர முற்றமர்புரிதலாலுங்கண், மாதிறன்மிகவுமதித்தனம்வேறுமதித்திடோமொருவரம்வேண்டிற், றேதுநீருரையுமென்றலுநின்றவிருவருமுறுவல்கொண்டறைவார். (கக)

நீவரமெமக்குத்தருவதெவ்வாறுநிலைதளர்ந்தெமதுறுபோர்க்குச், சாய்வலதுடன்றுபோகுமோர்பெரியதன்மையாய்நின்னுபாயத்தா, லேவிலிவ்வசனமியம்பினைபோலுமென்றவருன்றனைமதித்தோம், மாயனீயொருவ னிருவர்யாம்பொருதாவரமெம்க்கேதரவென்றார். (கஉ)

என்றவர்கூறக்கேட்டலுமகிழாவிவருரைசெய்ததுநமக்கு;
நன்றெனவுளங்கொண் டதுவெளிவிடாமனவில்புகழ்நாரண
னெளிதா, யின்றிவர்தம்மைவெல்லலாமிதனையினியெனவாங்
கினிதெண்ணி, முன்றிகழ்பவனைத்தானெதிர்நோக்கிமுடித்
திடுஞ்சூட்சியான்மொழிவான். (கங)

வஞ்சமுள்ளடக்கியஞ்சினன்போலவாக்கினானயங்களேவ
ழங்கி, விஞ்சைசேர்மாயனீங்கியான்வரங்கள்வேண்டினாற்றரு
தருன்மெய்யோ,வெஞ்சலொன்றில்லாதியம்புமென்றவரோ
டியம்பினஞ்சரதமேயென்ன, வஞ்சனவுருவினார்பொய்யு
ரைக்கிலாவதென்மெய்யெனவறைவார். (கச)

இல்லெனாதந்தவரந்தரோமாகிலெங்களிலினர்வேறில்லை,
வெல்லினும்வெற்றியல்லகேள்சான்றுவிரிஞ்சனேவேண்டிலே
தென்ன, மல்லன்மாலவர்க்குமுடிவுகாலங்கள்வருதலாற்றல்
னுளமறைவிட், டொல்லைநீ னொன்கைச்சாவதேகேட்குமுறு
பெருவரமெனக்கென்றான். (கரு)

ஆங்கவன்கேட்டதிறத்தினைக்கேளாவடுதிறன்மதுவுடனா
ண்மை, யோங்கிவாழ்கின்றகயிடவன்றானுமொருவரையொ
ருவர்நேர்நோக்கி, யீங்கிவன்கேட்டபரிசிதுபோனுமிரந்திலே
மிவனுமுன்னென்று, வேங்கியென்செய்வமுன்னியாமரு
மைக்கிட்டனஞ்சபதமேயென்றார். (கசு)

MAHAMAHOPADHYAYA
DR. U. V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090

இதற்கியாஞ்செய்வதென்கொடோமெனினுமியாம்வெ
லோமவன்கெடானென்று, கதத்தொடுபொருநீர்களத்திடை
மிகவுங்கையறவெய்திருட்கலங்கி, முதற்படுமுடற்கங்கமைத்
தகன்மங்கண்முடிவிலாமுடிவுவந்தெய்த, மதர்ப்பழியுளத்தர்
கூறுவார்விதியின்வசமதாயாங்கொரு மாற்றம். (கஎ)

கொடுப்பமென்றுரைத்துமறுப்பமேயாகிற்குற்றமொன்றீதி
ல்வேறில்லைக், கடுப்பிலிவ்வரமிங்கீகுவாராகிற்கழிப்பிலாவிழு
ப்புகணம்பா, லடுத்திடுமென்றோர்நீதியைநாட்டியவரொமை
வேண்டல்செய்யென்னப், பிடித்தனனிவர்கடமதுடறன்னை
ப்பிளந்தனன்றனதுகிர்நுதியால். (கஅ)

பிளந்திடுமுடலினிரத்தத்தாலோங்குபிரளையுமடங்கமேல்
வகுத்துத், தளர்ந்திடாதிருந்தானரியயன்சிருட்டித்தலைதெரி
யாதுநால்வருடன், வளங்கிளரரனைத்துதிப்பவந்தருளவான்
முதலியாவையும்வகுத்தான்,விளங்கிடுதொதானவருடன்மே
வுமேதையான்மேதினியாமால். (ககூ)

மற்றுமுன்னிசைவுமருதுயிர்கொடுத்தமதுவொடுகயிடவ
னெடுங்கோண், முற்றுயர்வேகமாகியேதிரிந்துமுதலவனருளினு
னமைமுன், செற்றவன்மாயனெனவுணர்ந்தவன்றன்செவிக
ளிற்றுயிலிடைச்செனித்துப். பொற்கூறநீடவிமாடுதாங்கூ
டிப்புரிந்தனரருந்தவம்பொலிய. (உ0)

வேறு.

பன்னெடுநோன்மாதவங்கள்பண்ணக்கண்டுபெங்கயத்தின் மேலுறைவோன்பரிந்துதோன்றி, யென்னவரம்வேண்டுமும க்கென்னவேண்டிற்றீந்தகன்றான் மற்றவருக்கெல்லாங்கூறி, மன்னுபொழின் ஞாலமிசை விளங்குமாதண் மதுபுரமென் ெறாருபுரிமுன்வகுப்பவங்கட், டுன்னுகடற்படைகள்பலசூழப் புக்குத்தூவிசையப்பதியதுவாய்த்துலங்கவாழ்ந்தார் (உக)

மதுவலிசேர்தமதுபெரும்படைகொண்டேகிவானுலகம் பாழ்படுத்திவானிலுள்ளோ, ரதிபயமாங்கெய்தவடர்ந்தெதி ரொன்றின்றியார்கலியுட்சென்றுதுயிலமருமாலாம், பதியை யுறுதுயிலெழுப்பியெம்மைமுன்னம்படுத்தன மென்றகந்தை கொடுபள்ளிமேவு, மதுவிடுநீயடுவேமுனைவிடுவோமல்லேமாத லாலமர்பொருகென்றறைந்தானன்றே. (உஉ)

ஆங்கதனையரிகேட்டுவெகுண்டுசாலவாசில்வயினன்புயமீ தாகவேறி, பரங்குடையதனதுடையாகியுள்ளபஞ்சவிதவா யுதங்களஞ்சுங்கொண்டு, சார்ங்கமெனுந்தனுவளைத்துச்சரங்க ளேவத்தானவருமுற்றவத்தாற்றுங்கள்பெற்ற, வோங்கொளி ர்வெங்கணைகடுரந்ததனைமாற்றி யோவறவையாயிரவாண்டுறு போர்செய்தார். (உ௩)

ஒருவர்விடுத்தொருவர்போர்வரியாற்றுதங்கோங்குசிவன ருளாழியிங்குவிட்டா, லிருவரிடத்தடங்காதிவ்வுலகமெல்லா மெரித்திடுமென்றேவாதங்கிகல்செய்காலை, யருகுவரும்பரி தியனையேவில்வேறான் றடுவதிலையென்றுரைப்ப வதனைக் கேட்டு, பொருதிறன்மதுவினிததனைப்பூசைசெய்துபொங்குசி னத்தவுணர்மிசைப்போகவிட்டான். (உச)

மாலெறிந்தசக்கரநீள்வானின் மீதுவடவையெனப்படைவி
ழுங்கிவருவகண்டு, நீலநிறக்கயிடவனுமதுவுமென்றுநேரிற்ற
லசுரரெதிர்நிற்கவஞ்சி, ஞாலமிசைத்திரிந்தோடவாழிதானு
நாடியவர் பின்றொடர்ந்து நளிர்கொண் டோங்கும், வேலைம
லைகானோடு வானமெங்கு மேவினர்மற் றெங்கெங்கும் வேகித்
தேக. (௨௫)

அதற்கழிந்தசிங்கையராயவுணர்நெஞ்சத்தாகுலங்கண்மிக
வெய்தியாய்த்துசால, விதப்படுபுண்யாவதத்தேதிலங்கியோ
ங்குமேற்றிகழ்நீக்காரண்யமெய்திமேனிப், பதைப்பறவேயோ
ளித்திருந்தாரங்கட்டுங்கப்பரிதியும்வந்தவருடலைப்பகிர்ந்ததா
ங்கே, குதித்தெழுசெங்குருதிநெடுநீத்தமேவிக்கூளைகடலும
ருணவணங்கொண்டதன்றே. (௨௬)

இவ்வாறுமதுகயிடவரையீர்த்தத்தாலெழுமத்திதொடர்ந்
தேகச்சேர்ந்தமாற்குச், செவ்வாய்மைச்சாவித்திரனென்
னுமத்தீதின்முனியாதரங்கள்செய்துபேணி, யிவ்வாவிவிறுத
தாபநாசமாகுமிதின்மூழ்கிமனத்தாபமிவணீக்கென்ன, வவ்
வாவி யிடைமூழ்கித் தாபநீங்கியகமகிழ்ந்து மாதவனோடுறை
யலுற்றான். (௨௭)

திவ்வியமாதலமிதனில்யானும்வைகச்சிங்கைதவிருப்பாய
தெனமுனிவன்றோரா,வவ்வுளூனாயென்னவரியெவ்வுளென்று
ங்காதரவினாற்றுயின்றனதலாலே, யிவ்வுலகிலப்பதியையெ
வ்வுளென்றேயியம்புவர்களாங்கிறந்தயாதுதானர், றொவ்வுற
வே யரிதுயிலின்மூக்கினூடுமேவி நுழைந்துதிரமதுவாய்கவெ
ழுந்தான்மாயன். (௨௮)

எழுந்தளவின்மறக்குஞ்சூரர்களோடவேசிலரிவசுரரிவரென்றங்கெண்ணிச், செழுஞ்சுடர்வாழிதனையவர்மீதேவிச்செற்றுமறித்தூற்றவிடைசென்றுதுன்ப, மழிந்துதுயிலமர்காலைமுன்னையன்செயானல்பழிபிரமகத்தியாகிமீளக், கழிந்தகலாதரிதுயின்முன் தோன்றிநின்றுகருத்திறுக்கிப்பற்கடனைக்கறித்ததன்றே. (௨௯)

மற்றதுகண்டஞ்சியெழுந்தெதிர்காணுமாதவகேளெனக் கனவுமூழாதுகூறப், பற்றுபழிதீரும்வகைநாடியங்கட்பயில் சாலிகோத்திரன்றான்பகர்வான்முன்னஞ், செற்றவர்கள்புரமெரித்தசெல்வன்பூசைசெயிற்றீரும்வேறொன்றிற்றீராதென்றா, ணுற்றதனுக்கானதலமுணாநீயென்னவோங்குமுநியாங்கதுவுமுரைக்கலுற்றான் (௩0)

நின்பூசைக்கானதலந்தானுமிந்தநீடியகானகத்துண்டுநிகழ்த்தக்கேணீ, முன்போதுமலைமகணற்றேவர்சோமன்முநிவனுடன்வழிபாடுசெய்யமேவி, வன்பூதநாயகனுறிருந்ததானமற்றதுபச்சிமத்திசையின்மன்னுமென்றா, னென்போதின்மாலுமகிழ்ந்தங்கணெய்தி யேர்திகழ்மெய்ப்பரஞ்சுடராங்கிருப்பக்கண்டான். (௩௧)

கண்டளவிலாதரவுபொங்கியோங்குகைக்கமலமுடிகூப்பிவுளக்கமலமலரப், பண்டைமுறைமொழிகளினாற்பரவிப்போற்றிப்பரஞ்சுடரேபெருந்தகையேபாவனர்சா, தெண்டிரைசேர்கங்கையணிதிங்கள்சூடுஞ்செஞ்சடையெம் பெருமானேதேவர்தேவே, யண்டமுதனாயகனேயருள்வாயென்றென்றாங்கரியுமோங்கரன்றாளடைந்துவீழ்ந்தான். (௩௨)

வீழ்ந்துடனங்கெழுந்திருந்துமீண்டும்போற்றிமெய்விதிர்ப்ப விழிநீர்சோர, வாழ்ந்தவுளத்தினனாகியருளாற்பேர்ந்துமங் கலமாதீர்த்தம்புக்கங்கணாடி, யாழ்ந்தகன்றசோமனெடுதீர்த் தந்தன்னிலாயதிருமஞ்சனமுமலருங்கொண்டு, போழ்ந்தபி றைமுடியானையன்பானண்ணி பூசனையாகமவிதியாற் புரிய லுற்றான், (௩௩)

விரும்பிபெருவேட்கையினாற்றாநீராட்டிமேவுமுபசாரங் களியாவுநல்கிப், பெரும்புலன்களைந்துமகத்தடக்கியுண்மை பெயராதசிந்தையனாய்ப்பெருமான்முன்ன, ரிருந்துகழற்றியா னிக்குங்காலைதன்னிலின்பமிகுத்தன்புதழைத்திரங்கியோர்சே ரருந்திருவின்மணவாளன்முன்னேதோன்றியாதிபிரான்கேள் வரமென்றருளிச்செய்தார். (௩௪)

ஆதியருண்மொழிகேட்டமாயனின்றவானினுறுகுரல்கே ட்டகன்றேபோல,வேதமயன்றாதரவுற்றிறைஞ்சியேத்தியோர் திகழும்பரஞ்சுடர்முன்னியம்பலுற்றான், வேதனிடைவந்த நிருதனையான் முன்னம்வீட்டவவர் பழிதொடர்ந்துமேவிப் பின்னும், போதமழிந்துறுபிரமகத்தியாகிப் புழக்குமிடித் தடருமதுபோக்கிங்கென்றான். (௩௫)

என்னுமொழிகேட்டருளியருளாளீசனெண்ணில்பலவூழி தொடர்ந்திடரேசெய்த, மன்னுபெருவினைதினையிங்கடையா வண்ணமாற்றினமென்றருள்புரியமகிழ்ந்துமாயன், சென்னி யினாற்றொழுதுகந்தானங்கட்டேவர் தேனிமிரும்பூவின்மழை சிந்தியார்த்தார், முன்னிகழ்மங்கலபுரத்தையன்றுமுன்னா மொழிந்தனர்மால்வினைநாசமென்றேமுன்னோர். (௩௬)

அடைந்துமுநிமொழிவழுவாதன்புநீடியாசில்சிவபூசைசெயுமரிக்குமுன்னந், தொடர்ந்தவினைபோக்குபரஞ்சுடற்குநாமந்தொடர்ந்தவினைபோக்குபரஞ்சோதியென்றார், மடந்தையிடப்பாகனுமாநாமம்பெற்றுவாழ்ந்துமகிழ்ந்திருந்தனன்மற்றவனை வாழ்த்தி, விடங்கொளரவணையிலினியின்பமோங்கிமேவுதுயில்கொள்வதற்குவிடைகொண்டேகி. (கஎ)

*எவ்வுடனிற்பின்னுமகிழ்ந்தருளினுலேயீனமில்லாதானவரமினிதுநல்கி, யிவ்வுலகுமெவ்வுலகுந்தொழுதுபோற்றவேசிவிருவனிதையரு நேசஞ்செய்யப், பவ்வமதில் வானவர்கள் பரவியேத்தப்பள்ளிகொள்ளுமப்படியிலாங்கே, திவ்வியமாமரவணையிற் பள்ளிமேவித் திருவீர ராகவனுந் திகழ்ந்தானன்றே. (கஅ)

ஓங்குகங்கள்பலகோடிநீங்கமீண்டுமுற்றரியைத்தொடர்ந்தவினைபாறும்வண்ண, நீங்கிடவேதோன்றியருள்கூர்ந்தபின்னுமின்மலன்மால் வினைநாசன் றன்னின்மலனி, யாங்கிதுபல்லாழியுடன்வாழுநாளி லத்தலத்தோ ரீதழியுமென்றுய்ந்தங்கட், பாங்குறவேய்நீழலின்முன்முனியாயெந்தைபால்வாசியறிந்தருள்செய்பரிசுசொல்வாம். (கசு)

மால்வினைநாசச்சருக்கமுற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-உஉக.

---

*எவ்வுளென்பது திருவெவ்வுளூரினை.

## பால்வாசியறிந்தசருக்கம்.

முன்னாளிலறங்கள்சொன்னமுதல்வனாரிங்ஙன்மன்னு
மன்னாளிற்குன்றாவூக்கமனைத்திறத்தவனோராயன்
பன்னாளிற்பதியின்மேற்பாற்பால்வனப்பதிக்குநாம
மிந்நாளுமெந்நாளுங்கண்டேத்துகாரணையென்பாரால். (க)

ஆசிலப்பதியின்மேவுமாயர்கோனவன்றன்னும
மோசையான்வரியகோனென்றோதுவரவன்றன்முன்ன
மாசின்மாலவற்றொடர்ந்தவல்வினைபோக்கியாண்ட
வீசன்மற்றிவனென்றாருமியம்பிடவெய்திக்கண்டான். (உ)

கண்டதவ்வயினீள்காதல்கைமிகக்களித்துப்போற்றி
மண்டனிற்சென்னியாரவணங்கிவாழ்ந்தன்றுமுன்னா
வண்டர்நாயகனைநித்தமாதரவதனாலேற்றி
யெண்டிசையோருமேத்தவின்பமுற்றிருந்தங்கோர்நாள். (௩)

வேறு.

ஆயதன்றன்செல்வத்துக்களவுகாணாவரியகோனெனப்பெரியோன்மகவுவேண்டி, மேயவருஞ்சிவபெருமான்றன்னையேத்திமேவினனங்கவன்மனைவிவிமலைதன்பாற், சேயமலர்த்திருவெனவோர்புதல்வியாருஞ் சிந்தைகளிப்புறவந்துசெனித்தாரன்பின், தாயரொடுதந்தையவர்குணநன்காய்ந்துதாவில்குணவதியெனும்பேர்சாற்றினார்கள். (௪)

மற்றையருமாயர்குலஞ்செய்தமிக்கமாதவத்தின்பயனேனுங்
கவளர்ந்துவாய்ந்து, பொற்புடைய முலைகோங்கி னரும்பை
யேய்ப்பப்பொங்குமணியழகுபுவிபொழியமல்கு,கற்பகத்தின்
சுரும்பேருமுகமுங்கோவாக்கதிர்முத்தமெனவிளங்குகன்னி
மின்னும், விற்புருவக்கொடியிடைமான்மெனுநாளில்வேட்க
வொருமகற்காயர்கேட்கவந்தார். (ரு)

வந்தவரையெதிர்கொண்டவ்வரியகோனுமாபுகுணமாய்
ந்திசையவந்தோர்தங்கள், சிந்தைமகிழ்ந்துடன்மீண்டுசெல்
லுமுனேசென்றவரன்பிற்கேட்டுச்சென்றபேரும், பந்தமு
டனிப்பரிசாவதுகேட்டாரும் பணிமொழியையணங்கென்று
பயந்தார்சால விந்துபதிகுணவதியாரிருக்குநாளிலீன்றதாய்
தந்தையுமாங்கெழில்வான்புக்கார். (சா)

இப்பரிசுகேட்டவருந்தந்தைதாயுமிறக்கவருகுணவதியா
ரிரங்கியேங்கிச், 'செப்பரியதுயரெய்தியிறந்தபோக்குச்செய்க
டன்களுளவனைத்துந்திருந்தச்செய்தோங், கொப்பிலுயர்சுற்
றத்தார்தேற்றத்தாமங் கொருபரிசாற் றுயர்ங்கியுடல்பொய்
யென்னத், தப்பறவேயுணர்த்துபிறப்பிகழ்ந்துநோக்கச்சத்தி
னிபாதஞ்சாருந்தன்மையாலே. (எ)

மேவுற்றவெல்லையிறன்செலவந்தன்னைமேதினிமீதறஞ்
செய்யவிரும்பியோங்கு, காவைத்துங்குளந்தொட்டுநன்னீர்
பெய்துங்கன்னிதானங்கள்பலகருதிச்செய்தும், யாவர்க்கு
மறச்சாலைகட்டியன்னமிடுவித்துமுள்ளபொரு ளெல்லாமிவ்
வா, றேல்வைத்தங்கூருணர்போலோங்கியெங்குமூறுமிருவினை
தொலையாயொத்தாளன்றே. (அ)

ஆங்கறஞ்செய் வாட்குவயதாருருக வாதிபிரானவட்க ணெதிரருளிச்செய்வா, னீங்குனேயுமாட்கொள்வான்வேண் டிமாதேயின்னவிடையூறடையாவண்ணநண்ணி, நீங்கரிய மணம்விலக்கிவிட்டேமாதே நீயிதனேயுணர்ந்தருள்செயென் றுநீங்கித், தீங்கிறுயி லுணர்ந்தின்று முதல்வன்போகச் சிவ நெறிசேர்ந்தவநெறியிற்சேராராகி. (கூ)

கோளில்புகழாயர்குலவிளக்கேயன்னகுணபதியார்கனவி னிலேகுறித்துக்கொண்டு, நீளுமொளி யுடைகுடச நீழன் மேவு நித்தனடி சென்றிறைஞ்சி யேத்திப் போற்றி, நாளு முதிர்ந்தோங்குசிவபத்திபூண்டு நண்ணுமெழி னீறணிந்துநம் பாதென்று, மாளுமுடற்பிறப்பறுக்கவல்லாருண்டோமண் ணிலெனவெண்ணிமிகவாழுநாளில். (கo)

தன்னிகரில்லாவிலிங்கமூர்த்திதன்னேத் தண்மதிமுன்னுமு தாட்டியுய்ந்தவண்ண, முன்னதனேயுணர்ந்தவர்கள்கூறக்கே ட்டிம் மூர்த்திதனக் கிதமிதொவென் றுகித்த, மென்னினை யின்பாலடையவியலாகுமில்லேவிதிப்படிபூசித் திடுவோமொன் று, மன்னுபெருந்துயரொய்திகிற்கவங்கண்வருமிதழிநிழன்மு கியாய்வள்ளல்வந்தான். (கக)

வந்தவருண்முநிவனடிவணங்கிவாழ்த்தி மாறில்குணவதி யாருமகிழ்ந்தன்போங்கிச், சுந்தரனேயெங்கிருப்ப தென்று கேட்பத்தொன்றுதொடவிங்கிருப்போமென்றுகின்று, னிந்த வுயரிலிங்கத்துக்கெம்பாலீந்தாலின்பமுறவாட்டுதியோவென் றுரின்ற, வந்தமிலா னன்றதுநீவொடுவாவென்றுஞங்கவர் பாலகங்குறுகிவாங்கியீந்தார். (கஉ)

அண்ணலுமப்பால்வாங்கியிலிங்கமூர்த்திக்காட்டியேமஞ்ச
னமுமாட்டியாடை, வண்ணமுறமேவசாத்திக்கந்தஞ்சாத்தி
மலர்மாலைபலசாத்திமகிழ்ந்துநோக்கி, நண்ணமுதுபாலினீர
டைக்காயாதிநற்புகையோடொளிகவுரியவையுநல்க, விண்
ணவரு மண்ணவரும்விரும்பியேத்தவியன்சிவபூசனை யுலகில்
விளங்கச்செய்தான். (கங)

நாடோறும்பலவேறுவகையாய்ச்செய்யநயந்துகுணவதி
யாருநண்ணிப்போற்றிப், பீடாரும்பால்கொடுத்துநியமமாகப்
பேராயரேவல்செயும்பெரியோராம்பெண், ணீடாவின்றிறம்
பெருகிப் பிணிகணீங்கி நிதியோங்கக் குணவதியு நியமமாக,
வாடாதங்கொருநாள்போனெடுநாள்வைகவறள்காலம்பெருக
மருவிற்றன்றே. (கச)

வானமழைதான்பொழியாநிலைமைதன்னான்மன்னுயிர்கள்
பசிவருத்தந்தன்னையெய்த, வீனமில்பல்கிளைகளூறுதுயரமெ
ய்தவிரங்கிமிகவுள்ளபொருளெல்லாமுன்னே, போனதுபாலி
றைவனுக்கு வேண்டுமென்று புண்ணியமாதேவியரு மெண்
ணியன்பா, லானிலுறுபாலனைத்துங்கொடுவந்தீயவம்முநிவ
னதுவுணர்ந்தங்கருளிச்செய்தான். (கரு)

அரியகோன்றிருமகளார்வதன்னோக்கியருள்கூர்ந்துன்பால
னைத்துமரனார்தாமே, மருவிடுதற்கேதராலாலுற்றோர்க்கீயவ
கையில்லையுன்றனக்குமாசில்காசொன், றிரணியமாநாடோறு
ந்தருகோமுண்டிங் கெமக்குமிக லதற்குவிலையென்றெண்ணு
தே, பொருள்புரிகாசொன்றுமருதிதுவாங்கென்றுபுகன்றீய
வாங்கியடிப்போற்றிப்பின்னும். (கசு

உன்றனதுபானியமங்குன்றுமார்க்கமோதுமிணைகாப்ப
தற்குமுதவினேமீ, தென்றுமுனியருளலுமொத்திறைஞ்சியே
த்தியேசில்வணிகன்னிதிக்கோனென்போன்றன்பாற், சென்
றகனையுறமாற்பிவேண்டிற்றெல்லாந் தீதறவேயுடன்கொணர்
ந்துதினங்கட்டோறுந், துன்றுபெருங்கிளைகளுடனெவருமுய்
யச்சோறளித்துக்கலிதுலைத்தார்துன்பமில்லார். (கஎ)

இவ்வாறுகலியகடிந்துவந்தோர்க்கெல்லாமில்லையெனாதன்ன
மளித்திருக்குநாளிற், செவ்வாய்மையுணராதுகூலிக்கானின்
றிறமெய்க்குமானுயர் தெரியாவண்ண, மவ்வான்கள் கறந்த
பாற்கவர்ந்துநீர்வார்த்தங்கானிற்சுமந்துவரவதுநோக்காது,
வெவ்வாளங் கரந்தொளிருமுனிமுன்சென்றுமேவியபால்யாவு
முளம்விரும்பியீந்தார். (கஅ)

அதுகண்டுமுனிவடிவுகொண்டமெய்மாதிபிரானுமவர்க்
கருள்பொற்காசிற், கதிர்கொண்டமாற்றொன்றுகுறைவாய்
நல்கக்காதலினாலறியாதுகைக்கொண்டங்கட், டுதிகொண்டு
விடைகொண்டுநடைகொண்டேகித்தொல்வணிகற்றேடவ
ன்றோன்றனின்று, பதியொன்றுக் கவர்சென்று ரொன்றே
டெல்லாம்பகர்ந்தினிதென்றனைத்துமவர்பகரக்கேட்டு. (க௯)

குணவதியாரிசைந்ததின்றுபொற்காசென்றுங்கோதினிதிக்
கோன்செய்கைகொடுத்தாற்சேயும், பணிவொடுகாசுளவனை
த்துந் தந்தைசொன்ன படியீந்து நாளுமவன் பாரான்வைத்
தான், மணமதிலார் தங்கணக்குக் கேற்கவாங்கி மற்றதற்கு
வேண்டுவனவரச்செய்தாக்கி, யினிப்பில்கறிசோறடையவெ
வற்குநல்கியெய்தரியவறம்புரிந்தாங்கிருக்குநாளில். (உ௦)

எப்புவியிலுள்ளோருமதிக்கமன்னியேசில்வணிகேசர்குல மிலங்கவந்து, செப்பரியபுகழ்பூண்டநிதிக்கோனென்போன் சென்றநிசையநிற்கருமகண்ணிப்பின்ன, ரப்பணிசெஞ்சடை முடியனருளான்மீண்டுமணைந்துதன, தகத்தடிசிலருந்தமற் றங், கொப்பிறனையனையவர்முனுற்றுநோக்கி யோசைமிருத் தழைத்தவனேடுரைக்கலுற்றான். (உக)

யானைகன்றபின்புகுணவதியார்மாறுமொளிதிகழ்பொற்கா சுதவறின்றியென்றுந், தான்வருமோகூறென்றுசாற்றக்கேட் டதனபுதல்வன்வருமென்றுந்தப்பாதென்ன, வானவைகாம் பார்த்திடுவோங்கொடுவாவென்றங்கருட்டந்தைதேய்கொண ரவிழித்துநோக்கி, யீனமுளதிதுவந்தவாறேதென்றுங்கியம் பிடவென்றெழிற்புதல்வனியம்பலுற்றான். (உஉ)

பங்கமில்சீர்குணவதியார்தரும்பொற்காசிற்பழுதில்லைத்தா மதங்கள்பண்ணுதேயென், றிங்கெனக்கன்றருள்செய்தீராத லாலேயானுமதுவேசெய்தேனிதுவேயல்லா, லெங்களிடத் தொருகுறைக டானுமில்லையிதுசெய்திடென்றுரைப்பவென் ஞேவீரிங், கங்கவர்தம்பாற்குறைவுவருமோவாராதாச்சரிய மெனவணிகனயருங்காலை. (உஙு)

எந்தைபிரானருளுங்காசென்றுமாறவென்றும்பொற்குண வதியார்சென்றங்கெய்தி, வந்தநிதிக்கோனவனைக்கண்டெப் போது வந்தீர்நீர்நுங்கருமம் வாய்த்தவோதா, னுந்தமக்கெ ன்னுரையுமெனவுரைத்தானன்றென்றுறுகாசையெழில்வணி கனுயர்செங்கையிற், றந்தமுறவேகொடுத்தாளதனைவாங்கித் தப்பாமலவ்ஞேக்கிச்சாற்றலுற்றான். (உச)

முன்னமெலாமீமாறுகாசிதல்லமொழியுமிதுவந்தவகை யாதிதென்ன, வென்னுடையமகன்கையில்நீர்கொடுத்தவெல் லாமிப்படியேயுள்ளதென்னவென்றுகூற, வன்னமொழிகுண வதியார் நாள்தோ றென்பா லாசின்முறி யவனருள்கா சல்லா தில்லை, யின்னமுநீர் பார்த்துரைத்துநோக்கிச்சொல்லுமென் றுரைத்தாளவர்தமக்கொப்பில்லாதாரே. (உரு)

அம்மொழிகேட்டெழில்வணிகனிதிக்கோனென்சொலதிற் குறைகளில்லையென வறைந்தான் கேட்டுச், செம்மைநெறி குன்றாதநீதிமாது நீதில்குணவதியெனும்பேர்தெரிவைதேறி, யெம்முடைய நிதிநிலையா முறிவன்பாற்சென் றீதுரைப்பனெ னவவன்பாலெய்திப்போற்றி, நும்மருளா லருள்காசு மாற்றி லூனநுவன்றனனிவ்வணிகனென நுவலும்போது. (உசா)

நேயமுறுகுணவதிகேளிறைக்குநல்குநிரைதருபால்கவர்ந் தாயர்நீர்வார்த்தீந்தார், நாயகிநீ யவர்க்காயு மவர்செய்குற்ற நாடாததாழ்வதனுளுநல்குஞ், சேயசுடர்ப்பொற்காசுமாற் றுகுன்றச் செய்ததற்கு *வாசியறிந்தீந்தோமென்ற, வாயத னைக் கேட்டெதிரோர் மாற்றமின்றி யஞ்சிமிக நெஞ்சமழிந் தறையலுற்றாள். (உஎ)

நித்தமும்மெம்பாலிறைவற்காக்கிக்காக்கநீடருள்கொண் டெய்தினைபின்பஞ்சமெய்த, சித்தமகிழ்நிலையறிந்துபொற்கா சொன்றுதினமளித்தாய்பாலிடைநீர்சேர்தலாலே, யத்தபழி யெனையடையாவண்ணம்வாசியறிந்தளித்தாய் நின்னருளுக் களவுமுண்டோ, மெத்துபொருள்வணிகனுறவேண்டுமென் றுவிடைகொடுபோயாயருளம்வெருவநோக்கி. (உஅ)

*வாசியென்றது ஈண்டு பொன்மாற்றுக்குறைவினை; "வாசிதீர வே, காசிநல்குமீர்" என்ற ஆளுடையபிள்ளையார் திருக்கடைக் காப்பானுமுணர்க.

கனபாலில்நீர்கலந்ததென்னவென்னக்கலங்கியேபிழைபு
ண்டுகொலென்றார்கள், மனதாலுநினைவர்களோமாற்றுவாசி
வணிகனுக்குக் கணக்குவா வகைசொல்வீர்நீ, ரெனவாயர்
தரவாங்கி நல்கமற்றுங் கியலுமுநி பூண்மீண்டு மிறைஞ்சி
நோக்க, வுனதார்வங் கண்டுமுநி யுருவானோ மென்றோங்கு
முநியாங்குலிங்கத்துடன் சென்றானால். (௨௯)

ஆங்கதுகண்டெழின்முநியையிறைவனென்றிங்கதிக்திலே
னின்றருளாலறிந்தேனென்று, தாங்கரியவிருப்பினொடும்பர
விப்போற்றித் தாழ்ந்தெழுந்திப் பொய்வாழ்க்கைத்தவிராயெ
ன்று, ளோங்குசிவனருள்கூறவருளினாலேயும்பர்தருமலர்மா
ரியிம்பர்மேற்பாற், பாங்குடையமண்ணுலகும்விண்ணுமேத்
தப்பரலோகமினிதெய்திப்பயின்றாளன்றே. (௩0)

நாயகனுந்தன்னைத்தான்பூசைசெய்கைநன்றிருந்ததென்ற
தனைநாடும்போது, தூயசிவபூசைசெயுமென்றரற்குச்சொல்
லியதோர்குணவதிமேற்சோர்விலன்பே,வாய்த்ததிருப்பாசூ
ரின் தலத்துச்சிரோ வவ்விலிங்கமூர்த்தியினதருமைதானோ,
தேயமிசை பூசைசெய்தோர் போதாதென்றோதெரிவரிதால
தினுண்மைதேருங்காலே. (௩௧)

மின்பரவுசடைதாழவுமையாள்காணவிண்ணோர்கடொழு
தேத்தமண்ணோர்தங்கள், துன்போடநாடுவார்காணவந்துது
ன்னிதழிக்கீழ்முநியாய்மன்னலாலே, யன்பாரவாசிபுரியென்
றாரங்களாதியார்வாசி[illegible]றிந்தருளினாலே,நண்பார்க் குவாசியறிந்
தருள்வீரென்றுநவின்றார்களவர்க்கெங்குநாமந்தானே. (௩௨)

வேறு.

ஓங்கிரும்புகழானீடியொளியிரும்பதியிற்பின்வந்
தேங்கியவருள்சேர்சேடச்செல்வர்மெய்ப்பூசைசெய்யப்
பாங்குடனென்றுமுள்ளபாஞ்சுடர்யிமைப்பிற்றோன்றித்
தீங்கறவீற்றிருந்ததிறமினிசெப்பலுற்றும். (௩௩)

பால்வாசியதிந்தசருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௨௫௯.

## வேயிடங்கொண்டசருக்கம்.

ஓதுமிக்கலியுகத்திலோங்குமத்தானந்தன்னிற்
சோதி*மல்லிகையேபோற்றுயவேய்க்காடுமூடிற்
றுதலால்வேயாரண்யமானபேர்தானுமெய்திப்
பூதலத்தோர்கள்யாரும்போற்றிடப்பொலிந்ததன்றே. (௧)

இலங்குமக்குடசங்கொன்றையேயுமவ்வேய்வனந்தான்
விலங்கவோரிடமுமின்றிவிழிநுழையாமலோங்க
வலம்படுபுலியுமானுமேனமுமமையுமற்றும்
விலங்கொடுபறவையாவுமிக்குறமேவிற்றெங்கும். (௨)

அவ்வனத்தயலிலெங்குமருங்கிளேயோடுமேவும்
வெவ்வலியெயினர்காடுவெட்டியேதினைகள்வீசச்
செவ்வியின்முளைத்தெழுந்துதினையுமோர்வனமேயாகக்
கவ்வையின்மனத்தராகிக்களித்தனரொருங்குசால. (௩)

*மல்லிகையென்பது மலைமல்லிகையினை.

இப்பரிசுறையும்வேடரிடர்கடிந்தினிதுகாப்பான்
செப்பும்வெள்ளாளாதன்னிற்செறிகழற்குன்றனென்பான்
ஒப்பின்மாதவன்முன்செய்தானேனும்வேந்துலகுதன்னிற்
றப்பிலாதோதும்வேலன்றன்னையேயுன்னுஞ்சீரான். (௪)

நீடுற்றவிசயன்செல்வனிகரிலாமேன்மைதன்றன்
வேடர்க்குமேவப்பெற்றுவிளங்கினன்குமரவேளை
நாரேற்றுவழிபட்டேத்துநன்மையான்முன்னெம்மானைச்
சேடச்செல்வருமாயேத்திச்செல்கதிக்கினியனானான். (௫)

இங்ஙனமிவர்களியாருமிருந்தனரிருந்தபின்னை
வெங்கனலுருவிற்றோன்றும்விண்ணவன்றன்னையின்ன
மிங்ஙனமென்றுகீழ்மேலிருவர்காணாமைநின்றோ
னங்ஙனமிலங்குசோதியணிவிடையாகவெண்ணி. (௬)

எப்புவியோருமுய்யவிலங்கருள்விளையாட்டாலே
யப்புனத்தினையுண்ணியழித்தனனெங்குமெங்கு
மிப்பரிசதனைவேடரியாவருமுணராராகிச்
செப்பருந்துயரீடிச்சேவடிநாடிக்கண்டார். (௭)

அழித்தசேவடிச்சுவட்டையப்புனத்தன்றிவேறு
வழிக்கொளக்கண்டாரில்லைமாதிரமதனிலோடிப்
பழிப்பறவெங்குநாடிப்பார்த்தனரெங்குங்காணா
ரிழித்தகவுடனேநேருற்றெய்ததிசயித்துமீண்டு. (௮)

வந்துயர்வேடரியாரும்வருந்தியோரிடத்தின்வைகச்
சிந்தைநோந்தவரின்முன்னோன்செப்புவான்யாருங்கேட்ப
விந்தவஞ்சனைபோலிந்நாட்கேட்டிலோமென்றார்நின்று
ரந்தவெஞ்சேவையட்டாலாநமக்கிருப்பிங்கென்றார். (௯)

துள்ளிநம்புனங்களெங்குஞ்சூறைகொண்டிட்டசேவை
மெள்ளவேயொளித்திருந்துவெல்லநம்வேந்தன்வேண்டுங்
கள்ளொழுகிழங்குமீட்டிக்கனிதினைச்சோறுடைய [ற்றார்.
வுள்ளங்கொண் டேமன்னர்க் குரைப்பவென் றொத்துப்போ

மற்றவருண்டிகொண்டுவந்தபின்சுட்டிநீடு
பொற்புறுமரசனாரும்புரத்திடைசென்றுபுக்குக்
கொற்றவன்குன்றனென்பான்குரைகழல்வணங்கிநிற்ப
விற்றநாணீங்களியாருமெய்தியதென்னையென்றான். (௧௧)

என்றுதம்மிறைவன்கூறவெய்தும்வெவ்வேடர்மிக்கோன்
வன்றிறற்குன்றன்பாதம்வணங்கிவாய்புதைத்துச்சொல்வான்
வென்றிசேர்கோவேநாங்கள்வித்தவோங்கேனல்கொல்லை
வென்றொணுதழித்ததங்கணொருவிடைபின்னுங்கேட்டி.

அப்புனத்தன்றியெங்குமவ்வடிநாடிற்காணோ
மொப்பரும்புதுமையீதிங்கொன்றுமங்கறியோமென்னச்
செப்பருந்துயரமுற்றான்குன்றனுஞ்செலீறவேட
ரிப்பொழுதெழாயேனாளையெனவெலாமழிக்குமென்றார். ௧௩

அவர்மொழிகேட்டபோதேயதற்கிசைந்தார்கடேர்ந்து
சவரர்கடலைவனைதனிப்பெருங்குன்றனென்பா
னெவரையுமெழுகவென்றானெழுமுரசெறிவித்தான்கேட
டெவரிபோலெழுந்தார்த்தெங்குமுயர்சிலைவேடர்கூட்டம்.

காலினிற்றொடுதோலிட்டுக்கையினில்வெவ்விலேந்திக்
தோலுடுத்தம்புத்தூணிதோள்கொடுமுதுகிற்கட்டிக்
கோலநற்சுரிகைசேர்த்துக்குன்றனுமின்றுன்சேர்வான்
பாலிருமருங்குமீண்டிப்பணிந்துசென்றணைந்ததன்றே. (௧௫)

ஒன்றியவேடர்கூட்டமுயர்மழுக்கொடுவாள்கொண்டு
துன்றியவலைவாரெல்லாஞ்சுமந்துவந்தெய்தக்கண்டு
குன்றனன்முன்னம்போகக்கோடிறுவெள்ளம்போலச்
சென்றனசேனைவெள்ளந்திசையெலாமசையவோங்கி. (௧௬)

கொம்பொடுதுடியின்வேயின்குழல்களுமுரசுமுற்ற
பம்பையுமுழங்குமோசைபாரொலாநிறைந்துவானத்
தும்பருமஞ்சவிஞ்சவொலித்தவவ்வோசைதன்னி
லிம்பரின்வீரராகவெங்களுமுற்றதங்கே. (௧௭)

தினைச்செயலதனிற்சென்றுசெம்புவேடுவர்கள்குன்றன்
றனைத்தொழுதரசேயெங்கட்சார்ந்தவர்பேசாராங்க
ணினதகொடுஞ்சேரலாகாதென்பினேசெல்கவீங்கள்
புனத்துமுன்செலுமினென்னவவருநன்றெனமுன்போனார்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

போனவர்வருமுன்னெக்கைதபொருவிடைவடிவிற்போந்து
கானவர்க்கெல்லாங்கோபங்கனத்தெழவேண்டிகின்ட
வேனலின்புனத்துணங்ணியெரிவிழிச்சிதறநோக்கி
யானைவெஞ்சியம்வேங்கையேங்கவாங்காரித்தோங்கி. (கசு)

கூரிருகோட்டுவெள்ளிக்குன்றெனநின்றுசீறிப்
பார்மடுக்கொளக்குளம்பாற்பறித்தெறிந்தோடியாடிப்
பூரிமாமரங்களியாவுமுறிந்தெழமுட்டிவீசிச்
சீரியகொல்லையெல்லாஞ்சிதைத்தனசிறிதின்முக. (உ0)

தூரத்தேமுன்செல்வேடர்தோன்றியவதனைவெள்ளைக்
காரொத்தங்குலவியார்க்குங்காட்சியதெனவேகண்டு
சேரச்செல்லாதுமீண்டுசென்றனர்குன்றன்மாடு
சோர்வுற்றுநெஞ்சமஞ்சிச்செசூல்லுவோமிதனையென்று.

வேறு.

வேடர்சென்றுகுன்றன்முன்விளம்புவார்கள்வெள்விடை
மாடெனும்பிறப்பிலுள்ளதல்லவானின்மீதெழுந்
தோடியாடியெங்கணுமுகப்புகின்றதென்றலுங்
காடுகாவல்செய்யுமென்றுகட்டுரைத்துவிட்டனன். (உஉ)

வேரன்மிக்ககானமுமேனல்வித்தகொல்லையும்
வாரொழுக்கிதுடியெறிந்துவலைதுடக்கிமன்னுநீர்க்
காவலற்றகாடுவேடர்காவலானதென்றுவில்
வீரன்மிக்ககுன்றன்முன்னர்மேவிவுட்புகுந்ததே. (உங)

புக்கபேர்களியாவரும்பொருக்கொணாதுமெத்தெனப்
பக்கமேவளைந்துகொண்டுபோருமென்னவேடருந்
திக்கெல்லாம்வளைந்துசென்றுசேரவேறுசீறியே.
யக்கணின்றுலாவல்கண்டதிர்த்ததட்டிவந்தனர். (௨௪)

திங்கண்மண்டலந்துறச்செறிந்துசாலமுனிவுறத்
தங்கணின்றுலாவுமேறதன்முனின்றதட்டியே
வங்கைவார்சிலைக்கைவேடர்வந்தவாறுமாறிலாச்
சிங்கமீதுயானைமாசினந்துசெல்வதொத்ததே. (௨௫)

இவ்வணமடர்ந்தபோதுமிக்கவும்பதைப்புறக்
கைவசம்வராதெனக்கலங்கியெய்யவஞ்சியே
மைவணமிலங்குமேனிவன்றிறங்கொள்குன்றன்மற்
றெவ்வணந்தெரிந்துயாருமெய்யுமென்னவெய்தனர். (௨௬)

எய்யும்வாளியாவதுமிலங்குபூவின்மாரியா
மையிலேத்தடித்தன்மேவமாறிலேறுசீறியே
வெய்யகுன்றன்வேடரோடமீதுடத்திவ்வையமு
முய்யவேயினூடுபுக்கொளித்தவோடும்வேடர்முன். (௨௭)

நீடுவிற்கைகுன்றனின்றுளஞ்சிமிஞ்சுகின்றிடா
தோடுவோரைநில்லுமென்றுரைத்தருத்தியின்றியே
வாடிநொந்துமீளவங்குவந்துவேடர்தம்மொடுங்
கூடிநின்றுதன்னுளங்கொதித்தழன்றுகூறுவான். (௨௮)

ஆவதேதினாலையோவறிந்திலமுறிந்தனம்
பாவமல்லவோசொலீர்பயந்திடாதோரோறுதாம்
யாவர்நம்மையென்னுவாரதற்கிடைந்தனமெனிற்
சாவுமுய்வுமிங்குநந்தமக்குவேறிலென்றனன். (௨௯)

என்றுவேடரோடுகூறியேறுநின்றதெங்ஙனங்
குன்றனேறுநின்றபேர்கள்கூறுவாரவ்வேறுதான்
சென்றவாறதெங்ஙனந்தெரிந்ததில்லையென்றலு
மொன்றுகாடதூடுதேடுமோடியென்னவோடினார் (௩௦)

விண்டுநீடுகோடுமோடுவேடரோடிநாடியே
கண்டிடாமைகூறநெஞ்சுகன்றிநின்றகுன்றனுங்
குண்டொர்தெய்வநாதனென்றுரைப்பவுள்ளதென்றனர்
தொண்டனாதல்வேலுடைச்சுவாமிதேவராளனாய். (௩௧)

வந்துகூடிநின்றுவாய்மலர்ந்துகுன்றனீமிகச்
சிந்தைநொந்திருந்ததென்கொல்செப்பிடென்னவொப்பிலா
விந்தமன்னவேறுகாணவேதுசொல்லுகென்றலு
மிந்தவேயினூடிருக்குமென்றுமுன்னெணிச்சொல்வான்.

எல்லையிவ்வரைப்பினுளிருக்குதேறுகாணலா
மொல்லைவேய்கள்யாவும்வேருடன்றவெட்டுகென்றெனச்
சொல்லயாவருந்துணிந்துசூழுவார்வலித்தொடர்
மல்லன்ஞாலநோயெலாமாயவெட்டவெண்ணினார். (௩௩)

எண்ணினின்றகாலையினிலங்குவேலனிங்கிவர்
கண்ணின்முன்மறைந்தனன்கடம்பனென்றுதேறினார்
அண்ணலுமிலங்குவேயுளங்கமர்ந்திருந்தனன்
விண்ணுளோருமஞ்சினார்கள்வேடர்செய்கைநாடியே. (௬௪)

வேலன்வேடனாகிவந்துவேடரோடுகூடலால்
ஞாலமீதுவேலனங்குதித்ததெண்ணிநாடியித்
காலமேவுநாமமின்றுதானுமுண்டுகூறவே
யேலும்வேடர்பின்னரங்ஙனென்செய்தார்களென்றிடில்.

இட்டவார்வலைப்புறத்தியாரும்வேலியாகவைத்
தொட்டினார்களோடும்வீசியோங்கல்சூழெரிந்துபோ
யெட்டினேடிரண்டுமேர்யிருந்தவனிடங்கொள்வேய்
வெட்டினான்மடுங்கல்போல்விளங்குகுன்றன்வெட்டலும்.

மேருவேறுடும்பறித்துவீழ்வபோலவீழும்வேய்
வாரிபோன்முழங்கவூடுமென்னுமாதிசென்னிமேற்
சோரியாறுபோலெழுந்துசோரவேய்கள்வெட்டினோர்
பாரின்மேல்விழுந்துமெய்ப்பதைப்பறக்கிடந்தனர். (௬௭)

வேறு.

இப்பரிசவர்மயல்பெற்றனரொங்கணுமுறுவினையைத்தெற
வப்பர்சிவனுயரிச்சையனுற்புதவருளினுருக்கொடொ
ரொப்பறுசடைமுடியிற்சுவடுட்கறைசெறிதறநித்தமெய்
துப்பெனமிளிரொளியிற்றிகழ்சுவெலுமுடனினிதுற்றனன்.

அம்பரமதன் மிசையெங்கணுமந்தரமலர்மழைசிந்தவே
வும்பருமரியயனுந்திகழொண்சடைமுடியருமுன்புகழ்
தும்புருமுதலியரன்போடுசுந்தரவடிவதுகண்டுறு
தம்பரிவினிலுயரங்கணசங்கரசயசயவென்றனர். (௩௯)

சங்கரவுமையுடன்னன்பொடுதங்கிடமுடையதொரங்கண, வெங்கனலுருவினிலெங்கணும்வெண்பொடியணிபரமின்பொலி, திங்களொடெழிகமழ்கங்கைகொள்செஞ்சடைமுடியவவுய்ந்தன, மெங்களதிறையவவுய்ந்தனமென்றனரனைவருமெங்கணும். (௪௦)

நத்தனகயமிசையிற்பயினற்சதமகனொடுபத்திகொள்
சித்தருமுனிவருமெத்தியசெக்கரின்வடிவதுபெற்றொளிர்
மத்தகவிழியுடையற்புதமற்றிணையிலதொருவித்தக
வுத்தமவருளெனமுற்றொருழுதுற்றவெவ்வினைபலவற்றனர்.

வெந்திறலொடுபுகழ்கொண்டுயர்விண்டுறுகழைதெறுகுன்றனு, மந்தமிலெயினருமன்புடனஞ்சலிமுடியடிநெஞ்சுகொண், டெந்தைதன்னெழில்விழியின்னெதிரெங்கணுமெழிலருள்பொங்கின, பந்தனையுடல்வினையென்பவைபண்டையதறவுறவந்தன. (௪௨)

வேறு.

என்னையாளுடையநாதனெழில்கொளுக்கெயினர்மீது
மன்னலாலவர்தமேனிவண்ணமும்வேறதாகிப்
பன்னும்வேதகத்திரும்புபைம்பொனனதுவேபோன்றார்
முன்னைநீள்வினையுமங்கண்முழுவதுமகலவாங்கே. (௪௩)

வாய்மைமெய்ஞ்ஞானமன்புமகிழ்ச்சியாசாரஞ்சீலந்
தூய்மைநல்லொழுக்கமேன்மைதுறவுறவடக்கம்பற்றித்
தீய்மையில்செய்கையாவுந்திருந்தியவங்கமாறே
டாய்மறைசேட்ச்செல்வராய்ப்பொருளாயவெண்ணி. (சச)

தாயீன்றபிறவிமுற்பேர்தவிர்த்துவேறீந்துதன்றன்
வாயீன்றமறையுநல்கிவைத்தவர்க்கிமையோர்சென்னி
மேயீன்றவன்ஞர்பேதம்வேயீடங்கொள்கையாலே
வேயீன்றமுத்தனுமம்விளம்பினரெவருமன்றே. (சரு)

ஆயபின்சேட்ச்செல்வராமவரெவருங்கூடி
வாயுவும்வெயிலுமேனிவருத்துமென்றஞ்சிக்கோயில்
வேயினிற்கிழித்தமர்த்திவிரிந்துநீண்டிலங்குகின்ற
பாயினிற்சூழச்செய்துபரமனைத்தொழுதார்பொங்கி. (சசு)

குருதிதான்றாழ்விலாமற்கோலநீடுருவேடத்திற்
சொரிவதுமாயவென்றுதுடைத்தனர்துடைப்பமென்மே
லருவிபோற்பெருகக்கண்டங்கஞ்சியெம்மிறைவநீயே
மருவிதைநிருத்தென்றேத்தமறுத்துறநிருத்தினுல். (சஎ)

சிவனடியதுகண்டேத்தித்திருந்தியசேடச்செல்வ
ரவனியிற்செந்நீர்முன்னமனுசிதமகற்றிப்போக்கி
நவமுறுசோமதீர்த்தநண்ணிநீர்விதியினாடிப்
புவனநாயகனையங்கட்பூசனைபுரிவான்வேண்டி. (சஅ)

ஓங்குமாகமத்தினெர்த்தையுணர்ந்தருள்விதிகுன்றமற்
றேங்குமஞ்சனமுன்னைதிரவியமடவிற்றேடிப்
பாங்கினுற்பெற்றுதன்பேர்ப்பரிவினுற்பூசைசெய்து
தீங்கிறீபோம்பிபோற்றுச்சிந்தையுட்சிவமாய்நின்றூர். (சகூ)

தீதறுபூசையிங்ஙன்செய்தலாற்சேட்ச்செல்வர்
மேதினிமீதிலாற்குமேலவராஞரிங்கு
பேதையேனவர்தம்மேன்மைபேசிடப்பெறுமோகாழி
வேதபாலகர்தம்பாடன்மேன்மையும்பெற்றூரென்றால் (ரு0)

மற்றவர்பூசைசெய்துவணங்குதல்கண்டொரூம்
பெற்றவேயிடங்கொளெங்கள்பிஞ்ஞகன்மகிழ்வுற்றோங்கி
யற்றவரதனைநோக்கியாதிபேறருளைவாழ்த்தி
யுற்றுளமுருகிமற்றங்கொருதலத்திருப்பவுன்னி. (ருக)

சுந்தரச்சுயம்புலிங்கந்துன்னிடமன்னுமெல்லை
யைந்தொடன்பதுபாகத்துளாகுமென்றங்கணீங்கிப்
புந்திசேர்ந்தோர்தலத்துப்புக்குமற்றதற்குநாம
மைந்திருப்பதிகளாமென்றறைந்தினிதிருந்தாரன்றே. (ருஉ)

அத்திருப்பதிகளைந்தாயம்புவியுய்யமுன்னுட்
சுத்தமங்கலன்முன்னேங்குசோபநன்னெடுங்காலங்கள்
பத்தியோடிருந்துநேரில்பரமனைப்பூசைசெய்து
நித்தனன்முத்திபெற்றுநிலைபெறுந்தலமென்பாரால். (ருங)

அங்குறுசேடச்செல்வரத்தனேகித்தமேத்தித்
தங்குநாடன்னிஞேர்நாட்டமனியத்தமர்பொற்கோவி
லெங்கணுமாடவீதியெய்துவதெங்காளென்று
செங்கையாற்றொழுவார்தங்கள்கனவினிற்சென்றுசொற்ருர்.

என்றிறையருளிச்செய்யயாவருந்துயிலுணர்ந்தங்
கொன்றியகனவினுண்மையொருவரிலொருவர்கூறி
நன்றுளமகிழ்ந்திருந்தார்நாயகனுணையாற்சூழ்
நின்றவில்வேடரங்கண்செய்தனநிகழ்த்துகேளல். (ருரு)

வேயிடங்கொண்டசருக்க முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-நகச.

## கரிகாலன்பதிகாணுஞ்சருக்கம்.

தங்கள்கோவேறுவேட்டஞ்சார்ந்துமுன்சென்றபோதே
யங்குறுவினையையெல்லாமடைவினில்நோக்கலின்றிப்
பொங்கதிசையத்திஞேடுபோதறுபுனத்துளேன
லெங்குமுன்னையினுமோங்கியில்ங்கினவதுவுங்கண்டார். (க)

கண்டவப்புதுமையிங்ஙன்கண்டதேகாணேமென்று
திண்டிறல்வேடருள்ளந்தெளிவுறமாட்டாதச்சங்
கொண்டெனடுங்கிச்சொல்லுங்குழுவினர்பொறிகலங்கி
யுண்டியுமெம்முநாளின்றியோவியப்பாவையொத்தார் (உ)

மற்றவரிவ்வாறுள்ளமருண்டவசத்திற்செல்ல
வுற்றவர்தேடவஞ்சிக்கண்டுதம்முறைமைகொண்டேகிக்
கொற்றவன்மற்றோரெங்கேகூறுமின்றேறீயென்னச், சொற்
றனரனைத்துங்கெட்டோர்சோர்ந்தனர்சொன்னோர்போல.

பதைத்துளமவர்பின்சென்றுபார்த்துமற்றவர்கடங்க
ளிதத்தினிவாரரென்னுங்கெய்திமீண்டிருக்குநாளில்
மதக்கரிக்கரிகாற்சென்னிவண்புகழ்காஞ்சியென்னு
முதற்பதிதன்னின்மேவுமுறைமையோர்மறவன்சொன்னன்

அச்சொலைக்கேட்டபோதேயகமகிழ்ந்தாசைதூண்ட
நச்சமுற்பகழிவேடர்நமக்கிதுவுணர்த்தவல்லா
னச்சமில்வளவர்கோன்மற்றுதலானவன்பாலெய்தி
யிச்செயலதனையெல்லாமியம்புவமென்றுநாடி.  (ரு)

தேனொடுபுலியுன்றோல்கள்செழுமயிற்பீலிச்சும்மை
மான்மரைகரடியேனம்வயவரிவேட்டைநாய்கள்
யானையின்கோட்டுமுத்தமினமணிபலகொண்டேகி
மானவேற்கரிகாற்சென்னிவைகுமக்காஞ்சிபுக்கார்.  (சு)

புக்கவர்வளவன்மேயபொன்மணிவாயினண்ணித்
திக்கினிற்புதுமையுண்டித்திறமிறைக்குணர்த்துமென்ன
வக்கணம்வாயில்காப்போரதற்கிசைந்திடத்தெரிந்து
மிக்கபூங்கழல்றோய்பாதம்விதிமுறைவணங்கிப்போற்றி.  (எ)

வடதிசைநின்றுவேடர்வந்துநின்பாதங்கண்டு
படியிலாப்புதுமையொன்றுபகரவந்தோமிங்கென்று
ரடலுறுமரசரேறேயென்றுமீண்டடியிற்றாழச்
சுடர்நெடுவேலின்மன்னர்தொழுகழற்குரிசில்சொல்வான்.

அன்புகொண்டவரையிங்ஙனழையெனத்தொழுதுபோந்தார்
மின்பொலிகழற்கால்வேந்தன்மேன்மைகண்டிறைகொண்டே
பொன்கெழுமணியின்மாரிபொழிவதங்கொழியாவாயின் [கிப்
முன்புறுமறவர்தங்கண்முகமுமேநோக்கிச்சொல்வார். (கூ)

உங்களையரசன்காணவுவகைகண்டுளத்திலொல்லை
யிங்கழையென்றுரெம்மோடியாருமுட்போதுமென்ன
வங்குயர்வேடரியாருமனமகிழ்ந்தவர்களோடும்
பொங்கெழில்வாயினூடுபுக்கனர்மிக்கவன்பால். (கo)

சந்திரனனையசோதித்தரளவெண்குடைநிழற்றச்
சுந்தரமகுடமன்னர்துதைந்திருபாலும்போற்ற
வந்தமில்கவரிவீசவரியணையதனிலங்க
ணிந்திரன்றிருவினோங்கியிருந்தரசிலங்கக்கண்டார். (கக)

கண்டவருளத்திலோங்குகாதலாற்கைகள்கூப்பி
மண்டனில்வீழ்ந்திறைஞ்சிவருந்திறைவைத்துப்போற்றச்
செண்டினிற்கிரிதிரிக்குஞ்செம்பியனவரைநோக்கித்
திண்டிறல்வேடரிங்குச்சென்றதென்செப்புமென்றார். (கஉ)

என்றுமன்கூறக்கேட்டங்கெயினரின்மிக்கோரேத்தித்
துன்றலம்பாலியாற்றின்றூய்வடகரையிற்சாலத்
துன்றியீனுழையாதோங்குதூயவேய்க்கானென்றுண்டாங்
கொன்றியாங்கிருப்பமற்றங்குறுதிறமுரைப்பக்கேட்டி. (கங)

அங்கிளையழித்தவேடரொன்றதுவெம்மக்கிறைவன்கேட்டு
வந்தெயும்வாளிபூவாய்மறைந்தசேகாணுதோங்குங்
கந்தனார்தோன்றியிந்தக்கழைதெறிற்காண்மினென்றார்
சந்தியைவெட்டவுள்ளேதங்கினரிலிங்கஞ்சோரி (கச)

கான்றெனவேயின்வீழ்ந்தார்கண்டபின்பூவின்மாரி
ஞான்றனவிசும்பிற்றேவர்நண்ணினரெழுந்தார்பார்ப்பார் [ந்
போன்றனர்நிலையின்முன்னர்பொலிந்தனவெமக்கீதோன்று
தோன்றிடாதாகவுன்முன்சொல்லயாம்வந்தோமென்றார்.

இப்பரிசவர்களங்கணியம்பினரியம்பக்கேட்டே
யப்பொழுதுடலங்கம்பித்ததிசெயமெய்தியந்த
வொப்பிலொண்பதியைக்காணவுவகையுற்றெழுந்துசென்று
தப்பிலாமன்னனோங்குதமனியவாயினீங்கி. (கசு)

சேனையின்மன்னர்மன்னன்சிந்தனையுணர்ந்துசேனை
தானெழக்கடிதிற்சென்றுசாற்றினர்சாற்றக்கேட்டங்
கியானையும்படைக்கையாளுமிடைக்கிடைதேருமாவும்
வானெலாங்கொடிதான்மூடவந்தனவெங்குமெங்கும். (கள)

எங்கணுமிடைந்துஞாலமிட்டமறவெழுங்காலாளுட்
பொங்கியமதவாறோடப்பொருகளிற்றினங்கள்செல்கை
துங்கவெங்காடுசூழச்சுடற்கிரிக்குலமனேகந்
தங்களிற்கூடச்செல்லுந்தன்மையதொத்ததன்றே. (கஅ)

இயல்பெழிற்கடலுளுயிரேழுவதொன்றென்றுநீந்தி
யயமலிதிரையப்பாணீராயபேராழிதன்னின்
வயமுடிமன்னரெண்ணின்வையமேல்வருவபேசி
லுயர்பலவருக்கர்பல்தேருடனெழல்போன்றதன்றே. (கக)

இவ்வகைசாதுரங்கமெழுந்தனவெளியமண்ணைப்
பௌவமதெழுந்துசூழும்பான்மையிற்பொலிந்துசெல்லக்
கொவ்வையங்கனிவாய்மாதர்குமரவேளிரதமென்னச்
செவ்வியின்மகிழ்வுற்றண்டச்சென்றனர்நன்றிகாண. (உ0)

வளமலிதெய்வத்தேர்மேன்மன்னியேமுன்னும்பின்னு
மளவில்தேர்தானைசூழவணிமணிக்கவரிவீசக்
கிளரொளிக்குடைநிழற்றக்கெழுமெழிலழியர்ச்செவ்வே
விளவலைப்போலச்சென்றானிமையவற்கிறைவன்மன்னும்.

இன்னவாறெவருஞ்சூழவிலங்குவேற்கரிகாற்சென்னி [ப்
முன்னுறச்சென்றேகண்டான்மூங்கில்வன்கான்முன்னோங்கி
பொன்னெடுமணியுமுத்தும்பொருகரிமருப்புஞ்சாந்து
மன்னியவகிலுங்கொண்டுவருபுனல்பாலியாறு. (உஉ)

கண்டனைவிழிக்தங்கங்ணீர்காதலினுடியேறி
விண்டுவின்கானிற்செல்லமேவுமெய்ச்சேடச்செல்வர்
பண்டிறையருளிச்செய்தபதியணைந்தான்கொலென்றுட்
கொண்டுகந்தருளைவாழ்த்திக்கூடினரெதிரேசென்றார் (உகூ)

மங்கலம்பொலியவங்கண்வந்தமன்னவனைநோக்கி
யங்கையில்நீறுதங்கங்காசிகள்பேசமன்ன
னிங்கியாரிவர்களென்றங்கியம்பினனறிந்தோர்கூறச்
செங்கையாற்றொழுதன்புற்றுச்சென்றவருடனுங்கொன்றி.

கண்ணருமருள்பெற்றோர்கணன்முகமதனைநோக்கி
விண்ணொடுமண்ணும்போற்றவேயிடங்கொண்டானங்கிக்
கண்ணுதலிருப்பதெங்கேகாட்டுமென்றரசன்கேட்டா
னெண்ணுமேயவர்கண்மற்றங்குவனெனக்காட்டினார்கள்.

மாலயன்றேடிக்காணாவள்ளலைமன்னன்கண்டு
ஞாலமேல்விழுந்தெழுந்துநற்பதந்தொழுதுநிற்பக்
கோலமென்முடியின்மீண்டுங்குருதிகொப்பளிக்கக்கண்டு
சாலவும்பயந்துமன்னன்றுளின்மேலயர்ந்துவீழ்ந்தான். ()

வீழ்ந்துளம்பயந்துசோரும்வேந்தனைக்கண்டுசாந்தன்
தாழ்ந்துசெங்குருதிமீண்டுந்தடுத்தனர்தடுத்தபோதே
வாழ்ந்தனனரசேயென்றுமகிழ்ந்துடனெழுந்தங்கோடிச்
சூழ்ந்தடிபரவிப்போற்றித்துதிகொடுவிதியால்வாழ்த்தி.(உஎ)

அஃறினர்புரங்கள்செற்றவத்தனுரித்தலத்தின்
முன்றிகழ்செய்கையெல்லாமுறையுணர்ந்தருளினாலே
நின்றவச்சேடச்செல்வர்நேறியன்கேட்பவுள்ளத்
தொன்றுமங்கொழியாவண்ணமுணாத்துமற்றுரைக்கலுற்றார்

யாம்படருற்றவாகண்டெம்பிரான்கனவினண்ணி
வான்பரிக்கரிகாற்சென்னிவருவன்மற்றவனாலிங்கு
நாம்பயிலிடம்பொற்கோயிலண்ணாநற்பதியுமாகுந்
தேம்பிடாதென்றுதேற்றிச்சென்றனனென்றுஞ்சொன்னான்.

மன்னவனதனைக்கேளாவடிவெலாம்புளகம்பொங்க
வென்னையுமொன்றாயீசனியம்பினனந்தோநன்ற
தின்னையிலினியான்றனையாக்குவனருளாலென்று
தன்னைநேரில்லாதார்முன்சாற்றினோர்வாழ்த்தினானால். (௯0)

மாசிலப்பதியைநோக்கிவன்புகழ்கரிகாற்சென்னி
யேசிலோர்நாமந்தானிங்கியப்புவமென்றுநாடிப் [பா
பாசிலைக்குடசங்கொன்றைப் பைங்கழைப்பொழில்சூழ்பண்
லாசிலாப்பாசூரென்றேயறைந்தனன்சிறந்துபொங்கி. (௯௧)

கங்கைவாழ்சடைவேயீன்றகடவுள்வாழ்பதிக்குநாமந்
துங்கமாமுடிமன்னன்றுசொல்கையாலுலகமெல்லாம்
பொங்கெழிற்பாசூரென்றேபுகன்றதுபொருவில்வேடர்
தங்கண்மேலன்புநீடித்தகுசிறப்பெவையுநல்கி. (௯௨)

உங்களால்வேயி டங்கொண் டுற்றவர்தம்மைக்காண
விங்குநாம்பெற்றோமென்னவின்பமுற்றவருநின்று
ரங்கணனருளேயுன் னியகமகிழ்ந்திருந்தான்மன்னன்
பொங்கருஞ்சிறையிற்காளிபுக்கதுபுகல்வமிப்பால். (௧௧)

கரிகாலன்பதிகாணுஞ்சருக்க முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௧௪௭.

## காளியைச்சிறையில்வைத்தசருக்கம்.

மற்றுமிங்கெம்மைக்காணுமன்னவர்மறைவிலுண்டோ
சொற்றுமென்றரசன்கூறச்சொல்லுவார்தூரமில்லை
சற்றிடமோகூரொன்றோர்தலமதிலொருகுறும்பன்
வுற்றனனுன்றாள்காணுதூரினில்வாழ்வனென்றார். (௧)

என்றவர்கூறக்கேட்டுமிலங்குவேற்கரிகாற்சென்னி
நன்றுலகாண்டவாறுநானெனவெகுண்டுநக்கு
துன்றணிமுடிதுளக்கிச்சொற்றொழிலமைச்சரியாரு
மின்றெனவியம்பாவண்ணமேதெனவோதலுற்றான். (௨)

மன்னவனுயிர்போனிற்பமந்திரியோர்களியாரு [வேன்
முன்னிருங்கரணம்போல்நின்றுணர்ந்துமண்ணுலகையாள்
வென்னின்றீர்தரவெமக்கிச்சரித்திரம்வியம்பாவண்ண
மென்னகாரணமேதன்றங்கியம்பினன்வயங்கொள்வேலோர்,

அம்மொழிகேட்டமைச்சாஞ்சிமன்னடிதாழ்ந்தேத்தி
யெம்மையாண்டருளுங்கோவேயியம்பிடக்கேளாயென்று
செம்மைசேர்மொழிகூர்மேயதிண்டிறற்குறும்பனுவன்
மும்மைசேருலகமொன்றிமுனிந்திடலழியானென்றார். (ச)

ஆவனுக்கேதுவேதுகறையுமென்றரசன்கேட்பத்
தாவின்மந்திரிகணின்றுசாற்றுவர்காளிகாரி
தேவர்தஞ்சிறைமீட்டாண்டசேயொடைங்கரனல்வர்க்கு
மாவலானுவகைபொங்கவவரடிதொழுதுபோற்றி. (ரு)

பன்னெடுங்காலமன்பிற்பாதனமாடத்தூடே
மன்னுமாபூசைசெய்துவழிபடுங்காலையோர்நா
ளன்னவன்காணத்தாங்களணிகொள்வாகனத்திற்றோன்றி
யென்னைநீவேண்டிற்றென்றுங்கியம்பினரியம்பக்கேட்டு. (சா)

நாற்றிசைவாயிலுற்றுநால்வருமிருந்தெனக்கிங்
கேற்றமுற்றிடவேகாவுமென்றவரதுவுமீந்தார்
மாற்றருமோகம்பூண்டமொறிலாவரங்கள்பெற்று
வாற்றலாற்குறும்பன்மோகனனபேரதுபெற்றானே. (எ)

மற்றுமத்தலத்தின்மோகன்வைகலின்மோகூரென்னு
முற்றவத்தலத்தின்பேருமொழிகொணுல்வாயினுன்கு
பொற்புறுகோயிற்கட்டிப்பொருந்தவேமுகூர்த்தஞ்செய்து
நற்றவன்மோகன்மற்றோர்நடுங்கவேயாள்வன்கண்டாம்

ஆதலாலியாங்களியாருமணுகியதவத்தின்செய்கை
மேதகுமன்னநின்முன்விளம்பிடாதிருந்தோமென்று
தீதிலாவமைச்சரியாருஞ்செப்பிடவதுதான்கேட்டுக்
கோதிலாமன்னர்மன்னன்கூறுவான்குறித்தொன்றங்கு. (கூ)

அங்கவன்றனக்குத்தஞ்சமவர்களென்றமைச்சர்சொன்னீ
ரிங்கெனையாண்டநாதனெளியனேவியம்பிற்காணீ
ருங்கவெள்ளறிவுதானிங்குள்ளதத்தனையோகேளீர்
திங்களோடரவுதாங்குஞ்செஞ்சடைமுடியினானை (க௦)

என்னையாண்டருளுங்கோவை யெள்ளினுளெண்ணெய்போ
மன்னியேயெங்குநின்றுமலர்ந்தபேரொளியானானை [ல
யுன்னுவாருள்ளநீங்காதொளிர்பெரும்பருதியானை
யன்னையிலினியனாகியடைந்தவற்கருளுவானை. (கக)

மாலயன்றேடுங்காலைவளரழற்பிழம்பானானை
காலமூன்றறிந்துநின்றகடவுளைநடுவுமீறு
மூலமுமில்லாதானைமூன்றுமொன்றில்லாதானை
வேலைசூழ்ஞாலம்போற்றவேயிடங்கொண்டான்றன்னை. (கஉ)

அருவுமாயுருவுமாய்மற்றகண்டிதமாய்நின்றானைப்
பெருமிதக்கணங்களங்கிபெற்றொளிரவிசோமன்கள்
மருவரிமுதலாந்தேவர்வருந்திடவடுச்செய்தானை
யுருகுளத்தவர்கள்வேண்டிற்றுதவியபெருமான்றன்னை. (கஙு)

கூற்றினைமாற்கண்டற்காய்க்குமைத்தசேவடியினானை
மேற்றிகழ்தேவர்வேண்டவேலைநஞ்சயின்றான்றன்னைப் [னை
போற்றிடுமெவர்க்கும்பொய்யாப்பொருளதாம்புராணன்றன்
நாற்றிசைபரவப்போற்றுநானவற்கெளியன்போலும். (கச)

என்றிருகையுந்தாக்கியெழின்முடிதுளக்கியுள்ளங்
கன்றிநீள்கண்சிவந்துகடுந்திறற்கரிகாற்சென்னி
வென்றினன்றோதானென்றுவிறைந்தெழவமைச்சரியாரு
முன்றொழுதியாங்கள்செல்வேமுதல்வநீவேண்டாவென்ன.

அஞ்சினபேர்கள்போருக்காவரோவல்லாலிங்கு
வஞ்சமந்திரிகட்குண்டோவாய்விடுவென்னப்பின்னு
மஞ்சிடவுரைப்பக்கேட்டவமைச்சரும்பிழையுண்டெங்கள்
வஞ்சமன்றிறைவவென்றுவணங்கமன்னிணங்கிச்சொல்வான்

கரவடநும்பாலுண்டோகண்டிலீருண்மைநிற்கக்
குரவலர்சோலையூரன்குறும்பனைப்பொருதற்குங்கட்
குரமுறயாமுஞ்செல்வேமென்றலுமோதமைச்சர்
பொருபடையெழுதற்கெங்கும்புரிமுரசறைவித்தார்கள். கஎ

அவ்வயிற்படையீன்றெங்கணணிமுரசறையக்கேட்டுத்
தெவ்வரும்போருமின்றித்தினவுறுபுயத்தரான
வெவ்வலிவீரர்வேழம்வெம்பரிதேர்களியாவு
மெவ்வமுற்றவனிவிம்மவெழுந்தனவெங்குமெங்கும். (கஅ)

வேலொடுவில்வாணேமிவிளங்கிருந்தண்டுபாசஞ்
சூலமென்பரசுகைவேல்சுடர்விடுகுலிசமங்கி
கோலநற்சுரிகைசொட்டைகுலவியமுசலமுன்னு
வேலும்வெம்படைக்கைவீரரெண்டிசைமிடைந்துபோத.

வந்துறச்சேனைகோணவல்விரைந்தடையமன்னர்
தந்திரத்தலைவரெல்லாந்தருக்கினொருக்கிச்செல்லச்
சுந்தரக்கரிகாற்சென்னிதானுமோர்சுடர்தேர்ச்சென்று
ணைந்திரத்தேருமாவுமிடையிடைகளிறுஞ்சூழ. (உ0)

தேர்செலுமார்ப்பும்வீரர்செருக்கினற்பரிக்குமோசை
வாரசைமுரசுதும்பிவாகைகொளார்ப்பின்சும்மை
போர்கெழுபணிலனுதமுங்கடைநாளிலோரே
ழார்கலிக்காரேழொன்றுவார்த்தனவார்த்ததன்றே. (உக)

மோகனித்தன்மைகேட்டுமொழிவதொன்றின்றியோடி
வேகமாய்க்காளிசாத்தன்வேலனைங்கரனைப்போற்றி
மாகடற்படையென்மீதுவந்ததென்செய்கேனென்ன
வாகிலுநீயொன்றுக்குமஞ்சலென்றபயமீந்தார். (உஉ)

மையல்சேர்குறும்பன்கேட்டிம்மணிமுடியரசன்முன்போய்
வெய்யபோர்செயநீயாங்கள்வேண்டிவந்துதவுவோமற்,
றையமொன்றில்லையென்றுரகமகிழ்ந்தவனுமாண்ட
மொய்கொடன்சேனையெல்லாமுன்செலமுடுகிச்சென்றான்.

வளவர்கோன்சேனை தானும்வந்தெதிர்கிட்டத்தாங்க
ளளவிலாற்றாசிற்றுனையானவையிரண்டுமுன்னத்
தளர்விலாச்சினவிற்கூடித்தாக்கியேநீக்கமின்றி
யொளிர்படைக்கலன்கள்சிந்தவுற்றதுவெம்போரங்கண். உச

இப்பரிசெதிர்ந்துதும்பைபிருவர்வெம்படையுஞ்சூடித்
தப்பறவுடன்றுநின்றுசமரிடைப்பொருதவீரர்
செப்புருமுடியுந்தோளுந்தாள்களுஞ்சின்னமாகக்
குப்புறுங்குருதியோடிக்குளிர்தரைப்பொருத்ததன்றே, உரு

எண்ணிறன்படைதன்முன்சென்றிறக்கமற்றிறவர்தங்க
ணண்ணியவீரரோடுசெனிதுணிந்தெழுந்துமோகன்
றிண்ணியவளவன்மிக்கசெழும்படைதன்மேற்செல்லக்
கிண்ணினைசிவந்துசேனைக்காவலர்மேவியாங்கே. (உசா)

மோகனின்பதியின்மேவி *முசிப்பறவிருநீயொல்லை
யேகெனவிசைத்தார்கேட்டாங்கெய்தியவிறைவர்தங்கண்
மாகமலத்தாள்போற்றிமற்றவருரைமறுமற்
போகவக்காளிமூவர்பொங்கெழில்வதனநோக்கி. (உஎ)

தென்றிசைவாயிலென்றன்செப்பருங்காவலாக
வன்றிறநீங்களிங்குவந்திடவேண்டாநீருஞ்
சென்றிடுமென்றுகாளிசெப்பியபடைகணத்தில்
கொன்றிடுகேனின்றெனறுகூறினள்கூறக்கேட்டு, (உஅ)

---

*முசிப்பென்பது இளைப்பினை.

கந்தனைங்கரத்தனையன்காளியோடேல்போல
வந்தரமகளின்முன்னேயாவதுகருதித்தானே
வெந்திறற்றுன்றூச்சென்றூர்வெகுண்டுபோமென்றுகாளி
கொந்தவிழலங்கற்*கிள்ளிக்கொடுநெடும்படையைநோக்கி.

மாயவேண்டினமொதிர்வம்மின்வேண்டிலார்
போய்விடும்போய்விடுமென்றுபோராழி
வாயுவுந்தேயுவுமென்னமண்ணின்மேற்
காய்சினம்படைக்காணவந்தனள். (கூ0)

ஆர்த்தனள்மாதிரமனைத்துமார்த்தெழக்
கூர்த்தமுக்குடுமியைக்கோலவானில்விட்
டேர்த்தனள்விற்படையெடுத்துவெங்கணைப்
பார்த்தனளும்பரும்பாருமேங்கவே. (கூக)

கிட்டினளடுபடைகெட்டதென்னவே
முட்டினளெய்தனள்முழங்கவாவலங்
கொட்டினள்கூற்றமுங்குலையவாள்கொடு
வெட்டினள்கரிபரிவீரர்வீடவே. (கூஉ)

மன்னவன்போர்செயகின்றவாண்
மன்னருமமைச்சருங்கயமும்வாசியு
மின்னுபொற்றேர்களும்வீரர்யாவரு
முன்னடுகாளியைமுனிந்துசுற்றியே. (கூகூ)

*கிள்ளியென்பது சோழனை.

வெங்கொடும்போர்செயவெருவநோக்கியே
யிங்கிதுநன்றுநன்றென்றுதண்டிகழ்
செங்கையிற்படைபலசிந்தமன்படை
மங்கினவிமைப்பதனின் மாயமென்னவே. (௩௪)

அங்குமுன்செல்படையனைத்துமொன்றறப்
பொங்கெழிற்காளிதான்பொன்றக்கொன்றபின்
னிங்குறுபிணக்குவைமேவலான்மிக
துங்கமாமலைநிலைதுவன்றதக்களம், (௩௫)

சொரிந்தனவெங்கணுஞ்சோரிசேர்குலாய்
விரிந்தனவெங்கணும்விளங்குநீண்முடி
முறிந்தனவெங்கணுமுறிவெம்படை
திரிந்தனவானெலாஞ்சேனைநீள்கொடி. (௩௬)

வீடினகரிபரிவீரர்தேர்களிற்
றோடினகுருதியாலுயர்கவந்தமிக்
காடினகிணந்தசையருந்திக்கூளிகள்
பாடினகாளிதன்பாதமேத்தியே, (௩௭)

எல்லையிற்பல்படையிறப்பக்கண்டுமன்
னில்லெனத்தன்படைநிறுத்திக்காளிமு
னெல்லையிற்சென்றுற்றிங்கென்படை
கொல்வதென்கின்வலிகுறைப்பனென்றனன். (௩௮)

கூறுமன்னுரையுமுன்கேட்டுக்கொண்டுளஞ்
சீறியாங்கிடியெனச்சிரித்துக்காளியென்
வீறுமஞ்சாமையும்வீரப்பாடுமுன்
மாறிடுபுவனமுமதித்ததன்றியும். (௩௯)

என்றெழுமனிதநீயெனக்கெதிர்ந்தனை
வென்றிடுவேனெனவீரம்பேசினை
யின்றிதனாலுனையாருங்காணவே
கொன்றிடுவேனெனக்கூறிச்சீறினள். (௪0)

அத்திரங்கேட்டமன்னரைகின்றனெனை
விற்றிரம்பேசிடில்வென்றதாகுமோ
சத்திநீயாரொருமனிதன்றப்பிலை
யொத்தெதேரடமர்செயவொருவலென்றலும். (௪௧)

காளியுங்கூளிகணிருத்திக்காதுபல்
வாளிகளெய்தனள்மன்னனங்கதை
மீளிகொள்கணைகளாலறுத்துவீழ்த்தினா
ளியின்மனமகிழ்ந்தார்த்துநின்றனன் (௪௨)

பின்னும்வெங்கணைபலவிடுப்பப்பேரெழின்
மன்னனங்கவையொருவாளியாலற
மின்னொளிராழியைவிடுத்துக்காளிகை
துன்னிருஞ்சிலையினைத்துணித்துவீழ்த்தினன். (௪௩)

சாலவும்வெகுண்டிடத்தன்கைத்தண்டமென்
மேலுறவிடவதுவிலக்கிப்பின்னருஞ்
சூலமேற்பலகணைதூரப்பக்காளிதன்
மேலுறுதொருபெருவேலின்மாற்றினள். (சச)

மாற்றினள்மேற்சரமாரிபின்பினுந்
தூற்றினன்தூற்றிடச்சூலிவெய்யதோர்
வேற்றனைவிடவதுவிண்ணின்மன்விடக்
கூற்றெனவருகணையனைத்துங்கொன்றதே. (சரு)

அங்கதுபின்னருஞ்செலவுறுதுவாய்
பொங்கெரிசொரிதரப்போகிமன்சிலை
மங்கிடவறுத்திடைமார்பிற்செல்லமன்
னுங்கொடுசிவையவென்றுதவிற்றதே. (சசா)

இற்றதிங்கில்லெனிவிறப்பமோவெனக்
கொற்றவனங்கொருகோரவேலெடா
மற்றவண்மேல்விடமார்பில்வைகிய
சொற்றிகழங்கியைத்துணித்துப்போயதே. (சஎ)

நுதிகொள்வில்லங்கியைநூறக்கண்டுளங்
கொதிகொடுசாலவுங்கொடியதரிகிய
வெதிரின்முத்தலையினையெடுத்துமன்னவன்
கதிர்கொண்மாமுடியினைக்காதென்றேவினள் (சஅ)

தாருகாசுரனுயிர்சாடச்சங்கரன்
பூருவத்தவள்கையிற்புராந்தகன்வெஞ்சினக்
கூரிரும்படையெனக்கூறுவாரது
தோர்விலெப்படையையுந்துணிக்கவல்லதே. (௪௯)

சண்டவெம்படையதுதாவிவானின்மேற்
கண்டநின்றொளிப்பமெய்கனன்றுவேலைநீர்
தண்டவங்கெரிதழல்சொரிந்துதாவிட
வண்டர்தம்படையெலாமருந்திச்செல்லலும். (௫௦)

தெளிவொடப்படைதிரை திகிரித்தேர்படை
யளவறக்கொடுத்திறையருளிற்றப்பியே
வளவர்கோனேடுவகண்டுமேற்றவ
னெளிர்கடற்படைகளுமோடிப்போனதே. (௫௧)

ஓடிவேயிடங்கொள்வானுன்னிக்காவெனு
வாடிவெந்துயர்கொடுமாசிலானுறை
யூடுசென்றம்பலத்தும்பர்போற்றிநின்
றாடுபூங்கழலின்வீழ்ந்தழுதுகூறுவான். (௫௨)

நினக்கெதிரில்லெனுமின்னகொள்கையா
லெனக்கெதிரிலைவேறிங்கென்றெண்ணியே
யினப்படையோடியானெய்தக்காளிவெஞ்
சினத்திடக்கொடிப்படைசிதைந்துபோயின. (௫௩)

உன்றனதடியனேனுடையவெம்படை
பொன்றினவினவியான்பொருதுழன்றுபோர்ச்
சென்றடவங்கணத்தேவிபோரிலென்
வென்றிதேர்பண்டமுடிவுற்றுமீண்டனன். (ருச)

யானுனக்கடைக்கலமிறைவிகாவெனத்
தானுயர்பயத்தொடுஞ்சாற்றிச்சம்புவின்
மீனமிறிருவடியிறைஞ்சிப்பின்னரு
மூனமிறுதிபலவோதிக்கூறுவான்: (ருரு)

உன்னையல்லாலெனக்குற்றநற்றுணை
யிந்நிலமதனில்வேறில்லையீதறிந்
தன்னையிலினிய நீயருள்செயாவிடி
லென்னுயிர்விடுவெனிங்கென்றுநின்றனன். (ருசா)

அப்பொழுதிறைவனுமிரங்கியன்பினு
லொப்பறுவிண்ணின்மீதுயரக்கூறுவான்
றப்புறின்பெரும்படைத்தன்னிலுேடுநீ
யிப்பொழுதெழுபடையாமுமெய்துவேம். (ருஎ)

நம்பவோரத்திரமாகிநண்ணுவ
மம்பரமீதெனவருளிச்செய்துனக்
கும்பரின்யாம்வரலுறுதிகண்டுகொ
ளெம்பெருவிடைக்கொடியிடியினர்க்குமே. (ருஅ)

என்றிறைவாக்குறவியம்பவேந்தனுங்
குன்றெனவளர்புயங்கொட்டியுய்ந்தன
னின்றெனவின்பமிக்கேசிரோமுடி
வென்றிசேர்படைபலவேண்டுமென்றனன். (௫௯)

அத்தனுமன்னவன்கேட்டதவ்வழிச்
சித்திரத்தேர்முடிநீதில்பல்படை
மெத்தவுமளித்திடமேவிற்றங்கவை
பத்திசேர்மன்னவன்கண்டுபண்பினால். (௬௦)

ஆனவைகொண்டரனடியின்வீழ்ந்துளந்
தானுகந்தேபுரஞ்சார்ந்துதன்பெருஞ்
சேனைகள்வருகெனச்செப்புமவ்வயி
னீனமில்படையெலாமீண்டுவந்ததால். (௬௧)

வேறு.

ஆண்டுதன்படையானவையடையவுமடைவி
லீண்டிமுன்செலமன்னனுநின்றனனிப்பாற்
றூண்டுமூவிலைமீண்டுறக்கைகொடுசூலி
மாண்டதில்லைமன்றப்பவிட்டாரெனமறுகி. (௬௨)

கண்டிடாதவணின்றனணின்றவக்காலை
யெண்டிசைக்கயமிரிதரப்பல்பறையியம்பச்
சண்டவாயுவும்வடவையுங்கடையுகத்தனின்மேற்
கொண்டெழுந்ததேபோலெழத்தூளிவான்கொள்ள. (௬௩)

மாசிலாமுடிமன்னர்தேர்கயம்பரிவயவ
ராசையெங்கணுஞ்செவிடுறவார்த்தெழுந்தோங்க
வீசுரன்றருதேரின்மேலஞ்செழுத்தியம்பிப்
பூசின்மேவணிபுணைந்துயர்வளவர்கோன்புகுந்து. (சுச)

திரிக்கிலாவ்றுவகைப்பெருமபடைக்கடறன்னோ
டெரிக்கரத்திறையருள்பெரும்படைக்கலமிலங்கு
கரத்தின்மேற்கொடுபுலம்புரிந்திலங்குவெங்கனற்க
ணுருத்திரனெனவளவர்கோன்றேர்நடத்துறுங்கால். (சுரு)

விண்ணின்மீதுயர்விடைநெடுங்கொடியொலிமேவ
வண்ணனீண்முடிவளவர்கோன்கேட்டுளமகிழ்ந்து
தெண்ணிலாவணிவேணியஞ்செல்வனேசிவனே
யண்ணலேயினியுய்ந்தனமெனவினிதார்த்தான். (சுசு)

மிக்கமன்னருமமைச்சருங்கேட்டுளம்விரும்பித்
தக்கவன்பினிலரகரவென்றுளந்தழைத்தார்
தொக்கபூமழைவானெலாநிறைதரச்சொரியத்
திக்கெலாம்புகழ்துந்துமிநாதங்கள்சூழ. (சுஎ)

துங்கவேதமோடரியயன்றேவர்கடுதிப்பப்
பொங்குமாதவர்பூதவேதாளங்கள்போற்றச்
சங்கநாதங்கள்பல்லியம்வீணைகடமுங்க
வெங்குமன்பினுன்முநிகணந்தோத்திரமெடுப்ப. (சுஅ)

தீதிலான்கொடியாதிமுன்னூதுபொற்சின்னம்
வேதநாயகன்வந்தனன்மேவினேற்கருளு
மாதிநாயகன்வந்தனனென்றுகந்தன்பா
லூதுமவ்வொலிகாளிதன்செவிபுலத்துறலும். (௬௯)

அக்கலுற்றதுகேட்டுநின்றுதட்டிஃனயதுக்கி
முக்கணன்படைச்செய்தனனென்றுளமுனியா
வுக்கிரத்துடனண்டவான்முகடுவிண்டுதிரக்
கொக்கரித்துநம்படையெலாம்வருகெனக்குறித்தாள். (௭௦)

அடுவெஞ்சூலம்வெண்டலைவாள்கேடகமம்பு
கொடுவெஞ்சாபமணிபாசந்திக்குறவீசிச்
சுடுவன்னீங்குவண்டமனைத்துந்துகளாவென்
றுடுவின்மேலுநீடினண்மன்முன்னெனவென்று. (௭௧)

மண்ணும்புனலுந்தீயொடுகாலுமலைதானும்
விண்ணுந்திசையுந்தேருமியாவும்வியகாலத்
துன்னுந்தழலோபெண்ணுருவாய்வந்துறலோர்தாங்
கண்ணுஞ்செவியும்நாசியும்வர்யுங்கனல்கால. (௭௨)

இவ்வண்ணத்திறன்முற்றுமுனிந்தேயிருள்கூறு
மைவண்ணத்தாள்வானுலகோங்குழறமேவுங்
கைவண்ணச்சமமுவிலைநீள்வாய்கனறாவச்
செவ்வண்ணத்தன்வந்திடிலென்போர்செயமென்றே. (௭௩)

சூலப்படைகொண்டெண்டிசைகாவிற்றுகண்மூடிக்
கோலக்கானங்கொண்டனளண்டக்குழுவெல்லா
ஞாலத்தோடுங்கீழ்மலிவைகாசலிகால
மேலிட்டதுவென்றென்றுதமுள்ளமெலிவுற்றார். (௭௪)

இப்படியண்டமியாவுங்கெடுக்குறவெழில்வீரந்
துப்புறுமன்னன்காணமுனின்றேசொல்கின்றா
ளெப்படிமுன்போலோடுதியோநின்றென்முன்னே
செப்பமுடன்போர்செய்குதியோவென்செப்பென்றாள்.

அங்கப்படியக்காளிசொல்கேட்டானணிசேருந்
திங்கட்கவிகைச்செம்பியர்கோனஞ்சிவலோகன்
கங்கைச்சடிலப்பாசுபதத்தன்கடவுண்டான்
னெங்கட்குளன்வந்திங்கெதிரோமீயினியென்ன. (௭௬)

மாதிரமொட்டிற்கைமலையீருமலைநீடுங்
காதிலெடுத்துத்தட்டைசெறிக்குங்கடலுண்ணும்
பாதலமுற்றுஞ்சேடனெடுக்கும்படுதுய்க்கும்
பூதகணத்தோர்நண்ணினரெங்கேபோரென்றே. (௭௭)

மேருவையொப்பாள்சூழ்கிரியொய்பாரொடுமேவிப்
பாரினடுங்தேயீதுனைசெய்வாள்படிமீதிங்
கார்பொருவூர்நீயோசிவனேவென்றடுமன்ன
னேரியர்கோனின்றனையடுவானேனேயென்றான். (௭அ)

மண்டணிவிம்மும்பூதாளம்போமாய்காளிச்
சண்டநெடும்போர்செய் துறநேரோசரிகாளக்
கண்டனையுள்ளப்புண்டரிகத்தேயமர்கொண்டே
யெண்டிசையாண்மன்றன்படையுங்கொண்டெதிர்சென்றான்

அவ்வயின்மன்னன்சேனையுமற்றங்கவளாளுந்
திவ்வியமாகுங்கூளிகடானுஞ்சினநீடிக்
கவ்வையுறும்போர்செய்தலுமஞ்சிக்கணமெல்லாம்
பௌவமுடைந்தாலென்னவுடைந்தேபரிவுற்ற. (அ0)

ஈசனருளுமுடிபெறுமன்னனெழில்சீறு
மீசனருளுந்தேர்மிசைவந்தேயிறவாவெம்
மீசனருளும்படையொடுகாளிக்கெதிர்சென்றா
னீசனருளுற்றங்கவள்சோர்வுற்றெதிர்நின்றாள். (அக)

அங்கதுகண்டம்மன்சிவலோகனருள்கூறும்
வெங்கொடுபாசம்வீசுபுகட்டாவினைவோடுங்
கொங்கலர்கொன்றைச்சென்னியன்முன்னே கொடுசெல்வே
னிங்கெனவெண்ணித்தன்படைமோகனிடைவிட்டான்.

மோகனையுற்றுப்பாறுபுவட்டாமுடிகொண்டோன்
றோகையர்பற்றிக்கரிபரிபற்றிச்சுடர்பூணு
மீகையுமுற்றிங்காசொடுதூசுமிவையெல்லா
மோகையுறக்கொண்டெய்தினர்மன்முன்னுறயாரும். (அங)

கொண்டவர்காணும்பின்னருமன்னுங்கோல்வீடு
மொண்டிறன்மன்னன்சேனையிலொன்றுமொழியாமே
யண்டர்க்குந்தனருளினெழுந்தங்கரசன்றான்
மண்டுபுசென்றேகண்டதுநேர்சூழ்வந்தன்பால். (அச)

வந்தவர்காணும்போதடுமன்னன்மதிநூலோ
ரிந்தவருட்டானெங்குளஞாலத்தென்றென்றே
சிந்தைவிருப்போடுவகைமிகுத்தேதென்பாசூ
ரெந்தைமலர்த்தாள்கைதொழுதுன்னுவின்புற்றார். (அரு)

மற்றவரின்னரின்புறமுன்னன்மறைபாடுஞ்
சொற்றிகழ்பாசூரீசனைநண்ணித்தொழுதாடிப்
பற்றியகாளிக்கென்பரிகாரம்பகரொன்றான்
முற்றுலகாளுமன்னனுமீசன்முன்னின்றே. (அசா)

மன்னுரைசெய்யுங்காலையிலீசன்வான்மேன்மன்
முன்னுரைசெய்வான்காளியையென்றன்முனிவாரப்
பொன்னின்விலங்கிட்டெம்மிடம்வைசூழ்புடைகாவற்
கிங்கிலையேமாசத்திகளுண்டாமென்றன்பா. (அஎ)

நாலுயர்சத்திகளைசிவன்ஞாலநடுங்காமே
மேலுறவுன்றுவகுத்துவிடுத்திடமின்மன்னுஞ்
சூலியையங்கவர்கைச்சிறைவைத்துயர்சொற்பாசூ
ரேலுமிதத்தொடுகாப்பதுமுன்பரமென்றங்கண்- (அஅ)

மன்னுறைசெய்திடவங்கிறையாணையின்மாகாளி
பொன்னெயிலங்குயர்பாசூரமர்ந்தவள்பொற்றளி
யென்னுமிந்நகர்வர்கள்காவலின்மோகூரிடைவாழு
மின்னுமிருந்தனள்சாலவுமுள்ளமெலிந்தஞ்சி. (௮௧)

காளியைச்சிறையில்வைத்தசருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௪௮௭

## அரவமாட்டியசருக்கம்.

காசறுகரிகால்வேந்துங்காளியைச்சிறையில்வைத்துப்
பாசையம்பதியின்மேலாம்பரமனைப்பரவியாங்க
ணாசறவிருப்பமற்றோங்கச்சமில்கச்சியூருண்
மாசுடலமணர்ச்சார்ந்துவைகினனொருகுறும்பன். (௧)

மைவணமோகூர்காளிவன்சிறையிருந்தவார்த்தை
யுய்வணமுணரானாகிக்குறும்பன்கேட்டிங்கிதற்கியாஞ்
செய்வணமினியென்னென்றுதேர்ந்துளமஞ்சிதன்றன்
மெய்வணமழிந்துவேந்தைவினையினால்வெல்லவெண்ணி. (௨)

வெல்லருந்திறங்கள்வல்லவிறலமண்சார்பினாலே
கொல்லரும்பகையைமுந்துக்கொலீவமென்றவற்குக்கூற
நல்லதென்றவருமங்கணடியேவேண்டிற்றெல்லாம்
வல்லபமுன்கூட்டவங்கிமந்திரவாதஞ்செய்ய. (௩)

அங்கியின்றேவுமோராவம்பதஞ்சிவந்தமேனித்
திங்களின்பிளவுபோலத்திருந்தெயிறெரிந்தகுஞ்சி
யங்கணோரேழுநாகமுன்றொடுத்தொன்றியங்க
ணிங்கெனையணிழத்தவண்ணமேதெனவியம்பலுற்றார். (௪)

வண்பெறுபொன்னிநாட்டோர்மதித்திடுங்கரிகாற்சென்னி
பண்புறுபாகூரென்றோர்பதியதிலிருந்துமோசுூர்
திண்புடைத்தேவர்காவல்சிதைத்தழித்ததுவுமன்றிப்
பெண்சிறைவைத்தானீதுபிழைத்தனனென்றுபேச (௫)

கொற்றவனீதிகேடனுயிடிற்குற்றமார்க்கா
மற்றதுநமக்குப்பார்க்கவழக்கலவல்லதுந்தான்
செற்றடுசத்திதன்னைச்சிறையினில்வைத்தானென்றால்
வெற்றிதானென்க்குண்டாமோவிளம்புமென்றங்கிகேட்ப.

நீதிகுன்றாதபேற்குநிகழ்வதுவெற்றியென்று
நீதியைவழுவினேற்குநிகழ்வதுதோல்வியென்று
நீதிமுன்வழாமையாலேநீடியவிசையம்பெற்றான்
நீதியைபோற்றாற்குநிகழ்வதீவிஃதேயென்றார் (எ)

வெல்லொணுமன்னன்றன்னை வென்றுபோர்பெறுவார்க்கெல் [லா
மெல்லையிப்போதென்றூறுமியம்பிடவெரியின்வேந்த
னல்லதுந்தவந்தனர்க்குடலையதாமோவென்னச்
சொல்லுவார்விரதபங்கஞ்சூழினும்வேண்டுமென்று (அ)

விச்சைகண்டெமக்குவேண்டும்விருத்திவிட்டயர்வுநல்குங்
கச்சியூர்க்குறும்பன்சென்னிகடுந்திறல்கேட்டபோதே
யச்சமுற்றெம்முன்கூறவஞ்சல்யாமவனைவெல்கை
நிச்சயமன்றோநீயோர்நீடரவுருவாகென்ன (௯)

ஆங்கவனரவுதன்னையாட்டுதற்கங்கிபாம்பா
யோங்குடன்முறிக்கிச்சீறியொலிபடம்விரித்துப்பற்க
டேங்குநஞ்சுமிழ்ந்துவாயுந்திறந்துவால்விதிர்த்துக்கண்கள்
வேங்கனல்பொழியமண்மேல்விளங்கிநின்றுடிற்றங்கண். (௧0)

மற்றதுகண்டுகுன்றுவண்புகழ்க்கச்சியூரு
ரூற்றிடுவினையனென்னுமொருபெருங்குறும்பற்காகப்
பற்றருமரவைநோக்கிப்பாந்தபொற்பெட்டிவைத்தாங்
குற்றிடுகென்னமற்றங்குற்றிடக்கட்டிச்சொல்வார். (௧௧)

ஓங்கெழிலரவேநின்னையொளிர்முடிகரிகாலன்முன்
பாங்குறவிருத்தியார்த்தபாசமதவிழ்க்கிலியாரு
மோங்கிடவோங்கல்போலவெழுந்துமன்னவையோரியாருந்
தீங்குறவிழுங்கிடென்றுசெப்பினரொப்பிற்றன்றே. (௧௨)

அமணருமதனைவாழ்த்தியங்கையாற்றொழுதுபோற்றி
யெமதெணமுடிக்கவல்லாரில்லைநீயல்லால்வேறிங்
கிமணின்மேலென்றுபல்காலியம்பியாதரித்தியாருந்
தமதுமந்திரமுநீடுதந்திரத்தடையும்விட்டார். (௧௩)

துணிசெய்தியாவும்புல்லுஞ்சொல்லரும்பாற்குடத்தைக்
கணிதருஞ்சோலைசூழுங்கச்சியூர்குறும்பன்கண்டா
னினியவிண்ணப்பத்திட்டுமெழுதியேசூட்சிவல்ல
மனிதரைமிகவுங்கூட்டிவளவனைக்காணவிட்டான். (கச)

இவனடுமரவோடோலையெழுதியேயேவுமுன்னாட்
சிவனுயர்வளவர்கோன்முன்சென்றிருட்டுஞ்சுங்காலை
யவனுடனருளிச்செய்வானரவுபாற்குடமாமிங்கு
நயமுறவெய்துநின்முன்னலத்துகாணுமென்றான். (கரு)

அருள்புரிந்திறைவனீங்கவரசனுந்துயிலுணர்ந்தங்
கிருள்புரிநீள்கண்டத்தெம்மிறைதிருவருளிதென்று
பொருள்புரிந்தமளிநீங்கிப்புலரியிற்கடன்முடித்துத்
தெருள்புரிமாந்தர்போற்றத்திகழரியணையிற்சேர்ந்தான். (கசு)

மதிமிகுமமைச்சர்மன்னர்வந்தடிதொழுதாரங்கட்
கதிர்முடிகரிகாற்சென்னிகாதலாற்கனவிலோங்குந்
திருமுடிப்பெருமான்வந்துதிருந்துபாற்குடத்தினைக
மதிசெயமுறவந்தெய்துமதுவனேலென்றானென்றும். (கஎ)

அன்றதுகேட்டமன்னரமைச்சருள்ளஞ்சியாங்கே
நின்றுடன்றேறிப்பின்னுநிகழ்த்துவார்நமக்குப்பாசூர்
கொன்றையஞ்சடிலனுண்டுகுறைகளீங்குளவோமன்ன
வென்றவர்பலவும்பேசியிருந்தனரிருந்தவேலை (கஅ)

கச்சியூர் குறும்பனேவுங்கட்செவிப்பாற்குடத்தோ
ரச்சமில்பாசூர்மேவியரசனுக்கறிவித்தார்கள்
நிச்சயமானதெந்தைநிகழ்த்தியதென்றுமண்மேற்
பொச்சிடாதொன்றுமென்றுபுகன்றழையவரையென்றான்.

கிரமீடவையோர்தாமுங்கேட்டதிசயத்தார்மற்றவ்
வருகெனவேவலாட்களழைத்திடவவரும்வந்து
குரைகழல்வணங்கிமன்னன்குறிப்பெதிர்நோக்கினாரை
வருவதெங்கென்றுநீர்தான்வந்தகாரணமேதென்ன. (௨௦)

ஏத்திவந்தவர்கள்சேரவெய்திடாதகலநின்று
பூத்திகழ்கச்சியூராம்புரியதிற்குறும்பனின்னைத்
தோத்திரஞ்செய்தவோலைதூயபாற்குடமீதையா
காத்தருளவனையென்றுகழறொழவந்தோமென்றார். (௨௧)

என்றவர்வஞ்சமாற்றமியம்பிடக்கேட்டுவேந்தன்
றுன்றணிமுடிதுளங்கித்தூதரென்செய்வீர்பாவங்
கொன்றிடவேண்டிலென்னைக்கொல்வதுபாம்போபௌவத்
தன்றுநஞ்சமுதாயுண்டவாதியீங்கிருக்கவென்றான். (௨௨)

வந்தவிப்பாற்குடத்தில்வாளரவங்கியென்று
முந்தவேயருளிச்செய்தான்முதல்வனென்றடக்கிக்கூற
நிந்தனையவிழேயாகில்நிகழ்ந்திடும்பயந்தானென்பாற்
புந்தியற்றேதோவென்றுபுகன்றிடாதிருக்குங்காலை. (௨௩)

எந்தையோர் குடுமியாகியிருண்டொளிவிளங்குகின்ற
கந்தரமழுமான்கைகள்கண்ணுதற்கறந்துரேசச்
சிந்தையினீங்காதோங்குந்திருவடிஞாலந்தோய
வந்தெர்ளிராவுமாட்டும்வகையினைப்புகல்வேனுய்ந்தேன்.

அணிமுடிதனிற்ரேட்பசுமணிந்ததிற்சிம்புவிட்டுக்
கணிவிருகடியாசத்தின்றுருமீதணிந்துமீண்டத்
திணையில்சிந்தூரப்பொட்டுமிட்டுவெண்ணீறுபூசிப்
பணிவிடைகருடப்பச்சைபயிலிருகுழையிற்சாத்தி. (உ௫)

மிக்கதோர்பரியமீசைவிட்டெழிற்கண்டமீது
தக்கபாம்பென்புகோத்ததாரணிந்துரியமார்பி
னக்கராச்சன்னவீரமணிந்துநூலணிந்துதோளின்
பக்கமேயிரண்டுநாகம்பயிறாச்சூழ்ந்துகொண்டு. (உ௬)

கையின்மேற்குலிசங்கொந்திக்கட்டிவண்பிரம்பொன்றேந்தித்
துய்யசீரரையிற்பட்டுஞ்சூழ்ந்தணிதிருத்தியோங்கச்
செய்யதோரிடத்தாளிற்றிகழ்தருவிருதுங்கட்டிப்
பையராப்பொட்டிசென்னிபயில்கணச்சேடர்தாங்க. (உ௭)

வேதங்கள்பரியாளாகவிழுமணிச்சிவிகைசெல்லத்
தீதொன்றிப்புகாதநல்லசெயகண்டிகலிதாளங்கள்
மாதுங்கமுரசுகொம்புவல்லொலிபோலவங்க
ணாதும்பல்குழல்காளங்களுருமெறிமணிமுன்னார்ப்ப. (உ௮)

நாலுயர்வெள்ளிக்கம்பநடுவனோர்பொன்னின்கம்ப
மேலதிற்கசையோடீர்வாள்விளங்குசம்மட்டிகண்டை
யாலுரலுலக்கைசேட்டையாளுருக்கொடிகள்கட்டிப்
பாலினைமுன்றஞ்ப்பண்பரிசனங்கொண்டுசெல்ல. (உகூ)

சிங்கியின்றிரங்கள்கொண்டுதிருந்திருஞ்சீடர்யாரு
மங்கையிலம்புமேந்தியாடியும்பாடிமிக்க
தங்கள்வல்லபங்கள்காட்டித்தகுவிருதோதிச்செல்ல
வங்கவர்நடுவனுண்டவரும்பெருங்குடிமியாவான். (௩o)

சீதவெண்குடைகிழற்றத்திருந்துசாமரைகள்வீச
மீதுபாம்பெறிந்துமெற்றுமிடைநெடும்பிடாரர்செல்லக்
கோதறுபிடாரர்தங்கள்குருபரன்வந்தானென்றென்
றோதுபொற்சின்னூந்தாளையூதமண்ணேதநீங்க. (௩க)

வண்மைகுன்றுதசெய்கைவளவர்கோன்செய்தமிக்க
திண்மைமாதவத்தினுலேதேவரோடயன்மால்காணு
வுண்மையாங்கடவுளிங்ஙனொருதனியரவமாட்டத்
தண்மையாலங்ஙன்முன்னேசார்ந்தனன்சாரக்கண்டு. (௩உ)

மன்னனுஞ்சாலவுள்ளமருண்டவசத்தனுகித்
தன்னணிமுடிமேற்செய்யதண்டளிர்க்கரங்கள்கூப்பிச்
சொன்னனிகுழறிமெய்கடுளங்கரோமஞ்சிலிர்த்து
முன்னிழலிருப்பர்க்கென்றுமுறைமையென்றென்றிருந்தான்.

மந்திரித்தலைவனேக்கமன் னவனவனை நோக்கி
வந்தயிக்குடிமியாரென்வல்வினைவெல்லவேண்டி [ன்
முந்தவேயிடங்கொண்டாண்டமுதல்வர்போற்காணிமென்ற
சிந்தைபுட்டோன்றுகின்றார்தெரிவரிதிவாரென்றான். ()

என்றவனிருக்குங்காலையுய்திருக்குடிமியாரெங்
கொன்றையஞ்சடைவேயீன்றகுழகரங்கருளிச்செய்வார்
வன்றிறமன்னவுண்டோவல்விடவரவமாட்ட
வின்றியாம்வந்தோமென்றங்கியம்பினரியம்பக்கேட்டு. (ருரு)

வாடியபயிர்வாடாமல்மாரிவந்துதவுமாபோல்
நாடியகுடிமியிங்குநண்ணினனமக்கென்றெண்ணி
நீடியவிருப்பமெய்திநிறையிறையருளீதென்றங்
கேடவிழலங்கற்கிள்ளியின்பமிக்கியம்பலுற்றான். (ருசு)

மையல்சேர்க்குடிமியார்தம்வல்லபங்காண்போமென்று
பொய்செய்துகக்சியூருட்பொருந்தியவினையாமிந்தச்
செய்யதோர்பாற்குடத்துட்டிவினைசெய்யவோங்கும்
பையரவாட்டலாமோபகரெனப்பகருங்காலை. (ருஎ)

ஆங்கதேதென்றுநின்றவறம்பெருங்குடிமிகேட்க
வோங்குமன்னஃதேயென்றுவுரைத்ததைக்காட்டக்கண்டு
யீங்கிதோவரியசன்றென்றெடுத்ததையவிழ்த்துத்தட்டிப்
பாங்குறச்சிறிதுநீங்கிப்பாம்பெதிர்நோக்கவூதி. (ருஅ)

முடியைத்திறப்பச்சிந்திமுன்னெழூந்தோங்கல்போல
நீடிவெம்படம்விரித்துநின்றிடநின்றபேர்கண்
டோடினர்மன்னுநெஞ்சமுடிகினனிறைவனங்க
ணுடுபொம்பாட்டல்காண்பானரியயனமரரெல்லாம். (ஙகூ)

வானெலாந்துன்றிநின்றுவணங்கிடவணங்கின்பாக
னைதோர்குடுமியாவானப்பெரும்பாம்பைநோக்கித்
தானுகந்தழைப்பவந்துதாளின்மேற்றாழ்ந்துதன்றன்
மேனியுஞ்சிறுகிமாந்திவிரிபடங்கூப்பிற்றாங்கே. (சO)

ஒருவருங்குடுமியாரங்கொருவரியரவமாட்ட
வொருமுழந்தாளையூன்றியொருமுழந்தாளைநீட்டி
யொருகரமரவுதூண்டவொருகரமடக்கியாட்டி
யொருதனிமதுரகீதமொருபெருங்குடிலூற்றாங்க. (சக)

வேறு.

நீண்டடிமேல்முகிழ்ச்சுரையினேரிருவேய்ங்குழல்செருகி
யாண்டதிலோரேழுதுளையமர்வித்துப்பொற்றகடும்
வேண்டுமிடமதிற்கட்டிமெழுதானத்திரகூன்றி
மாண்டகவேமிதமுத்திமணியெனவேகோடணிந்து. (சஉ)

பன்மணியுமலர்த்தொடையும்பயில்விருதுமுன்றாக்கிப்
பின்னுமணிபலவணிந்துபிறங்குவளைக்கருவியினை
மன்னவையின்முன்னெடுத்துவாளரவுதனைநோக்கித்
தன்னணியாமணிவாயிற்சார்புறவேதான்வைத்து. (சங)

சூழுமிசைத்தானங்கள்சோதித்தேதாவைநீக்கி
யேழிசையுமேழ்திசையுமின்புறவேயறைவித்துத்
தாழிசையுமுயரிசையுஞ்சாருமிருகுழற்சேர்த்தி
நீழதுளக்கைபற்றிவிட்டுநிறையளவினிசைத்தியக்கி. (சச)

எண்ணரியவலிவணமுமிடைவணமும்வனப்பென்னும்
வண்ணவிசைத்திறமனைத்துமாமதுரமுறுகின்ற
பண்ணமையவங்கமைத்துப்பாவைதருமமுதன்றி
யன்னவிசையமுதளிப்பானரியபெருங்குழலூத. (சரு)

மண்ணுமலையுங்குழைந்தவாகடலேழலையொழிந்த
வண்ணமுறுதீவெம்மைமாறினகால்விசைதவிர்ந்த
விண்ணுமொளிமறுத்தனவேவெய்யவனுந்தண்மதிபோ
னண்ணினனமுன்னிலைக்குலைந்தநடப்பனவுநிற்பனவும். சசு

எவ்வுலகுமெவவுயிருமெங்கைதகுழலிசையோங்கி
வவ்வுதலாலுணர்வுண்டிமறந்துவரும்பகைமறந்து
செவ்விதருமிசையமுதஞ்செவிமடுத்துப்பருகுதலால்
கவ்வையகன்றுயரின்பங்கைமிக்குக்களிதூங்க. (சஎ)

இவ்வண்ணமுயர்திணையுமிழிதிணையுமிசையுமான்
மெய்வண்ணநாகசரர்மேலவனுறுதியுடன்
பைவண்ணவரவுதனைப்பற்றியெடுத்தெறிந்தெறிந்திக்
கைவண்ணவரவாட்டக்கண்டரசன்கொண்டாடி. (சஅ)

இங்குமக்குவேண்டியதேதேதென்றங்கியம்புதலுங்
கங்கைசடைக்கரந்தபிரான்கட்டுரைப்பான்கட்செவியை
யங்கையினால்சுற்றிவிடிலதுசூழ்ந்தவட்டமெலா
நங்களுக்காய்நல்குதிநீநானிலமீதெனக்கேட்டு. (௪௯)

மன்னுமிசைத்துயர்தாரைவார்த்தனன்மற்றதுகொண்டெம்
பின்னன்முடிப்பெருமானும்பேரரவுகரத்தேந்தித்
துன்னுமொளியரவான்மேற்சுழற்றிவிடவதுஞாலந்
தன்னிலொருகாதவிடந்தான்சூழ்ந்தங்கணைந்திடலும். (௫௦)

மற்றதனையுறப்பிடித்துமன்னியநின்னுருவதனை
யுற்றமணரோடுகச்சியூர்க்குறும்பனுடல்மாளச்
செற்றிடுகென்றுயர்குடுமிசெப்பியெறிந்திடவதுமுன்
பெற்றவரவுருவழிந்துபேரெரியினுருவாகி. (௫௧)

குண்டரொடுகச்சியூர்க்குறும்பனையுமடவேண்டி
மண்டியெரிதொழுதேகமன்னனதுகண்டதிசயித்தா
னண்டர்தொழவருகுடுமியாரருளாலனைவர்களுங்
கண்டிடவேகடிகமழ்வான்கற்பகப்பூமழைபொழிந்தார். ()

அந்தரதுந்துமியிசைத்தாரரியயனோடமரர்குழாஞ்
சுந்தரமாமுனிவர்முதற்றொழுதேத்தித்துதிசெய்யத்
வந்தபெருங்குடுமியார்மணிச்சிவிகைமேற்கொண்டு
புந்திமகிழ்வாய்க்கோயிற்புக்கினர்மிக்குறவிரைந்து (௫௩)

புடைநின்றபரிசனமும்போனதுடனதுநோக்கிச்
சுடர்கொண்டமுடிவேந்தன்றுண்ணெனப்பின்றொடர்ந்தேகித்
தடையின்றியாலயத்துட்சார்ந்தவனைக்காணாது
மிடைகொண்டுதுதித்தயரவேயிடங்கொண்டிருந்தபிரான்.

அம்பரமீதங்கமிலானங்கருளிச்செய்கின்றான்
வெம்பரவுவரல்கனவில்விளம்பினமற்றதுவன்றி
நம்பரிவான்வருமரவநண்ணியினிதாட்டினநீ
யம்பரிவாய்த்தருந்தாரையதனைமறவேலென்றான். (௫௫)

நன்றிறைவற்கங்கெழிலுநயந்தினியகரிகாலன்
ஒன்றுபடவண்டமெலாமுடையவனீயாயிருந்து
மென்றனையோர்பொருளாகவிரக்கவழக்கென்னென்று
துன்றுமெழிற்புளகமொடுதொழுதெழுந்துமொழிகுளறி.

ஆடியுணர்ந்துவகைமிகுத்தானந்தபரவசனாய்
நீடியகண்ணீர்சொரியநின்றுருகிநெஞ்சழிழ்ந்து
பாடியுறுபத்தியினாற்படிவமெலாமுடனடுங்கத்
தேடுமிருவர்க்கரியார்திருவருளாற்புறம்போந்து. (௫௭)

ஆயசினப்பணிசூழ்ந்தவட்டமெல்லாமாசில்புகழ்பாசூரி லீசற்கென்றே, தூயசிலைப்புறத்தெழுதிட்டெங்குநாட்டிச்சுழ ற்றியெறிந்திடுமிடத்தைத்துண்டமாக்கி, மேயவிடமாடரவி ன்பாக்கமென்றுமிகுகூறுவீழ்பெரும்பாக்கமென்றும், தீயரவு தப்பிவிழ வுதப்பையென்றுந் திகழும்வால்சிதர்தானமரன்வா லென்பார். (௫௮)

அருகரொடுகுறும்பனையுமீசனேவுமனலேகிப்பொடிசெய்யவந்தனைக்கண்டு, வருபெரியதூதுவர்கள்கூறக்கேட்டுமன்னவனும்வேயீன்றமாசின்முத்தின், பாவுதிருவிளையாட்டையங்கணோக்கிப்பரிந்திறைஞ்சிப்பணடையினுமன்பாமெந்தை கருணைதனக்கொருவர்செயுங்கைம்மாறுண்டோ காணிலொருதலத்தென்றன்கவலைதீர்ந்தே (ருகூ)

அரவமாட்டியசருகக முற்றும்.

ஆகத்திருவிருத்தம். சகூகூ

## திருமலிசெல்வச்சருகக்ம.

இன்னபல்பரிசாற்போற்றியெதிருறவிருந்துபின்னர்
மன்னவன்சிற்பர்தம்மைவரவழைத்தவரைநோக்கி
யென்னையாளுடையகோவுக்கெழில்விமானங்களெண்ணில்
மின்னுமாளிகைபல்வீதியேவவிங்கியற்றுமென்றான் (க)

ஆதியுமீறுமாலோடம்புயன்காணவெங்க
ளாதியோடந்தமில்லாவண்ணறானண்ணிமேவ
வாதியோடந்தந்தாழ்ந்தோங்கணிநெடுவிமானஞ்சாற்றி
யர்தியோடந்தமுற்றும்பொனார்மணியாற்செய்தார் (உ)

அங்கணிமண்டபங்களமைத்தணிதிருந்தியோங்கு
சங்கரிதனக்குமொப்பிற்றமணியவிமானஞ்சாற்றி
யெங்கணும்பரிவாரங்களிருத்தியாலயங்கள்கண்டு
பொங்கெழின்மதிலுஞ்சூழ்கோபுரங்களும்பொருந்தச்செய்து

தேங்குநீரகழிசுற்றுந்திருந்திடத்தொட்டும்பின்ன
ரோங்குயரெயிலும்வாரியுடனினிதமைத்துளாயில்
பாங்குறவியற்றிச்சூழும்பயிறிசைவாயிலூன்கி
ஞுங்குநீள்கோபுரங்களாக்கிநீள்வீதிகண்டு. (௪)

வயிரநீடேண்கள்வெள்ளிமலையெனப்பொதிகைமற்றுஞ்
செயிரறுமரகதமுத்திரமெனற்பொன்போற்சோதி
யியல்சுவர்பளிங்கதாகவெழுநிலைமாடங்காண்டற்
குயர்வுமேழுலகுமெண்ணிலுருவுகொண்டிறல்போலெங்கும்.

பின்னருமேடைகூபம்பெருகுசோபானஞ்செய்தே
பன்மணியன்னசாலைபயில்பலசாலைசூளி
பொன்மணிவேதிமன்றம்யாவையும்புவனந்தந்த
வன்னவாகனனுநாணவமைத்தனனமைந்ததாங்கே. (௬)

அவருளமகிழவேந்தனன்னகரழகைநோக்கி
யுவகைமிக்கன்புகூறவுரியதோர்வகையினாலே
நவமணிக்கலன்கண்முன்னாகவிலருஞ்சிறப்புநல்கி
யெவர்களுமீதுபோற்றவெங்குநாடாக்கினானால். (௭)

அனைத்தையுமுணர்ந்துசேடச்செல்வர்மற்றதுகண்டாடி
நினைத்ததுமுடித்தசோதிமின்மலர்றன்முன்றுன்னி
மனத்துறுகவலைதீர்ந்தோர்மாற்றமிடிவவாழ்வபோற்றி
புனற்சடைமுடியாயென்றுபொருந்தினர்நாதாளன்றே. (௮)

ஆங்கதுகேட்டமன்னனவர்கண்மேலன்புமீடி
யீங்கிவர்பெற்றபேறிங்கியார்பெறவல்லாரென்று
தாங்கருங்கருணையண்ணறன்னருட்டிறமேநோக்கித்
தீங்கில்பூசனைமுட்டாதுசெய்திடச்சிலரைவைத்தான். (கூ)

அந்தணர்முன்னுஞ்சாதியடங்கலும்மிடைந்துமேவித்
தந்தொழினெறியிற்செல்லத்தகுசூடியேற்றித்தான்முன
வந்ததுமினைத்துக்கொண்டுமன்னவனுலையத்து
ளுந்துமாதரவானண்ணியுமையிறைக்குரைக்கலுற்றான். (க0)

வேறு.

வடவரையதனிற்புலியினேறேற்றவந்தனன்முந்தயானி றைவ, கடிதுறச்சென்றுமீண்டிடவேண்டுங்கருணைசெய்தருளெனவருளால், விடைகொடுமனத்தின்வேகமேபோய்ப்பாய்மிகவழிப்பகைகளுங்கடந்து, சடையுடைச்சாத்தாகைத்திருச்செண்டாற்றனிவரைதிரிதறச்சாடி. (கக)

கமலமென்பொகுட்டுப்போலினிதோங்குங்கனகமால்வரையினிற்கவின்கொள், சிமையமேற்புலியும்பொறித்துடன்றிரும்பித்திருந்தியகிடதமாமலையு, மமைவுறுமேமகூடமுமிறைவன்மாகயிலாயமுந்தொழுதோங், கிமையமும்புலியேறேந்துறவேற்றியிலங்கெழிற்கங்கையையடைந்தான். (கஉ)

அடைந்தொளிர்கங்கையங்கரையதனிலாதிசைவாகளுமற்றவர்கள், சடங்கொடுநீதிகண்டுளமகிழ்ந்துசாருமன்னவனடிபோற்றி, விடம்பயில்கண்டன்மேவியிடங்கொண்டவியன்றலத்தவரைர்மேவி, நடஞ்செய்தாள்வணங்கவருதிரோவென்னநயந்தவரிசைந்தினிதெழலும். (கங)

சைவனாவளவன்றேரின்மேற்கொண்டுசெங்கரன்பயிலி டம்பலவு, மெய்விருப்போங்கவணங்கியேபோந்துவேயிடங் கொண்டிஷிதாண்டோன், பொய்யில்பரசூரிற்புரந்தரனமரர் புரம்புகுந்தலெனப்புகுந்தான், றுய்யமாதவருமெம்பெருமா ன்றன்றொண்டருமெதிர்கொளத்தொழுதே. (கச)

ஆதிசைவர்கள்சீர்வளவர்கோன்யாரு மமையிடங்கொ ண்டருளமலன், பாதமதிறைஞ்சிப்பாவகராகிப்பரிவிஞற்பெ ரிதுமுன்பரவி, வேதநாயகன்வாழ்கோயிலுணீங்கிவியன்றி ருமாளிகைவலங்கொண், டோதருமுவகையுற்றினிதிருந்தா னும்பருமிம்பருமுவப்ப. (கரு)

செப்புவூரன்வேதநீதிமேலோங்குந்தில்லைசவனைமுக நோக்கி, யொப்பில்சைவர்களேபரமன்பூசையினுக்குரியரெ ன்ருகமமுரைக்கு, மட்பரிசதனனீங்களேயிந்தவற்புதன்பூச னைக்குரியீர், செப்பிடெொன்னவவர்களுமிசைந்தாங்கின்புடன் பூசைசெய்திருந்தார். (கசு)

மன்னவன்முன்னும்வடவரைக் கேகவலமிடந்தோள்கள்போ ல்வந்தார், நன்னெறிவீரசோழனுக்கருள்சேர்நாவிலங்காதவ ரான, விண்ணவில்சோழகுமாருமலிவவிருவருஞ்சைவருமெ ய்து, முன்னவப்பதிசூழெல்லையானவைகண்மூன்றுபங்காக வென்றளித்தான். (கஎ)

சாற்றுமச்சென்னிதானளித்ததனுற்றுங்களேயுரியவராகி மாற்றருங்காணிமூவரும்பெற்றுவைகினரப்பதிக்காங்கே யேற்றின்மேல்வருவானரவமுன்னூட்டியெய்தியதிருவிளையாட்டைத், தூற்றமாயங்கணுறுதிருச்செல்வமென்றெழியாமையுந்தீட்டி. (கஅ)

ஏதமொன்றில்லாவெம்பிரான்பூசையென்றுமுட்டாது மேனடத்தற்,கோதின்மேற்பாற்போர்வேண்டுமெற்றதனுக்குரியரீக்காட்டுக்கோட்டத்திற், கோதிலாவுடையகுலோத்தமராணகுணங்கொள்வேளாளரென்றுணர்ந்து, நீதியாலவர்க்குமுதன்மையுங்கொடுத்துநிருத்தினனறத்துறைசிறக்க. (கக)

மற்றவர்தம்மிற்குற்றமொன்றில்லாமாதவரொருவனைநாடிக், கற்புடைருத்ரதேவரென்பட்டங்கட்டிநீண்மடமுமுன்கட்டி, யுற்றினிதவற்குமுதன்மையாயிருக்குமுரிமையுங்கொடுத்தனர்கொடுப்பக், கொற்றவன்றனுமத்திரங்கேட்டுக்கோதிலாவுவகைமேற்கொண்டான். (உ0)

புரிவுடைமடாதிபத்தியத்தானம்பரவுமாயேசுரர்க்காக, மருவுசோழனும் பறபுலவமைத்து மற்றவர்யாவரு மகிழ்ந்து, திருமலிசெல்வத்தோடினிதிருப்பச்செய்தினிதெவரையுங்காத்துக், கருணைமன்னுறைநாளப்பதியலகுகோடியபரிசினைக் கேட்கில். (உக)

வேறு.

உயிரதனின்முதலாமெய்யுணர்வுசத்தியுற்றசிவனாலயங்க ளிரண்டுமுள்ளே,பயில்கரணப்பரிவாரஞ்செய்குன் றிஞ்சிபகர் பொறியுள்ளுடல்மாடந்தத்துவங்க, ளியிலியனும்பூதவுடலக ழிகஞ்சமெழிற்றிசைநான்கினுமங்கணிலங்குவாசல், வெயில் விடுகான்முகமாகப்பாசுரோங்குவிரிஞ்சனையேபோன் றினிது விளங்கிற்றன்றே. (உஉ)

வானகத்தைத்தாங்குவபோலோங்குசெய்யமாடமிசை மாடு*மதிகாந்தத்தாங்கே, தானமைத்தசிலாதலஞ்செவ்வரை மீதெங்குந் தங்குசுனைத்தடம்போலத்தயங்குந்திங்கண், மே னிலத்துவரவுருகியருவிபோல வீழ்புனலொப்போங்கவெனி ல்விதுவாழ்சென்னிக்,கோன்முடியிற்கங்கைநதியிழியானிற்கு ங்கொன்மேனிவிளங்குமுயர்மாடமெண்ணில் (உங)

வேறு.

மின்னுவெள்ளியினாற்பொன்னினாற்பளிங்கால்விளங்கு மாடங்களின்மீதே, பொன்மணிநீலமுபச்சையாலமையப்பு னைந்தசூளிகைடாம்பொலிவ, வன்னமுமுவணப்புள்ளுமெவெ ள்ளிபமுமாங்கினிதோங்கிடவேறி, மன்னியவயன்மாலிந்தி ரன்வந்துவைகல்போன்மலிந்துளவனேகம். (உச)

புரந்தரன்முன்னாட்சிறகரிந்ததற்குப்பொருப்பெலாந்தெ ருப்புடையடைந்து, நிரைந்துபூதலத்தேநின்றுவானளவும் போந்துமற்றவன்றனைவெல்ல, வரந்திருப்பாசூரிறைவர்பாற் பெற்றுவானகமதனையேநோக்கிப்,பெரும்படையெழுந்துபொ ரும்படைசனமேற்பிறங்கிமோளிகையெல்லாம். (உரு)

*மதிகாந்தமென்பது-சந்திரகாந்தக்கல்லினை.

இத்தகையமாடமிசைவேதிதோறுமிரணியகும்பங்கணி லையாடிமாடே, யொத்துறுவதுதையவரையதன்மேற்றிங்க ளோங்கருக்கனுங்குறவுசெய்தாலொக்குஞ், சித்தமுறுபுலவி யினிலமைந்தமாதர்சீந்தியபூண்டாதியர்கள்வாரிவீச, மெத்த ளகைவேந்துகடைவிரித்தாற்போலவிளங்கு மெழிலணியிலங் குவீதிதோறும். (உசு)

விளங்குமொளிதுளங்கு திருவீதிதோறும்விரவுயர்மாட த்தங்கண்மீதுமேவி, வளங்கொளியமுழங்கவெழின்மைந்தர் மாதர்வண்டலாடலுந்துருத்தியண்டைவீசும், துளங்கொளிச் செங்குங்குமநீர்த்துவலைதோய்ந்ததூயவுயர்*நாசிகண்மேற்பா ய்வெண்டிங்கள், குளம்படிந்துவெண்மேனிமன்பொன்மேனி கொண்டெழல்போற்சிவக்தேகுங்கோலவண்ணம். (உஎ)

வானேங்குபொன்மணிப்பொன்மாடமீதுமன்னுமெழின்மி ன்னிடையார்மலர்மென்கூந்தற், றேனேங்குகற்பகப்பூஞ்சுரு ம்புண்டங்கட்செலலாமலின்சபாடித்திரியுநாற்கான், மானேங் குசெங்கரத்தாரங்கிக்கண்ணுல் வாகைகொடுவந்துபொடியா கவீழ்ந்த, மீனேங்குகொடியனங்கன்பஞ்சபாணமிக்குலவுமி ளைஞரிடைவீதிதோறும். (உஅ)

மாகமுறவுயருநெடுமாடத்தெங்குமன்னுகுலவன்னன டைமடவார்கிற்கை, தோகைகள்பன்னெடுவ்வரைமேற்றோன் றலேபோற்றோன்றுமகரக்குழைகள்சோதிவீச, வாகமெலா மெழுகிப்ப மற்றுமாதரகிற்புகைசேர்மாளிகைகடன்மேனிற் கை, மேகமுயர்க்கிரிசேரவ்வதன்மேலங்கண்மின்னினங்கள் பலமேன்மேல்விளங்கல்போலும், (உகூ)

---

*நாசியென்பது-வீட்டின்மேல்வாயிலை.

நீடுமதிமண்டலந்தோய்மாடந்துன்றுநிரைத்தநிலைவெண்
கொடிகணெருங்கிநீடி, யாடலுயர்வானநதிபோன்றமாற்*றங்
கணைமூடுவந்தியுகண்மீனொத்த, வீடுதுவென்றும்பருலகத்
துளோரைவிளிப்பதுவும்போன்றவதுவிண்ணோர்கண்டு, மா
டத்தின்சோபானவழிகடோறும்வருவதெனப்பூசுரர்போய்வ
ருவதெண்ணில். (௯0)

வளநிலவுகனகமணிமாடத்தெங்கும்வாள்விடுநற்சாளர
த்துமாசிலாத, கிளரொளிப்பூணெழின்மடவார்வதனந்தோன்
றக்கேடில்புகழ்நீடுகுலகிரிகண்மீதே, யளவின்மதிதங்களங்கம
ற்றுத்தேகன்றுமத்தகமையொத்தனவாங்கமைந்தவண்ண
ங், களவினவானடைகற்கவாராதுவைகிக்காமனடைகற்கவு
றுகாட்சிகாட்டும். (௯௧)

ஓங்குமெழுநிலைமாடத்தெங்குந்தங்குமொண்ணுதலார்
கண்ணுதலாபுகழேபேணி, யாங்கணிதம்பாடுமொலியரங்கி
ன்மாதராடுசிலம்பொலியியங்களங்கணார்ப்பத், தேங்குமொலிக
லைபலபாராட்டுவோர்தந்தீதிலொலிவேதவொலிதெருவுதோ
றும், பாங்குடையபரிகரியாடேரோடோர்ந்துபயிலு மொலி
கடலொலியிற் பரந்ததன்றே. (௯௨)

எங்நிலத்துமுள்ளபொருளெல்லாமங்கணெய்துதலாற்கட
லொக்குமிறவாவின்ப, மன்னுதலாற்சிவலோகமொக்குஞ்
செல்வமல்குதலான்வளமைதிகழளகையொக்கும், பொன்னு
லகமதுவொக்கு மழகுதன்னாற்போகமதானற்போகபூமியொ
க்கு, மின்னவகைசிறப்பளவிலெய்தலாலேயெழிற்பாகுருல
கடியேனென்னென்றோர்வேன். (௯௩)

---

*அங்கணையென்பது-ஆகாயத்தினை.

குங்குமத்தண்புயமைந்தரெங்குமெங்குங்கொவ்வையிதழ்க்கோல்வளையாரெங்குமெங்குந், திங்கணுதற்சேடியர்களெங்குமெங்குஞ்சிந்தைகளித்தின்புறுமேவாரெங்குமெங்குந், துங்கமலர்க்காவணங்களெங்குமெங்குஞ்சோதிமணிவேதிகைகளெங்குமெங்கும், பங்கயச்செந்திருவிருக்கையெங்குமெங்கும்பலர்மழலைத்தீஞ்சொற்களெங்குமெங்கும், (௯௪)

வேறு.

இன்னபல்வளம்யாவையுந்தன்னிடத்தெய்திப்
பன்னுநன்மைகட்குறையுளாப்பயிறிருப்பாசூர்
தன்னில்வேயிடங்கொண்டவர்தன்றிருவருளான்
மன்னர்மன்மனம்வைத்தனன்றிருவிழாநடத்த. (௯௫)

நமலிச்செல்வச்சருக்கமுற்றிற்று.

ஆக திருவிருத்தம்.௫௯௧.

## திருவிழாச்சருக்கம்.

உய்வழியுணர்ந்துசெய்வதற்குரைத்தெங்கும்பருமிம்பருமுவப்ப, வையமொன்றின்றித்துய்யநன்முகூர்த்தமாங்கினிதோங்கிடவமைத்து, மெய்வழிநூலின் விதிச்சடங் கனைத்துமேவுமந்தணர்முறைசெய்யக், கைவரைமுகத்தற்கெய்தவோர்விழா முன்கண்டுளங்கொண்டொருதினத்தில். (௧)

அணிமணல்கொணர்ந்துசடங்கெலாநடத்தியாசில்வைகாசிமாதத்திற், புணர்தருபூசநாளிடைப்பேரிபுலங்கொடாளங்கொடுபுவிவா, னணுகுறவொருபாணுளிறையெழுச்சிநலம்பெறவணங்குதற்கென்றுங், கிணையிலூர்வலங்கொண்டிறைவிடைக்கொடியாங்கேற்றினர்நாற்றிசைபோற்ற (௨)

அன்றுபின்னிறைவரம்பிகைகீள்காப்பணிந்தெழுந்தருளி வந்தமர்ந்து, துன்றெழிற்பொழிலும்வீதியும்வளங்கடுமைதந்தெழப்பல்லணியோங்க,மின்றிகழியங்கள்பற்பலவொலிப்பவே.வுநன்பகலுடனிரவு, மன்றனுமிருநாட்பின்னரும்பவனிவந்தனர்சுந்தரம்பொலிய. (க)

நாலதாநாளிற்பகலெழுந்திரவினவிலொளிபவனிவந்திலங்குமாலுதாழ்சடையர்கோயிலுட்புக்குமற்றொருதினத்திருபோது, மேலதாம்பதியிலாறதாநாளின்வியன்பதிவலங்கொடுவிளங்கு, கோலுமார்முத்தின்பந்தருட்புகுந்துகுலவுமிழ்வீதிசூழ்கொண்டே. (ச)

கொம்பனையார்கள்வாயில்கூடோறுங்கூத்தொடுபொட்டுவாத்தியங்க, ளெம்பெருமானார்கண்டுகேட்டருளியெழில்வினைதார்த்தமதாக,வம்பிகையடியார்தங்களுக்கங்கணருளினல்வேண்டுவதருளித், தம்பெருங்கோயிற்புக்குளமகிழ்ந்து தங்கினர்சங்கரநாதர். (ரு)

கார்கெழும்பருவத்தார்மயில்களிக்குங்காட்சிபோலியாவருங்களிக்க, வேர்கெழுகமழுஞ்சாந்தணிந்தருளியேழதாநாளினிதிலங்கு, மேருவைநிகர்த்துப்பல்லலங்காரமேவுயர்நவமணிக்கனகத், தேரின்மீதேறவுமைகயமுகனுந்திருந்திருந்தேர்மிசைபுகுந்தார். (சு)

கோலவாத்தியங்களெண்ணில்பஃறிறங்கள்குளிர்பெருங் கடலெனவார்த்த, சாலவானைகளும்புரவியந்திரளுந்தனையிட ம்பெறுதுறமிடைந்த, ஞாலமாள்பவருமடியவர்பிறருநன்னி லமீதுபின்னடந்தார், மாலயன்முதலாந்தேவர்கடந்தம்வா கனமேற்புடைவயங்க. (௭)

புடகவமணியின்மாலைகளெங்கும்பொன்னரிமாலைபொற் கடங்கள், கடிமலர்மாலைகவரியின்றொகைகள்கட்டிமேற்பட் டணிந்திலங்கும், கொடியணிகனகத்தேரின்மேற்புவிவான் கும்பிடவூர்வலங்கொண்டு, சுடர்முடிவளவனுடனினிதெவ ருந்தொழவிறைதேரினின்றிழிந்தார். (௮)

இழிதலுந்தத்தமூர்த்திகள்பலருமிழிந்தடிசேவித்தங்கேத்த ச், செழுமணித்தெருவிலசைந்தெழுந்தருளிச்சென்றுயராலை யம்புகுந்து, பழுதிலாபரணமியாவையுமகற்றிப்பகர்திருமஞ்ச னமாடி, யெழிலுறக்கலிங்கமுமையுடன்சாத்தியிறைவிடாயா த்தியதெழுந்து. (௯)

கொடியணிமதிலுளுலாவியோர்தெருப்போய்க்கோயிலுட் புக்கபின்பொங்கு, மிடபவாகனமுய்க்காப்பணிந்துமையோ டெழுந்தொருவீதியின்மீண்டு, பொடியணிமேனிப்புனிதருங் கோயிற்புக்குறமற்றொருதினத்திற், படியெழுந்தருளியந்திசா ந்தணிந்துபாருளோர்விண்ணுளோர்பணிய. (௧0)

பாவையோர்பாலுமிடபமோர்பாலும்பயிறரவிறையெழுந் தருளித், தேவர்கண்முதலாயாவருமெழுச்சிச்சேவைசெய் தினிதடிபோற்றக், காவலனுள்ளங்களிப்பவூருலவிக்கண்ணு தற்பரமனுங்கடவுள், கோயிலுட்புகுந்தபின்புமையூடல்கொ ண்டதோர்விழவணிகூறில். (கக)

பைம்பொனின்முத்தான்மணிகளாற்பட்டாலாசில்வெண் கவரியாலணியா,லும்பர்வானளவுகொடிகளாற்பொன்னினொ ளிர்மணிக்குடங்களாற்சூழ்ந்த, வம்பலர்மலரின்மாலையாற்சி றந்தவளர்நவூடவிமானமொன்றேறி, யெம்பிரானேகவுமைமம ணிச்சிவிகையேறிமுன்சென்றனளினிதே. (கஉ)

நேசமாயெவருந்தொழவியமுழங்க நிமலமார்பதிவலங் கொடுசென், றேசிற்குங்கிளியமிடொடோடொறுமானினைந்தாடி போற்றவர்க்கு, வாசியாங்கறிவாருள்புரிக்கனகமாளிகைவீ திமேல்வருகாற், பூசல்செய்தோடிப்போகியாலயத்துட்புக்கி னடமியனுய்ப்புனிதன். (கஙு)

கொண்டல்சூழ்கனகக்கோபுரமுன்னர்க்குறுகியாங்கினி துறுங்காலைத், தண்டியெம்பெருமானடுவிடையாடிச்சார்து ணியகற்றுவானுகி, வண்டுவார்குழலியூடலாங்ககற்றவன்னது கண்டுளமகிழ்ந்தா, னண்டர்நாயகனுமினிதுளமகிழாவாலயத் துடுசென்றமர்ந்தான். (கச)

ஆங்கதன்பின்புதாண்டவமூர்த்திக்காந்திருக்காப்பணிந்த டைவே, பாங்குறுமொன்பானுள்புலர்காலைப்பாரொலாம்விண் ணெலாம்பரவ, வாங்கருமிடபவாகனர்தமதுமகிழ்திருவனந் தல்சேவித்துப், பூங்கழல்வளவன்படியெழுந்தியதும்பொங்கி யவிருப்பினுற்போற்ற, (கரு)

வானுளார்கடல்சூழ்புவியுளார்புவிசூழ்வான்றிசையான வையெட்டுந்,தானுளார்மகிழேழ்தலத்துளாரன்பாற்றானுளா ர்வானின்மேனுள்ளா, ராணசீரதியாரனைவருமண்ணலருட்டி ருவெழுச்சிசேவிப்ப, மானனையாருமைந்தருங்கூடி வந்தன ரெங்கணுமலிய. (கசு)

இன்னவாறனைத்துமன்பர்களானோர்யாவருமெம்மையா ளிறைவன், மன்னுகோபுரங்கண்டிறைஞ்சினர்போற்றிவாழ்ந் தனமெனமனமகிழ்ந்தார், மின்னெழில் வீதிகண்டுளம்வியந் தார்வேயிடங்கொண்டிடமேவு, மந்திலைநோக்கியன்பினுல்வ ணங்கியாடினர்பாடினரயர்ந்தார். (கஎ)

ஆயவின்பத்துக்களவுகாணுமலணிந்தசீர்மணங்கொள்கொ ன்றையினன், கோயிலும்புறம்பும்வீதியும்விசும்புங்கோபுரமீ துமாமதிளின், ஞாயிலுமாடமாளிகைநிலையுநாடுமெண்டிசை களுமோங்கு, மாயிலுமலர்க்காவனங்களுமெங்குமன்னியே துன்னியாங்கமா. (கஅ)

வளமலிசெல்வத்தளவில்டல்சிறப்பின் மாறிலீக் காட்டி னில்வாழூர். தளர்வில்வேளாளர் தம்பரிவதனுற்றருந்திருச்சாந் தியமுழங்கக், கிளருமாலயத்தைவலங்கொடுசென்றுகேடில் நற்சைவவேடற்கு,நளிகடிசங்கமுதற்பறைகரங்கலவிறிருச்சா ந்தினிதணிந்தார். (கக)

அணிந்தபின்றாபதீபநீளளித்தங்கதனையங்கடைவினில் வழங்கி, வணங்குபொன்வாசிமணிக்கலனிலங்கமாறிலாமகிழ் ச்சியின்மலர்ந்து,பணங்கொள்பாம்பணிவானளவில்வாத்தியங் கள்பறைந்திடயாவரும்பரவ, விணைந்துசாமரங்களிரட்டமா ணிக்கவேமவாசனத்துடனிழலும். (உ0)

வேறு.

சுருதியோங்கினதோத்திரமோங்கினதுறவே
கருதியோங்கினவிதையருமோங்கினகனலு
மொருதியோங்கினசெங்கரத்தான்றனதோங்கு
விருதுமோங்கினவெண்குடையோங்கினமிசையே. (உக)

தருக்கியோங்கினபுண்ணியமோங்கினதவமே
பெருக்கியோங்கினவருட்டிறமோங்கினபிறைநீ
டெருக்கொடோங்கினசெஞ்சடையான்புடையெண்ணி
லருக்கரோங்கினபொற்சுடரோங்கியவனேகம். (உஉ)

முரவமத்தளமிடக்கையோடுடுக்கையாழ்முரசம்
பரவுதுந்துமிகரடிகைதுடியொடுபடகம்
விரவுபேரிகைதக்கைகொங்கெறிமணிவீணை
யுரவுகொம்பொடுபஞ்சவாத்தியமொத்த. (உ௩)

மாடுநேசர்தம்பரிசனம்போற்றிடமாதோ
டாடுந்தண்டின்மீதாலையஞ்சூழவந்தமல
நீடுகோபுரநீங்கினனீங்கிடுங்காலைக்
காடுசூழ்ந்தனசூழ்ந்ததுகொடிகுடைகவரி. (௨௪)

மாடமாளிகைசூளிகைவாயில்கண்மருவ
நீடுகேதனங்கதலிபூகம்பலநிறைத்துக்
கேடிலாமணிமாலைகள்பலவணிகெழுமி
யாடுபேரொளிவீதியினடந்திடுமளவில். (௨௫)

தையலாடொழுதுய்யநின்றுநெடுந்தலைவன்
றுய்யவேணியும்வதனமுமங்கியுந்துடியும்
வெய்யவாலமுநாலுமொட்டியாணமும்விளங்குஞ்
செய்யபொன்னுடையாடையுங்கச்சுமொண்சிலம்பும். (௨௬)

வெற்றிசேர்சிலையைநக்குநீள்புருவமும்விளங்கும்
கற்றைவார்சடைக்கங்கையுந்திங்களுங்கழலு
நெற்றிநாட்டமுமேனியிற்குழைவும்வெண்ணீறு
முற்றதோர்குமிழ்சிரிப்புங்கண்டியாருமுள்ளுருக. (௨௭)

உருகினார்சிலருருவிலைந்தொழிலையுங்கண்ணாற்
பருகினார்சிலரானந்தபாராயணராகி
யருகினார்சிலராகவென்றுத்தமவன்பு
பெருகினார்சிலர்பிரானருட்டிறத்தையேபேணி, (௨௮)

ஆடினார்சிலரண்ணலெங்குற்றனனென்றென்
றோடினார்சிலராரகரவெனமனமுருகி
வாடினார்சிலரனேகமானந்தமிக்கடியிற்
கூடினார்சிலர்சிவர்விழிவெள்ளத்திற்குளித்தார். (உ௯)

இன்னணந்திசையெங்கணுமெய்திறைஞ்செய்திப்
பொன்னடித்தலம்போற்றிசெய்தாங்குடன்போத
வுன்னெனுமுனிப்புலைச்சியோடுறைவிடமாகி
மன்னுசாம்புவர்மண்டபமுன்னுறமருவி. (௩0)

வந்துநின்றுயக்மாமலைமங்கையுந்தானுஞ்
சிந்தையன்புகொண்டோலக்கங்கண்டுபின்றிரும்பிச்
சந்தநீடியகீதவாத்தியத்தொடுசாயா
விந்தமன்னதேர்கோபுரவாயின்முன்மேவி. (௩க)

மாறின்மங்கையர்சுடர்திருவாலத்திமாற்று
நீறுகந்தசெம்மேனியெம்மானுயர்விமல
னூறுநெஞ்சரோடோங்குயராலயத்துட்போ
யீறில்பொன்மணிமண்டபத்தேறினனினிதே. (௩உ)

பின்புபூசனைபுரிபெரியோரடிபேணி
யின்பினாற்பணிமாறியேபணிகளைந்திறையை
யன்பினாலுயர்கங்கைமஞ்சனமினிதாட்டிப்
பின்குலாவெழில்வெண்கலிங்கமரைவீக்கி. (௩௩)

அலங்கணீறுபூண்யாவையும்வெண்பொடியணிந்து
நலங்கொளாகமவிதிவழியாவையுநடத்திப்
புலங்கொடாள்பணிந்தியாவருமன்பொடுபோற்ற
விலங்குமெம்பிரான்றிருவுலாப்பத்திமீதெழுந்து. (௩௪)

ஊடிகச்செழுங்கோபுரமுன்னுலாயதன்பின்
நீடுவீதியிற்சென்றுநேர்மீண்டுபார்நெருங்கி
மாடுபோற்றிடவந்துமையாளொடுமகிழ்ந்து
பீடுசேர்திருக்கோயிலுட்புக்கனன்பிறங்க. (௩௫)

மாசிலாதசீர்மாமறைத்தாளிணைவருட
வீசனுங்கினிதமர்ந்தனனருளுடனிப்பா
லாசிரண்டியுங்காளியும்பூசைகொண்டமர
வேசில்வைகளைப்போதுவந்தெய்தினவினிதே. (௩௬)

வேறு.

பொங்கொளியமளிநீங்கிப்புனிதனுங்கனிகொள்செவ்வாய்
மங்கையுந்திருவனந்தன்மருவியோர்மண்டபத்திற்
றுங்கமஞ்சனமங்காடிச்சுடர்மணிச்செம்பொனுடை
யங்களாசாத்திச்சென்னிக்கணிமணியாடைசாத்தி. (௩௭)

இலகணிமணிப்பொற்றோடோங்கினமணிப்பதக்கஞ்சாத்தி
விலையரிதாகுஞ்சோதிவியன்மணிக்கடகஞ்சாத்திப்
பலமணியொட்டியாணம்பரிபுரமுந்தாளங்க
ளலகிலாபரணமற்றோங்கவவயவமமையச்சாத்தி. (௩௮)

மின்மணிவடிவமெங்கும்விணை தருகலவைசாத்திப்
பன்மலர்மாலைசாத்திப்பயிறிருநீறுசாத்தி
மன்மணிவட்டப்பூம்பொன்வாசியின்மருங்கைச்சாத்தி
நின்மலவணிகள்பினனுநிறைவுறவினிற்சாத்தி. (௩௯)

எம்பெருமானுமங்கணெழுந்தினிதுலவியோங்கு
செம்பொனாலயஞ்சூழ்வந்துதிருவளர்சாலைமேவி
யம்புயனனையசெல்வத்தந்தணர்பொறிகவேவித்
தம்பெருவிருப்பாற்போற்றத்தையலுந்தாமும்போந்து. (௪0)

கொடியணிந்திலகுசெம்பொற்கோபுரவாயினீங்கி
யடியரும்பலருங்கண்டேயரகரவென்றுபோற்ற
முடிவில்பல்லணியினீடுமுகிலுறுமொடவீதி
பொடியணிபவளமேனிப்புரிசடைபுராணன்போத. (௪க)

இலகுவிண்ணோர்கள்மண்ணோரேத்தொலியுடனுங்கெண்ணி
பலவியங்கடலினார்த்தபயின்மணிக்குடைசதுக்கங் [ல்
குலமணிநிலவுகொற்றக்குடைகள்சேராடிபீலி
யலகில்பல்கொடிகள்வீதியடங்கலுமிடைந்துசெல்ல. (௪உ)

அவ்வயினரவமாட்டுமேற்புதன்வந்தான்காளி
கவ்வையுற்றமரமன்றூற்கடுஞ்சிறைவைத்தான்வந்தா
னிவ்வுலகுய்யவேயினிடங்கொண்டபெருமான்வந்தான்
றிவ்வியமூர்த்திவந்தானென்றனசெம்பொற்சின்னம். (௪௩)

விடம்பயில்கண்டன்வந்தான் வியன்றிருமாற்கு முன்னந்
தொடர்ந்தவல்வினைகணீக்கிச்சோமனுக்கருள்வான்வந்தா
னடைந்தமங்கலனை முன்னமாண்டருள்பெருமான்வந்தான்
மடந்தையோர்பாகன்வந்தானென்றதுவார்பொற்றுளை சச

இவ்வணந்தாரைசின்னமெங்கணுமுழங்கவூதி
மைவணக்கண்டத்தண்ணல்வருதிருப்பவனிகாண்பான்
மெய்வணத்திருநூற்றிருபான்விளங்குமண்புவனவேந்த
ரெவ்வமிலயன்மான்மூன்றுமெண்டிசைக்காவலாளர். (சரு)

மெத்திரும்பாரிடங்கள்வியன்கணநாதர்கோலச்
சித்தர்கின்னரரியக்கர்திருந்தியகருடரோங்கு
வித்தியாதரர்கள்மூன்றுமிகுபதினெண்கணங்கள்
பத்திகொடினிதுபோற்றிப்பரவினரெங்குமெங்கும். (சசு)

மோனிகளன்பர்யோகர்முயலாதவிரதருண்மை
ஞானிகள்பரமஞானர்கவிற்கலைஞானர்நீற்று
மேனியர்தத்துவஞானர்வியன்மறைஞானசீலர் [ர்
தேன்மொழிமடவார்மைந்தர் திரிதண்டரொன்றுந்தொண்ட

ஏவரும்வணங்கிழையத்தவேழிசைவாணர்சூழ
நாவலர்புகழ்ந்துபோற்றநான்மறைமுனிவர்வாழ்த்த
மூவுலகத்துளோருமுன்பணிந்தின்பமேவ
வாவியிலினியவெங்களண்ணலைச்சூழ்ந்துகொண்டே. (சஅ)

ஆங்கினிதோங்குசெல்வவந்தணர்*குணலைகொண்டார்
தீங்கில்சீரடியார்யாருஞ்சிவிறியிற்பனிநீர்விட்டார்
பாங்குபஞ்சாமிட்டுப்பத்தர்களேத்திச்சூழ்ந்தார்
வீங்கொளிமணிச்சார்ந்தாற்றிவீசிமென்மடவார்போந்தார்.

உருகுளத்தொண்டரொண்ணிலுழைக்கலங்கொணடுவந்தார்
விருதுகள்புகழ்ந்துபொன்னின்வேத்திரக்கரத்தோர்சென்று
ரருளுடைப்பெரியோர்தூயவணிமணிக்கவரியிட்டார்
கரிமதக்கரிகாற்சென்னிகருணையிற்களிசிறந்தான். (ருo)

இன்னபல்சிறப்பினோடுமெண்ணில்பல்வளத்தினோடும்
பொன்மலிகும்பம்பாலிபொலிந்துறுவீதிமீதே
யென்னையாளுடையநீதனெழுந்தருள்காலைதன்னி
லந்நிலைமங்கைமார்கண்டாங்கினிதுறையலுற்றார். (ருக)

செஞ்சடையாடக்கையிற்றீயொடுதுடியுமாட
வஞ்சிலம்படிமீதாடவாடுதல்பாரீரென்பார்
பஞ்சின்மெல்லடியினாளோர்பங்கினரிவர்தாமென்பார்
நெஞ்சுண்மால்கொண்டுநாணநேர்தொழுதயர்ந்துநிற்பார்.

ஒண்ணுதலாரிற்கங்கையுமைதவமுயர்ந்ததென்பார்
கண்ணுதலிவனைக்காணக்கண்களுங்கண்ணேவென்பார்
நண்ணினார்க்கின்பமீவானகைமுகம்பாரீரென்பா
ரொண்ணிலார்புரங்களட்டவின்னகைகாணுமென்பார். (ருஙு)

*குணலையென்பது-கூத்தினை.

ஆயினுமிவர்தாமூவர்க்கருளினவமலனென்பார்
வாயினாற்சொலவுரித்தோமற்றிவர்கருணையென்பார்
தாயநுந்தந்தையாருந்தாமவர்க்கில்லையென்பார்
நாயனார்க்குண்டோவென்பார்காமினியுய்ந்தோமென்பார்.

மாடமாளிகைகண்மீதேமன்னிவேறிணையக வி
நாடருநாணமச்சம்பயிர்ப்பிவைநழுவநிற்பார்
நீடுகைவளைகள்சோரநிறையழிந்துருகிநிற்பா
ராடையோடளகஞ்சோர்வாராயினராளவிலார்கள். (ருரு)

இங்ஙனமடவார்கூட்டமெய்திடவெம்மையாண்ட
பிஞ்ஞகன்றிருவனந்தல்பெருந்திருப்பவனிபோற்று
மஞ்ஞையைப்புறங்கொள்சாயன்மாதராலத்திமாற்றி
மெய்ஞ்ஞெறிக்கோயில்புக்குமேவியாங்குற்றபின்னர். (ருசு)

மற்றுநற்றிருவிழாவின்வந்தடிவணங்கினோர்பா
லுற்றமாமலத்தையீசனுறுதுகள்செய்தலாகப்
பொற்றிருஞ்சுண்ணமன்பிற்பொருந்தவாங்கிடித்தணிந்தே
யெற்றுநீர்பாசியாற்றுக்கிறையவனெழுந்துபோத. (ருஎ)

யானைகள்கொடிகண்மிக்கவிவுளிசூழ்குடைகளெண்ணில்
சேனைகள்கவரிகாடுதிசையெலாமிடைந்துசெல்ல
வானநீர்ப்பாசிநீரினருள்புரிபிராட்டியோடுந்
தானணிந்தொளிர்செஞ்சாந்தந்தண்பொடிபணிநீர்சிந்த (ருஅ).